உ

கடவுள் துணை.

ஸ்ரீமகாபாரதவிலாசம்.

சூது - துகிலுரிதல்.

இஃது-மைலம்

சுப்பிரமணியசுவாமிகளாற்

பார்வையிடப்பட்டு.

சென்னை - இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

சென்னை, ஆச்சாரப்பன் தெரு, நெ-34.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ மகாபாரதவிலாசம்.

சூது - துகிலுரிதல்.

விநாயகர் தோத்திரம்.

வெண்பா - இ-ம் - சங்கராபரணம்.

ஒருமகாபாரதத்தி லுள்ளபடி நாடகமாய்ச்
சூதுதுகிலுரிதல் சொல்லவே - ஆதரவாய்த்
தஞ்சமென் றிரங்குமெங்கள் தாம்வேழமாமுகனார்
கஞ்சமஞ்சஞ்செஞ்சரணங் காப்பு.

முருகர் தோத்திரம்.

விருத்தம் - இ-ம் - ஆனந்தபைரவி.

சரவணபவனேபோற்றி சங்கரன்மகனேபோற்றி
அரிதிருமருகாபோற்றி ஆறுமாமுகனேபோற்றி
திருவளர்க்குகனேபோற்றி செங்கைவேலவனேபோற்றி
கரிமுகனுக்கிளையவெங்கள் கந்தனேபோற்றிபோற்றி.

சிவபிரான் தோத்திரம்.

விருத்தம் ஆனந்தபைரவி.

திங்கள்செஞ்சடையாய்போற்றி திரிபுரமெரித்தாய்போற்றி
மங்கையோர்பாகாபோற்றி மான்மழுதரித்தாய்போற்றி
துங்கவெள்விடையாய்போற்றி துலங்குமுக்கண்ணாபோற்றி
எங்கள்நாயகனேபோற்றி ஈசனேபோற்றிபோற்றி.

ஸ்ரீமகாபாரதவிலாசம்.

மகாவிஷ்ணு தோத்திரம்.

விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஆரணப்பொருளேபோற்றி அகிலநாயகனேபோற்றி
பாரளந்தவனேபோற்றி பாண்டவர் தூதாபோற்றி
வாரணமழைத்தபோது வந்துகாத்தவனேபோற்றி
காரணவஸ்துவான கண்ணனேபோற்றிபோற்றி

உமையவளுக்கும்-இலட்சுமிக்கும்-சரஸ்வதிக்கும்

தோத்திரம் விருத்தம்-இ-ம்-காம்போதி.

திருவளருலகம்போற்றுஞ் சிவகாமித்தாயேபோற்றி
மருமலர்க்கமலமேவு மாலட்சுமியேபோற்றி
மருமலர்க்கலைகள்சொல்லி மகத்தானபாரதாக்கு
தருஞ்சரஸ்வதியேயுந்தன் றாளிணைக்கமலம்போற்றி.

தரு-தோடையம்-இ-ம்-ஆனந்தபைரவி-அட தாளசாப்பு.

விநாயகர் தோத்திரம்-தரு-இ-ம்-பைரவி.

நீதாசரணம் விநோதாசரணம்
ஆதாரமாங்கண நாதாசரணம்
தீதகலவெலாம விந்தத்தமிழுக்குத்
திருவருள்செய்து திலங்காக்கவேணும்
சிவசங்கரி யுலகங்களை யுதவுந்தனி யுலகந்தருள் (நீதா)

சுப்பிரமணியா தோத்திரம்.

ஐய்யாசரணமென் னையாசரணம்
மெய்பானவேல்முரு கையாசரணம்
ஒய்யாரமாமயி லேறிவந்தேயெமை
யுரைக்குந்தமிழ்க் குதவிசெய்யவேணும்
ஒருமாங்கனி யதுகொண்டிட உலகந்தனை வலம்வந்திடும் (ஐய்)

பரமசிவன் தோத்திரம்.

ஏகாசரணம் விவேகாசரணம்
வாகானதோகையர் பாகாசரணம்
பாகானவிந்தத் தமிழ்க்குதவிசெய்யவேணும்
பரிசிக்கவேணுங் கிருபைபாலிக்கவேணும்
பணியுந்திசம் மதியும்புன லுந்தாங்கிய சடைதங்கிய (ஏகா)

உமையவள் தோத்திரம்.

மாலிசரணம் கபாலிசரணம்
சிவிகிசாவத்திரி சூலிசரணம்
நாலிலக்கணிலிந்த நாடகம்பாடவென்
ஞானிவிருக்குக் நன்மைதரவேணும்
நவகண்டமுமதிரும்படி நடனம்புரி பதபங்கய (மாலி)

விஷ்ணு தோத்திரம்.

நந்தாசரணம் முகுந்தாசரணம் கேள்.
விந்தாசரணா விந்தாசரணம்
எந்தாவிதறகொரு விக்கினமுமில்லாம
லென்னருள் தந்தே முன்னிற்கவேணும்
இடமங்கைய ருடன்மங்கள மடர்கின்றிடும் (நந்)

சரஸ்வதி தோத்திரம்.

வாணிசரணஞ்சொல் வேணிசரணமிந்தி
ராணிசேர்புத்தக பாணிசரணம்
வாணுதலாளே சரஸ்வதியேயிந்த
வண்டமிழ்சொல்லநல் வாக்குத்தரவேணும்
மலர்தங்கிய பிரமன்றிரு வுளமிங்கிர்த முடனேமகிழ் (வாணி)

தரு-இ-ம்-அசாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

மங்களஞ் செயமங்களம் சுபமங்களம்.

அநுபல்லவி.

கங்கையிளம்பிறையுந் தங்குஞ்சடைமுடியும்
தேசுலாவுநகர பரணமுங்கொன்றையும்
வாகவுமெருஞ் ஞானதிபனென்று
சித்தர்கள்தவ முத்தர்கள்தத்துவ
சித்தர்கள்பரி சுத்தர்கள்பரவிய
திரைவிலாச மெய்யோர்க்கும்
பலிமகளேனுமா துடையாட்கும் (மங்க)

சரணங்கள்.

செகமேல்வாருமையா பனித்துங்
கலமுமல்வனாஞான மனிக்கும்

மருதேசிகனாக வீருக்கும்
குருநாதன்செவ்வேள் முருகர்க்கும்
சிறுபிறைநுதல்குற மகள்வள்ளிக்கும்
சுரர்பதிதருமகள் தெய்வானைக்கும்
திசைமுகனுக்குங் கலைமகளுக்குங்
திருமகளுக்கும் முயல்வண்ணனுக்கும்
சிருலாவுநாடல் துகிலுரிதலைப்
பேருலாவுநன் னாடகமுரைசெய்த
செந்தமிழ்க்கவிராமச் சந்திரன்றனக்குஞ்
சந்தமாய்ப்பாட மனங்கொண்டவர்க்கும்(மங்க)

விநாயகர்வரும்பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

அந்தமுமாதியாகி யருமறைப்பொருளுமாகி
விந்துவுநாதமாகி மெய்ப்பொருடானேயாகும்
இந்துவேணியனளித்த விறைபொருமுதல்வனான
கந்தமாமலர்த்தாள் திவ்ய கணபதிவருகின்றாரே.

விநாயகர்வருகிற தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

தர்மவிநாயகர் தானிதோவந்தார் அருள்புரிந்திட
தர்மவிநாயகர் தானிதோவந்தார்.

அநுபல்லவி.

நன்மைசேர்முத்தியாலுப்பேட்டையில்
வன்னியவீதியில் வந்துகுடிகொண்ட
வல்லபைப்பெண் மணவாளாநல்ல
கல்விதருங்கிருபை யாளாஎழில்
வாகனத்தினில் மேவுமுக்கிய தேவருக்குமே யாவர்க்குநல்
வளமிகுந்நல்ல கலைபயின்றிட
வுளமிதங்கிநன் னருள்சுரந்திந்திதோ(தர்ம)

சரணங்கள்.

மங்கையுமைபருளங்குச பாசா கருணாவிலாசா
மல்லன்வருகுழல் வல்லபைப்பிராணேசா
தங்கும்பலகலைதந்தருணேசா கோடிசூரியப்பிரகாசா
கஞ்சமென்றோடிட நெஞ்சந்தனில்வாசா

பொங்கஜமுஞ்சூரனை வாட்டிய
பூரணவெற்றியினிற்பாரதந் தீட்டிய
ஐங்கரனேநல்லமுதுசெய் ஊட்டிய
ஔவைக்குக்கைலாயத்தைக் காட்டிய
ஆகமெய்ச்சதுர் வேகமெய்ப்பொரு
ளாயிருப்பவர் தூய்சிறப்பவர்
அங்குமிருப்பவர் இங்குமிருப்பவ
ரானைமுகத்தவர் மோனமிருத்தவர். (தர்ம)

கட்டியக்காரன் வருகிற பொதுவிருத்தம்.

இ-ம்-சங்கராபரணம்.

மட்டில்லாகீர்த்திபெற்ற மதிகுலக்கொழுந்தோனித்த
அட்டதிக்கெல்லாங்கார்க்கு மடல்பெருமரசர்கோமான்
துஷ்டரைக்கார்க்கும்வீரன் துரியன்மகாராசன்வாசற்
கட்டியக்காரன்வந்து களரியிற்றோன்றினனே.

கட்டியக்காரன்-வருகிற-தரு-இ-ம்-பீசரதாளம்.

பல்லவி.

வாசற்படிகட்டியக்காரன்வந்தான்
ராஜன்துரியோதன ராசகெம்பீர

அநுபல்லவி.

தங்கிப்பொன்னுருமாலை | துலங்க-மை கயிற்
சமுதாடுபளபளவென் | றிலங்க-வாகு
வலயங்களிருதோளில் | தரித்து-சரிகை
வஸ்திரம்வல்லவாட்டு | விரித்து (வாசற்)

சரணங்கள்.

வலுவாய்சல்லடந்தட்டி | வரிசையாய்கச்சைகட்டி
வலதுகைமீசை | முறிக்கிவாத
மறுமன்னர்பயப்பட | வுருக்கி
மண்டலாதி பதிகள்வந்தெதி | ரடிபணிந்திடவிறன்மிகுத்துள
மதிகுலந்தனில் வருதுரந்தர | அரியனென்னுமதிபன்வந்திடு
சமயமிதுவெருசமயமிதுவென சபையிலனைவரும்புகழுமிதமுள. ()

(வ-ம்.) அகோதெப்படி யென்றால் ஏகச்சக்ராதிபதியான சந்திரவம்ச உத்தாரகனான இராஜபயங்கர ராஜகெம்பீர ராஜமார்த்தாண்ட ராஜபரமேஸ்வர ராஜாதிராஜனான துரியோதனமகாராசன் கொலுவுக்குவருகிறார் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் காலதேசத்துராஜாக்களெல்லோரும் எச்சரிகை ஆரடா கொலுவாசற்காரா சீக்கிரமாய் கொலுவை அலங்காரம் பண்ணும் பிள்ளாய்.

பொது விருத்தம்.

ஒலிகடல்சூழுகின்ற உலகமெலாமொருகுடைக்கீழ்
இலகவேயாகிவல்ல ராஜாதிராஜனான
வலுமையில்மிகுந்தவீரன் மகாதிரியோதிரன்றன்
குலவியவழகின்மிக்க கொலுவுக்குவருகின்றானே.

(வ-ம்.) அகோதெப்படியென்றால் பாண்டவர்கள்செய்த இராசசூய யாகத்திற்கு திரியோதனாதிகள் போயிருந்தபடியினாலே அவர்களிடத்திலே நடந்த சிறப்புகளனைத்தையும் திரியோதனமகாராசன் பார்த்து பொறாமையினாலே மனந்தளர்ந்து அஸ்தினாபுரம் வந்துசேர்ந்து எந்தவிதத்திலேயும் பாண்டவர்களைமோசஞ்செய்து அவர்களுக்குள்ள இராச்சியத்தையும் செல்வத்தையும் பறிக்கவேணுமென்று ஆலோசனை செய்யும்படியாய் திரியோதனமகாராஜன் கொலுவுக்குவருகிற விதங்காண்க.

திரியோதனாதிகள்-வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

இராஜாதிராஜன்மகாராஜன் திரியோதிரன்
இராஜமார்த்தண்டன்வந்தான் கொலுவிருக்க

அநுபல்லவி.

பேசும்வீஷ்மன்விதுரன்சகுனிகர்னன்துற்சாதனன்
மாசிலாத்துரோணர்கிருபன் அஸ்வத்தாமன்மெய்ப்பாய்வர ()

சரணங்கள்.

ஏகபூச்சக்கிரக்குடை கவிக்க
எதிரெதிமன்னரும் குவிக்க
வாசையரவக்கொடி பிடிக்க
வைரியர்வெற்றிகளைப் படிக்க
தோகையர்வெண்சாமரம் வீச
சொற்கடிகையர்திதிகளைப் பேச
மோனமாதரால மேந்த
மொய்குழலார்காளஞ்சி யேந்த
போகதேவேந்திர னென்ன
போகராசேந்திர னென்ன
பூரிகைபேரிகைகாகசராதிகள்
நீடியவார்கடல்போலொலிமீரவே

2

தப்பார

அந்தரமின்றெதிர்சந்தர மென்றிட
 முந்திவதந்தமி பென்றிட
பம்பையதிர்ந்திடசங்கு முழங்கிட
 இக்கிர்தமுடன்மங்களகரமுடன் (இரா)

கட்டியக்காரன் எச்சரிக்கை.

ஆசிரிய விருத்தம்.

மணிமகுடமன்னவர்களிருபுறநெருங்கவே
 மருமலர்வணங்கிவரவே
வயிரியர்கள்விருதுகள்படிக்கவேவில்லமாதர்
 வரிசைநடனம்புரியவே
அணிகொண்டகுதிரைப்பெரும்படைநெருங்கவே
 ஆனையின்திரள்சூழவே
அமைச்சர்களிணங்கவேபிரதானிசேனுபதிக
 ளங்கங்குனிந்துவரவே
பணிவிடைக்காரருந்திருவடிவணங்கவே
 பார்த்திபர்வணங்கிவரவே
பாவையர்கள்வெண்சாமரங்கள்தலைமீசவே
 பம்பைதுந்துமிகுமுறவே
திணிகொண்டநவரத்தினசிம்மாசனக்கொலுவில்
 சிருடனேபரசுசெய்ய
தீரன்துரியோதனமகாராஜன்வருகிருர்
 ஜெனங்களே எச்சரிக்கை.

துரியோதிரன் கடவுளைதுதிக்கும் விருத்தம்.

தக்கவேயண்டரண்ட சராசரமெலவயுந்தந்து
மிக்கவேயளித்துகாக்கு மேன்மைமுத்தொழில்நடாத்தி
பக்குவமுடையஞான பாதத்தைபெற்ருேர்களெல்லாம்
கைக்கனிபோல்விளங்கும் கடவுள்செஞ்சரணம்போற்றி.

துரியோதிரன்சொல் விருத்தம்.

பஞ்சபாண்டவர்களுக்குப் பாதிநாடளித்ததாலே
மிஞ்சினர்கெருவங்கொண்டார் வீரமும்பலமும்பெற்ருர்
எஞ்சலில்லாதராஜசூய யாகமுஞ்செய்தாரின்னக்
கொஞ்சநாட்செலுமிந்த குவலயமுழுதுங்கொள்வார்.

(வ-ம்) கேட்டீர்களோ இராஜஇராஜாக்களே பாண்டவர்களுக்கு நாம் பாதிநாடு கொடுத்தபடியினாலே கெர்வத்திலும் வீரத்திலு செல்வத்திலும் மிஞ்சிப்போனார்கள் ஒருவராலுஞ்செய்யப்போகாத

இராஜசூயயாகமுஞ் செய்தார்கள் இன்னங்கொஞ்சநாள்போனால் இந்த உலகமெல்லாம் இவர்களே கைக்கொள்வார்கள் இனிநானென்னசெய்யப்போகிறேன் இராஜாக்களே.

கர்னன் திரியோதிரனுக்குச்சொல்விருத்தம்.

மன்னவன்தருமரராஜ மகாராஜன்சூயயாகம்
இங்கிலந்தனிற்செய்தாற்போ லெவர்செய்துகீர்த்திபெற்றார்
இன்னுமங்கவர்க்கொப்பாக வொருவருமுலகிலில்லை
தன்னுமிவ்வுலகையெல்லாந் துஜங்கட்டியவரேயாள்வார்.

(வ-ம்.) கேளுந்திரியோதன மகாராசனே தருமராசன் செய்த இராசசூய யாகத்தைப்போல் ஆர்தான் செய்யப்போகிறார்கள் அவர்களுக்குச் சமானமாக யாரைச்சொல்லலாம் இன்னஞ் சிலநாளைக்குள் உலகமெல்லாமவர்களே யாள்வார்கள்போலத் தோற்றுகிறது உங்கள் நிர்வாகமிப்படியிருந்தா லென்னசெய்யலாந் துரியோதனமகாராஜனே

சகுனி திரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

எருமுமவனினைந்தா லெருதுமச்சினங்கொண்டாடும்
பாரில்தேள்கொட்டாவிட்டால் பசர்பிள்ளைபூச்சியாகும்
கூறிபசிக்கஞ்சும்மா குகைக்குள்ளேபொடுக்குக்கண்டால்
வீரியஞ்செலுத்தும்யானை மேல்விழுந்தடித்திடாதோ.

(வ-ம்.) கேளும் என்னுடைய மருமகனான திரியோதனமகாராஜனே உழுகிறவன் இளப்பமானால் எருது மச்சினங்கொண்டாடாதா ஒடுங்கியிருந்தால் பாண்டவர்களடித்தது ஆட்டந்தான் பிடித்தது பெண்டுதான் திரியோதனமகாராஜனே.

துற்சாதனன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

செழிப்புடனவர்பெற்ற செல்வமும்புகழுங்கண்டு
பழிப்புடனீயிருக்கப் பருவமென்றெண்ணிப்பார்த்தால்
வழிப்படுங்கதிரோன்முன்னே வன்பதம்மழுங்கினாற்போல்
இழிப்படுஞ்சந்திரன்போ லிருக்குதுன்செங்கோலண்ணே.

(வ-ம்.) கேளும் அண்ணாவே தருமபுத்திரர்கள் பெற்றிருக்கிற செல்வத்தையும் கீர்த்தியையும் பார்த்தால் பகற்காலத்திலே சூரியன் முன்னே மழுங்கிப்போன சந்திரன்போலிருக்கிறது உன்னுடைய செங்கோலண்ணே இதற்கென்னசெய்யலாம்.

திரியோதனன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்.

ஆமிதுமெய்தான்தம்பி யடங்கிநாமிருந்தோமானால்
பூமியைமுழுதுந்தர்ம புத்திரனேயரசுசெய்வான்
தாமதஞ்செய்தாற்பின்பு சாதிக்கக்கூடாதந்த
நேமமாயவர்கள்செல்வம் நீக்கவோருபாயஞ்சொல்வீர்.

(வ-ம்.) ஆம் துற்சாதனா இனிநாம் சும்மாயடங்கியிருந்தால்பூமியையெல்லாம் பஞ்சபாண்டவர்களே யாள்வார்கள் இனிநாம்சும்மாயிருக்கலாகாது தாமபுத்திரர்களை எந்தவிதத்திலேயும்வெல்லும்படிக்கு ஒரு பலத்தைத் தேடிச்சொல்லுங்கள் பார்ப்போம் சபையோர்களே.

துற்சாதனன் திரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

குஞ்சரங்குதிரைத்தோராற் கொல்வதற்குபாயமுண்டு
நஞ்சினையூட்டிக்கொல்ல நமக்குள்ளேசமர்த்துமுண்டு
வஞ்சனையாலேகொல்ல மாமனார்சகுனியுண்டு
பஞ்சபாண்டவரைக்கொல்ல பாரமோசொல்வாயண்ணே.

(வ-ம்.) கேளும் அண்ணாவே யானையின்பேரிலும் குதிரையின்பேரிலும் ரதத்தினபேரிலும் யேறிக்கொல்வதற்கு அனந்தமுமு[illegible]ண்டு வஞ்சனை துரோகஞ் செய்துக்கொல்லுகிறதற்கு சகுனிமாமனுண்டு பாண்டவர்களை வெல்லுகிறது வெகுபெரியதாய் சொல்லவேண்டாம் அண்ணே.

கர்னன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்.

ஒருகணையாலேயந்த உயர்பஞ்சபாண்டவாளை
கருவறுத்திடச்சமர்த்தன் கர்னனனிருக்கும்போது
மருவென்னமாமனென்ன வஞ்சனைவிஷங்களென்ன
பருவமில்லாதவார்த்தை பார்த்திபன்முன்னேசொன்னாய்.

(வ-ம்.) கேளுந் துற்சாதன மகாராஜனே இந்த ஒருகணையினால் பாண்டவர்களை கருவறுத்துப்போட சமர்த்தனான கர்னனிங்கேயிருக்க வஞ்சனையினாலும் விஷத்தினாலும் உபாயத்தாலும் கொல்லலாமென்று உபசாரமில்லாத வார்த்தையை இந்தஇராசசபையிலே பேசலாமோ துற்சாதனமகாராஜனே.

சகுனி கர்னனுக்குச்சொல் விருத்தம்.

[illegible]மக்கண்துரோபதைக்காயன்று வளைத்தவில்லடிப்பட்டங்கே
[illegible]க்கதோர்சவித்துப்பாசில் வீழ்ந்ததுமறந்திட்டாயோ

அக்கணம்விஜயன்செய்த ஆண்மையைப்பார்த்திருந்து
வெட்கமில்லாமல்கர்ண வீண்பேச்சுபேசலாமோ.

(வ-ம்) கேளும் கர்ணமகாராசனே ஒருதுரோபதைக்காக வில்லை வளைக்கப் போகும்போது அந்த வில்லினாலே அடிப்பட்டுகீழேவிழுந்து உதைத்துக்கொண்டது மறந்துவிட்டையா அந்தட்சணத்திலே அர்ச்சுனராசன் தன்னுடைய இராணியைச் செலுத்தினதைப்பார்த்திருந்தும் வீண்பேச்சை பேசலாமோ கர்ணமகாராசனே.

சகுனி திரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

தப்புறுபாண்டவாளை சண்டையால்வெல்லநம்மால்
இப்பிறப்பிலுமாகாது யெழுபிறப்பிலுமாகாது
அப்புறுகபடவஞ்ச சூதினால்வெல்லலாகும்
ஒப்புறவிதல்லாமலொன்றிலும் வெல்லமாட்டோம்.

(வ-ம்) கேளும் என்னுடைமருமகனுன துரியோதனமகாராஜனே அந்தபாண்டவர்களைச் சண்டைசெய்து வெல்ல இப்பிறப்பிலுமாகாது இன்னமிப்படி யேழுபிறப்புபிறந்தாலும் வெல்லக்கூடாது வஞ்சனைபண்ணி சூதினாலே வெல்லலாமேயல்லாமல் மற்றப்படிஒன்றிலும் வெல்லமாட்டோம் என்னுடைய மருமகனுன துரியோதனமகாராசனே.

துரியோதனன் சகுனிக்குச்சொல் விருத்தம்.

ஆஆமாமாமெய்தான் அப்படிதானேசெய்வோம்
மாமாசொன்னதுவேபுக்தி மாமாவென்னருகேவாரும்
எமாத்திருதினாலே யெப்படிவெல்வோமந்தச்
சாமார்த்தியமின்னதென்று சட்டமாயுரைசெய்வீரே.

(வ-ம்) ஆ-ஆ-ஆ-ஆ-அதுவேசரி அதுவேசரி தரும் தரும் அதுவேபுத்தி ஒப்மாமா என்னருகேவாரும் சூதாடி வெல்வோமென்று சொன்னீரல்லவா அந்த உபாயத்தை நன்றாய்த் தெரியச்சொல்லவேணும் என் மாமாவே.

சகுனி திரியோதிரனுக்குச்சொல் விருத்தம்.

மண்டபமொன்றுசெய்து மற்றந்தமண்டபத்தை
கண்டிடவரவழைத்துக் காண்பிததுப்பொழுதுபோக்கி
அண்டியேசொக்கட்டானை யாடுதற்கிசையச்செய்து
வண்டிறலெவர்தங்கள் வாழ்வெலாஙகெலித்துத்தாரேன்.

(வ-ம்) கேளும் என்னுடைய மருமகனுன துரியோதன மகாராசனே புதிதாய் ஒரு அலங்காரமண்டபஞ்செய்து அதைப்பார்க்கு

ம்படிபாய் பாண்டவர்களை யழைப்பித்து அதைகாண்பித்துப் போசனஞ்செய்தபின்பு பொழுதுபோக வேண்டுமென்று சொக்கட்டானுடச்செய்து பாண்டவர்களைத்தோற்கடித்து அவர்கள் சேனை நாடுநகரம் பண்டுபண்டாரங்களையெல்லாம் உனக்கே வரும்படியாகக்கெலித்து தருகிறேன் என் சாமார்த்தித்தைப்பாரும் மருமகனே

பொது விருத்தம்.

வேற்றிசேர்கர்னன்சொல்லும் வினவியதம்பிசொல்லும்
மற்றவர்சொன்னசொல்லும் மறுத்தவன்மாமன்சொன்ன
குற்றமாஞ்சகுனிசொல்லை குருமொழியாகவெண்ணி
கொற்றவன் துரியனுசை கொள்ளுவான் தள்ளுவானே

திரியோதனன் சகுனிக்குச்சொல் தரு

இ-ம்-கண்டா-அடதாளம்-சாப்பு.

கண்ணிகள்.

உன்னாலேயல்லவோநா னுலகத்தையாள்வது சகுனிமாமா-இனி
உன்னாலேயல்லால் எனக்குற்றதுணையுண்டோ சகுனிமாமா
என்னாலேயாகுமோ விந்தமோசஞ்செய்ய சகுனிமாமா நான்
எண்ணினஎண்ணத்தை ஈடேறவைப்பாயே சகுனிமாமா
சம்பத்துக்கேற்ற தருவெடுத்துச்சொன்னாய் சகுனிமாமா உன்
தந்திரஇந்திரசால மெவர்சொல்வார் சகுனிமாமா
நம்மைப்போல்பாண்டவர் நாடாளலாச்சுதே சகுனிமாமா இனி
நாடுநகரமு நாமாளவேணுமே சகுனிமாமா
சிங்காரமாயாகஞ் செய்தழைப்பித்தாரே சகுனிமாமா நாம்
செல்வமாய்கூடிகொண் டெல்லோரும்போனோமே சகுனிமாமா
பங்காளியென்றெண்ணிப் பாராமற்போனாரே சகுனிமாமா நம்மை
பத்திற்பதினொன்றாய் பார்த்திருந்தார்களே சகுனிமாமா
துன்னியபாண்டவர் சின்னஞ்செய்தார்களே சகுனிமாமா அந்த
துற்சனருக்கிப்போ துரைததனம்வந்ததே சகுனிமாமா
மன்னவனென்றெண்ணி மதியாமற்போனாரே சகுனிமாமா என்னை
மரியாதைசெய்து வணங்காதிருந்தாரே சகுனிமாமா
பஞ்சபாண்டவர்வனிதம் பண்ணதும்போதாமல் சகுனிமாமா அந்த
பட்டி துரோபதைஎன்னை பார்த்துநகைத்தாளே சகுனிமாமா
கொஞ்சமாயெண்ணி குலுங்கநகைத்தாளே சகுனிமாமா அந்த
குக்கச்சிறுக்கியென் வெட்கங்கெடுத்தாளே சகுனிமாமா

நீலிபழிக்க நிலத்திலிருந்தேனே சகுனிமாமா அதை
நினைக்கநினைக்க நெருப்பாயெரியுதே சகுனிமாமா
வேலிக்குமுட்போட காலுக்குதைத்துதே சகுனிமாமா-அந்த
வெஞ்சினந்தீர்த்திட வேளைகிடைத்துதே சகுனிமாமா
எத்தகளுஞ்சூது வித்தைகளுங்கற்ற சகுனிமாமா-என்னை
எப்படியாகிலு மீடேற்றவேண்டுமென் சகுனிமாமா
குத்திசைபாண்டவர்குடியைக்கெடுக்கவென் சகுனிமாமா-உன்னை
குலதெய்வமாய்வைத்துக்கும்பிட்டிருப்பேனென் சகுனிமாமா
சொக்கட்டான்பாண்டவர் தோத்திட நீசெய்தால் சகுனிமாமா-உன்
துரையாகவைத்துநான் சொன்னபடிகேட்பேன் சகுனிமாமா (னை
கைக்குகண்ணாடியென் கண்ணுக்குகண்ணேஎன் சகுனிமாமா-என்னை
கார்த்தாலும்நீர்கரை சேர்த்தாலும்நீயேயென் சகுனிமாமா

பொது விருத்தம்.

இப்படிதன்மனத்தி லிருந்திடும்பொறாமையெல்லாம்
ஒப்புடன் துரியன்சொல்ல உளமதுமகிழ்ந்துகேட்டு
தப்புறுசகுனிமுன்னே சாற்றியமந்திரத்தை
அப்புறமெவருங்கேட்கச் சொல்லுவான்சொல்லுவானே.

சகுனி திரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

மண்டபமொன் றுண்டாக்கி
வரவழைத்துக்காண்பித்துமகிழப்பேசி
உண்டமுதலானபின்புபொழுதுபோக
வொருதாஞ்சூதாடுவமென் றுரைத்தோமானால்
தண்டிவரும்தர்மனும்பின்வாங்கமாட்டான்
சபைதனிற்சூதாடுதற்குசம்மதிப்பான்
வண்டிலனலாடியபோதென்சமர்த்தால்
வாழ்வையெல்லாமவர்தோர்க்கவகைசெய்வேனே.

(வ-ம்) கேளும் என்னாசை மருமகனான துரியோதனமகாராசனே நான்சொன்னபடி ஒரு சபாமண்டபமுண்டாக்கினையேயானால் அதனைகாணும்படியாய் பாண்டவரை யழைப்பித்து போசனாதிகள் செய்தபின்பு பொழுதுபோக வேண்டுமென்று ஒரு ஆட்டம் சொக்கட்டானாடவேண்டுமென்றால் தருமராஜனும் சம்மதிப்பான் அப்போது பந்தயம் வைத்தாடுங்காலத்திலே அவர்கள் நாடுநகரம் ஆனை சேனை பண்டுபண்டாரம் ரொக்கரோசனை இது முதலாகியதெல்லாம்.

உனக்கே வரும்படியாய் கெலித்துத்தருகிறேன் பாரும் என் சமர்த்தை திரியோதனமகாராஜனே

திரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்.

மிகுதிரள்சிறியதந்தை விதுரனேயின்றுள்போற்றி
சகுனியென்மாமன்சொன்ன தந்திரவுபாயத்தாலே
நகம்புகழைவர்நாடு நகரமுநானேகொள்ள
தகுந்தகுமிதுவுமக்குச் சம்மதிதானேசொல்வீர்.

(வ-ம்.) சரணம் சரணம் விதுரமகாராசனே எனது மாமனர் சகுனிசொன்ன வுபாயத்தினாலே பாண்டவர்களுடைய செல்வத்தை நானேயனுபவிக்கப்போகிறதுபோல் தோணுது அது உனக்குச் சம்மதிதானே தெரியச்சொல்லுமையா.

விதுரன் திரியோதனனுக்குச்சொல் விருத்தம்

பாதிநாடளிதகபின்பு பறித்திடநினைத்துவஞ்ச
சூதினால்வெல்வோமென்று சொல்வது கருமந்தானோ
நீதியோநெறியோ நீசொல்லுங்கொடியவார்த்தை
காதிலுங்கேட்கலாமோ கனவிலும்நினைக்கலாமோ.

(வ-ம்.) கேளுமையா திரியோதனமகாராஜனே பாண்டவர்களுக்கு பாதிநாடுகொடுத்தோமே இப்போதவர்களை இங்கேயழைப்பித்துக் கபடமார்க்கமான சொக்கட்டானடச்செய்து மறுபடியும் அவர்களுக்குக் கொடுத்துவிட்ட நாட்டை அபகரித்துகொள்ளுகிறது தருமமா இதுநீதியா அரிஅரி இவ்வார்த்தையை காதிலுங்கேட்கப்போகாது கனவிலும் நினைக்கப்போகாது திரியோதனா.

திரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்.

நிதாகவெனதுவாழ்வுஞ் சிறப்பையுங்கொடுத்துநாங்கள்
மீதாகநினைக்குந்துஷ்ட விரோதிக்குக்கொடுத்தநாட்டை
வாதாடிபறித்துக்கொள்ள மனுநீதியிருக்கமேலும்
சூதாடிபறித்துக்கொண்டால் தோஷமென்றுரைக்கலாமோ.

(வ-ம்) ஆகா ஆகா நன்றாய் சொன்னீர் பிழைத்துபோகட்டுமென்று பாதிநாட்டைக்கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு அடக்கமாயிராமல் ஒருவராலுஞ்செய்யப்போகாத இராசசூயயாகஞ்செய்யலாமா ஒருபெண்ணாய் பிறந்தவள் விரலத்தனை சிறிக்கி அந்த திரௌபதை என்னைப்பார்த்து நகைக்கலாமோ நான்போனாலும் மரியாதை செய்யாமலிருக்கலாமா அப்படிப்பட்ட துஷ்டருக்குக் கொடுத்தநாட்டை அடித்துப் பறித்துக்கொள்ள வேண்டும் அப்படிச்செய்யாமல் சொக்கட்டானடிப் பறித்துக்கொண்டால் இது தர்மமா பளா நன்றாச்சு.

விதுரன் திரியோதிரனுக்குச்சொல் விருத்தம்.

களவானசூதுவேண்டாம் கருதிநாம்கொடுத்தநாட்டை
தரவேணுமெனக்கென்றுந்தன் தகப்பன்கைபோலேபோனால்
பரிவாகநாட்டைவிட்டு பாண்டவர்வனம்போவார்கள்
உரவாகுமுலகுநீயே பொருமிக்கபாள்வாயப்பா.

(வ-ம்) கேளுமப்பா திரியோதனு சொக்கட்டானுடி உபாயமாய்நா ட்டை பறித்துக்கொள்ள வேணுமென்று தேவையில்லே நாம்கொடுத் தநாட்டை மறுபடியும் கொடுத்துவிடச்சொல்லி உன்தகப்பன் கை போலேபோனால் சந்தோஷமாகத்தானே நாடுநகரத்தையுங் கொடுத்து விட்டு பாண்டவர்கள் காட்டுக்குப்போய் விடுவார்கள் அப்பால் நீயே இந்த உலகத்தையாளலாம் மற்றப்படி சூதாடிப்பறித்துக்கொள்ளுகி றது சரியல்ல.

திரியோதிரன் விதுரனுக்குச்சொல் விருத்தம்.

வாயலில்மரத்தைவைத்து வளர்ந்திடமரம்வளர்ந்து
பேசவுந்தெருவிற்போகும் பேர்க்குநிழல்தந்தாப்போல்
வாசமும்வாழ்வுமன்ன வஸ்திரமெல்லாமிங்கே
ஆசையுமன்புமங்கே யாகில்நீபேதுவோசொல்வாய்.

(வ-ம) கேளும் சிற்றப்பா வாயலில் நிழலிருக்க வேணுமென்று மர த்தைவைத்து தண்ணீர்வார்த்து வளர்த்தால் மரமுழுவதும் வளர்ந்து வனைத்து தெருவிற்போகிற பேர்க்கு நிழல்கொடுத்தாப்போலிருக்கின் றது உன்னுடைய நடத்தை இதெப்படி யென்றால் உனக்கு அன்ன மும் வஸ்திரமுமிங்கே ஆசையுமன்புமங்கே பாண்டவர்கள் பேரிலே அப்படியானால் இதுவும் சொல்லுவாய் இன்னமும் அனேகஞ்சொல் லுவாய்.

விதுரன் திரியோதிரனுக்குச்சொல் விருத்தம்.

உற்றதுசொன்னேன்நீங்க ளொருவருக்கொருவர்நெஞ்சில்
பற்றியேபகையைக்கொண்டால் பாரிலமன்னவர்நகைப்பார்
மற்றுமுன்மொழிதடுத்து வஞ்சனைசொனனேனென்று
குற்றமுமென்மேற்சொன்னாற கூறவதினிவேறுண்டோ.

(வ-ம்) கேளுமப்பா திரியோதனு பாண்டவர்களும் நீங்களும் ஒரு வருக்கொருவா சண்டை சச்சரவு போட்டால் மற்ற ராசாக்களெல லாம் பழிப்பார்கள் நடக்கிற காரியத்தை சொன்னால் சொன்னசொல லுங் கேளாமல் வஞ்சனையாகச் சொனனேனென்று சொன்னால் இனி நான் வேறென்ன சொல்லப்போகிறேன திரியோதனு.

திரியோதிரன் விதுரனுக்குச்சொல் விருத்தம்.

துன்னியகபடுஞ்சூதுந் துற்புத்தி அகர்மமெல்லாம்
என்னிடத்திலேதானே யிருக்குதமெய்தான்மெய்தான்
சொன்னசொல்மறந்துவிட்ட துஷ்டனானதைகயாலே
பொன்னடிக்கமலமபோற்றி பொறுத்துக்கொண்டேகுவீரே

(வ-ம்.) அப்பா சிற்றப்பா அந்தமட்டிலேபோதும் என்னிடத்திலே கபடும் சூதும் துற்புத்தியும் அகர்மமுங்கூடிக்கொண்டிருக்கிறது பெரியோர்கள சொல்லப்பட்ட வார்த்தை தள்ளிவிடப்பட்ட துஷ்டனுமிருக்கிறது ஆகையால் என்குற்றத்தையெல்லாம் பொறுத்துக்கொள்ளவேண்டும் சரணம் சரணம் எழுந்திரும் போய்வாரும்.

விதுரன் திரியோதிரனுக்குச்சொல் விருத்தம்.

ஆன்றோருன்குடிக்கு அஷ்டமச்சனிபோல்வந்து
தோன்றியசகுனிமாமன் துற்புத்தியாலேயுந்தன்
நாடுமுன்னகாம்வாழ்வு மிழந்திடக்காலம்வந்தால்
ஊன்றியபெரியோர்வார்த்தை யுரைக்குமோவுரைத்திடாதே.

(வ-ம்) அடா திரியோதனா உன்னுடைய குடிக்கு அஷ்டமச் சனி போல் வந்து வாய்த்த சகுனியுடைய துற்புத்தியினாலே உன்னுடைய செங்கோலும் வாழ்வும் இழந்துபோகிறதற்கு காலம்வந்து நேர்ந்தது தானால் நல்லோர்கள் வார்த்தை உன்செவிக்கேற்குமா ஏற்காது மற்றதெல்லாம் அனுபவிக்கவேணும் துரியோதனா

பொது விருத்தம்.

விதுரனுங்கொலுவைவிட்டு வெருண்டுமேபோனபின்பு
கதிர்முடிவேந்தன்றானுங் கபடுசெய்சகுனிதானுஞ்
சதிசெய்யுந்தம்பிதுற்சா தனனுமற்றெவருங்கூடி
நிதிதருமண்டபத்தை நிர்மிக்கத்தொடங்கினரே.

திரியோதிரன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்,

தம்பிதுற்சாதனனே தாமிஷமாயிராமல்
தம்பிதச்சித்திரசிற்பன் கனவிசித்திரருந்தேர்ந்த
உப்பருமகிழத்தக்க வொருசிற்பாசாரிதன்னை
நம்பிடக்கொலுவிற்றப்போ னினையாயழைப்பிப்பாயே.

(வ-ம்.) அடாதம்பி துற்சாதனா இப்போதாமிஷமாயிராமல் சிற்பாசாஸ்திரமெல்லாம் நன்றாக் கரைகண்டவனாக ஒரு சிற்பாசாஸ்திரியை யழைப்பியும் தம்பி துற்சாதனா.

துற்சாதனன் சொல்வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறேன் அண்ணாவே.

துற்சாதனன் சேர்வைக்குச்சொல் விருத்தம்.

ஆரடாசேர்வைக்காரா அதிசீக்கிரமாகவோடி
பாரடாபுகழைப்பெற்ற பார்த்திபனழைத்தானென்று
காரமாஞ்சொரிந்தசிற்பா சாரியை இட்சணத்தில்
சீருடன்கொலுவுககிப்போ சீக்கிரமாய்வரச்சொல்வாயே.

(வ-ம்) ஆரடா சேர்வைக்காரா ராசாதிராசனான துரியோதனமகாராசனழைத்தானென்று நம்முடைய சிற்பாசாரியை இந்தக்ஷணங் கொலுவுக்கு வரச்செய்யும்பின்னாய் சேர்வைக்காரா.

சேர்வைக்காரன் வசனம்.

அப்படியேவரச்செய்கிறேன் சுவாமி.

சேர்வைக்காரன் சேவகனுக்குச்சொல்கவி.

மற்புயவீரா சிற்பனையிப்போ
ஒப்புடனழைத்துக் கொப்பனவாடா.

(வ-ம்.) ஆரடா சேவகா சிற்பாசாஸ்திரியை அதிசீக்கிரத்தில்அழைத்துவாடா.

பொது விருத்தம்.

விதித்தமுன்னாலும்பூண்டு விபூதியட்சதையுமிட்டு
துதித்தநீர்காவிச்சோமன் சொருகுசடலுடுத்திநன்றாய்
மதித்திடும்சிற்பநூலு மட்டரசற்பலகையேந்தி
கதித்திடுஞ்சபையில்வில்வ சர்ப்பனும்வருகின்றானே.

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோதெப்படியென்றால் இராசாதிராசனான திரியோதன மகாராசன் கொலுவுக்கு சிற்பாசாஸ்திரி வருகிறவிதங்காண்க.

விஸ்வகர்மன் வருகிற தரு-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

இசையும்பாரிலெட்டுந் திசையுங்கீர்த்திபெற்ற

சரணங்கள்.

வேதியரெல்லோரும் செய்கின்றதொழில்களும்
வேள்வியு மென்றாலே
மேதினியாள்கின்ற வேந்தர்கைசெங்கோல்
விளங்குவ தென்றாலே
நீதில்லாசாளும்வைசியர்செய்யுஞ்
சீவன மென்றாலே
திரமானசூத்திரர் யாவரும்போற்றிடும்
செல்வ மென்றாலே
பூதலமீதில்தேவாலய மானதும்
புனல்சேர்தடாகப் பிரதிஷ்டைக ளானதும்
சோதிடகருமருடமாளிகை யானதும்
சூட்சாதிசூட்ச துரைகளுண் டானதும்
ஈதெல்லா மென்றாலே-உலகம்
ஈரேழு மென்றாலே
தாதவிழ்மாலை குருகுலபாண்டவர்
தப்பிப்பிழைத்திட்டதந்திர மென்றாலே
ஆதலாலுள்ளதுஞ் சொன்னேன் சொன்னேன்காணும்
ஓதினேன்பொய்யல்ல வுற்றுப்பார்க்கவேணும் . (விஸ்வ)

சிற்பன் திரியோதனனுக்குப்போற்றி விருத்தம்.

மன்னர்கள்மன்னுபோற்றி மகுடாபிஷேகாபோற்றி
கன்னல்வில்மதனுபோற்றி கண்டகாமிண்டாபோற்றி
பொன்னணிமார்பாபோற்றி பூச்சக்கிரவர்த்திபோற்றி
என்னையிங்கழைத்தசேதி யியம்புவீர்போற்றிபோற்றி.

(வ-ம்) சரணம்சரணம் இராஜமார்த்தாண்ட இராஜவுத்தண்ட ராஜகெம்பீரா தேவரீரடியேனை யழைப்பித்த காரியம் அருளிச்செய்யவேணும் சுவாமி.

திரியோதிரன் சிற்பாசாஸ்திரிக்குச்சொல் விருத்தம்.

சிற்பனேகேளாய்நல்ல சித்திரவிசித்திரமாக
அற்புதமாகயாரு மதிசயப்படுவதாக

உற்பனமண்டபந்தா னென்றமேசெய்யவேண்டும்
விற்பனமாகச்செய்தால வெகுமதிசெய்வேகபிள்ளாய்.

(வ-ம்.) வாரும் சிற்பாசாஸ்திரி இங்கே மகா உன்னதமாக ஒரு சபாமண்டபஞ் செய்யவேண்டும் அந்தப்படி செய்தா லுனக்கு நலல வெகுமதிகள் செய்வேன பிள்ளாய்.

சிற்பாசாரி திரியோதனக்குச்சொல் விருத்தம்.

மூவருமெச்சமற்ற முனிவருமெச்சவானிற்
தேவருமெச்சவெங்கள் தேவரீர்நீருமெச்ச
யாவருமெச்சநல்ல வெழில்மண்டபத்தைச்செய்வேன்
தாவருமெனதுசிற்ப சமர்த்தைநீர்பாருஞ்சுவாமி.

(வ-ம்) கேளுஞ் சுவாமி மும்மூர்த்திகளும் முனிவர்களுந் தேவர்களும் மற்றவர்களும் தாங்களுமெச்சம்படியாய்ச் சபாமண்டபஞ்செய்கிறே னென்னுடைய சாமார்த்தியத்தைப் பாருஞ்சுவாமி.

திரியோதிரன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்.

அருமைதுற்சாதனநீக ளாசாரிமனதுக்கேற்ற
மருவியவெள்ளிபொன்னு மாணிக்கமுதலாயுள்ள
பெருநவரத்தினங்கள் பின்னுமவேணதுகளெல்லாம்
ஒருகுறைவந்திடாம லொருமிக்ககொடுத்திடாயே.

துற்சாதனஞ்சொல் வசனம்.

அப்படியே கொடுக்கிறேன் அண்ணாவே.

சிற்பாசாரி மண்டபஞ்செய்துவந்துசொல் விருத்தம்.

செவ்வையாயுலகுசெங்கோல் செலுத்தியமன்னர்மன்னு
மூவிதயுலகுமெச்ச முழுநவரத்தினத்தால்
ஒவ்வியசித்திரமாக உன்னிதமிகவேநல்ல
திவ்வியமண்டபந்தான் செய்திதோமுடிந்ததையா.

(வ-ம்) கேளும் இராஜாதிராஜ பரமேஸ்வரா தேவரீருத்தாரப்படிக்கு மகா உன்னதமாக சபாமண்டபஞ்செய்து முடிந்தது சுவாமி.

திரியோதிரன்-சகுனிமுதலானவர்களுக்குச்சொல் விருத்தம்.

தந்திரசகுனிமாமா தம்பிதுற்சாதனுஞ்சூழ்
சுந்தரகர்னன்பீஷ்ம துரோணரேசொல்லக்கேளீர்
விந்தையாய்ச்செய்துவந்த வியப்புறுமண்டபத்தை
புந்தியில்மகிழ்ச்சிகொள்ளப் போயுடன்பார்ப்போம்வாரீர்.

(வ-ம்) கேளும் என் சகுனிமாமா தம்பி துற்சாதனா கர்ணராச னே பீஷ்மரே துரோணாச்சாரியரே நாமெல்லோருஞ் சிற்பசாஸ்திரி செய்த மண்டபத்தைப்போய் பார்ப்போம் வாரீர் சபையோர்களே.

சபையோர்-வசனம்.

அப்படியேபோவோம்திரியோதனமகாராஜனே.

திரியோதனன்-ஓரடி-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

அதிசயத்தைப் பாரும்பாரும் இந்த அதிசயத்தைப்பாரும்பாரும்.

சரணங்கள்.

சகுனிமாமாவிங்கே வாரும்-சிற்பா
சாஸ்திரிசெய்ததைப் பாரும்
பளிங்கினாற்றானுக ளமைமத்தான்மேலே
பவளத்தாற்பொதிய வைத்தான்
இளங்கினிபச்சையாய் செய்தான்-அதி
வீடைக்கிடைதங்கத்தைப் பெய்தான
வச்சிரக்கொடுங்கைகளைச் சேர்த்தான்-அதின்
வரம்பெல்லாம்பொன்னீரை வார்த்தான்
உச்சிதபச்சையை நுழைத்தான்-அதி
னோரமெல்லாமிரத்ன மிழைத்தான்
கொத்துச்சித்திரவேலை யடித்தான்-நான்
குறித்தபடியே முடித்தான்
இத்தனைமெத்த தொல்லை-நான்
இதைப்போலெங்கும்பார்த்த தில்லை

திரியோதிரன் சகுனிக்குச்சொல்-விருத்தம்

சகுனியென்மாமாசிற்ப சாஸ்திரிகெட்டிக்காரன்
புகலும்சாய்நினைத்தாப்போல பொருந்தமண்டபத்தைசெய்தான்
திரளுமென்றம்பிவாடா சிற்பசாஸ்திரிக்குவேண
வெகுமதியெல்லாந்தந்து மேன்மையாயனுப்புவாயே.

(வ-ம்.) கேளுமென் சகுனிமாமா இந்த சிற்பாசாஸ்திரி மெத்த கெட்டிக்காரன்தான் நாம்நினைத்தபடியே வெகுசட்டதிட்டமாய்மண் டபத்தை செய்தானடா தம்பி துற்சாதனா இந்த சிற்பாசாஸ்திரிக்கு வேணுமென்றவெகுமதியெல்லாங் கொடுத்துச் சந்தோஷமாயனுப்புந் தம்பி துற்சாதனா.

துற்சாதனன்-சொல்வசனம்.

அப்படியேகொடுத்தனுப்புகிறேனென்றவே

திரியோதிரன்-சகுனிக்குச்சொல் விருத்தம்.

மண்டபமுடிந்தவாறும் மனதினில்நினைத்தவாறும்
அண்டகப்பாண்டவரை சூதினால்வெல்லும்வாறும்
கொண்டவனபிதாவுக்கிதனை கூறியேயவர்க்கைபோலே
கூடியேபாண்டவர்களை அனுப்பிடவேண்டும்வாரீர்.

வ-ம். கேளுமென்சகுனிமாமா நாம் மண்டபங்கட்டினதும் பஞ்சபாண்டவர்களைச் சூதினாலே வெல்லவேணுமென்று நினைத்திருக்கிறதும் இதுகளையெல்லாம் எனபிதாவாகிய திருதராஷ்டிரமகாராசனுக்குச்சொல்லி அவர்கைப்படஓலையனுப்பி பாண்டவர்களையழைப்பிக்கவேண்டுமே ஆனபடியினாலே எனபிதாவினிடத்திற்குப் போவோம் வாரீர்.

சபையோர்கள்சொல் வசனம்.

அப்படியேபோவோம் திரியோதனமகாராஜனே.

திரியோதிரன் திருதராட்டிரனுக்குச்சொல் போற்றிவிருத்தம்.

என்னையின்றவனேபோற்றியென்னையாண்டவனேபோற்றி
என்னையுமுலகையாளவெழில்முடிதரித்தாய்போற்றி
என்னையிங்கேற்றவேண்டியாதொன்றுந்தடைசெய்யாமல்
என்னுள்ளேநினைத்துவந்தவெண்ணத்தைமுடிப்பாய்போற்றி

திருதராட்டிரன் திரியோதிரனுக்குச்சொல்விருத்தம்.

ஐயனேவாடாஎந்தனழகுகண்மணியேவாடா
வையகமுழுதுங்காக்குமன்னர்மன்னவனேவாடா
துய்யதார்குருகுலத்துதிரைகள்ரத்தினமேவாடா
செய்யசெங்கோல்செலுத்துஞ்செல்வனேவாடாவாடா

வ-ம். மகனேதிரியோதனாஎன்சுவாமி உன்னுடனேகூட யார்வந்திருக்கிறார்களப்பா அப்போதுரோணாச்சாரிவந்திருக்கிறார்தெண்டந்தெண்டமையா உட்காருங்கள் கர்னமகாராசன்வந்திருக்கிறார் வாடா அப்பா எங்கள்சகுனிமாமாவந்திருக்கிறார் அப்படியா அப்படியா அத்தானேவாரும் எங்களத்தானிருக்கும்போது எங்களுக்கென்னகுறை ஒன்றுமில்லையே.

திரியோதிரன் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்.

வல்லபிதாவேசித்திர மண்டபமொன்றுண்டாக்கி
எல்லையிற்பாண்டவரை யெத்துசெய்தழைத்துக்காட்டி
தொல்லைசூதாடியைவர் துரைத்தனம்பறித்துக்கொள்ள
ஒல்லையிலநாங்கள்நல்ல யோசனைசெய்தோமையா.

வ-ம். கேளுமென்பிதாவே நவரத்தினகசிதமான ஒருமண்டபமுண்டாக்கி பாண்டவரையழைத்துக் காண்பித்து சூதாடும்படியாய்ச்செய்து அவர்கள் வாழ்வையெல்லாம் பறித்துக்கொள்ள யோசனைசெய்திருக்கிறோமையா

திருதராட்டிரன் சொல்விருத்தம்.

உயர்ந்துபோனர்களைவ ரொடுங்கினர்மக்களென்று
இசைந்திராப்பகலுமையோ யேக்கங்கொண்டடிவயிற்றைப்
பிசைந்துமேயழுதுகொண்டு பிரட்டல்கொண்டரட்டல்கொண்டு
அசந்துநித்திரையில்லாம லேபோகான்றவிக்கிறேனே.

வ-ம். அடா என் கட்டிமகனே பாண்டவர்பேச்சு உயர்ந்துபோச்சுதென்று திகில்விழுந்து ஏக்கங்கொண்டு அடிவயிற்றைப்பிசைந்துக்கொண்டு அழுதகண்ணீருஞ் சிந்தையுமாயிருக்கிறேன் அல்லமுண்டா நித்திரையுண்டா நீங்களிந்தயோசனை செய்தது சரிசரி தகும் தகும் ஆ ஆ.

இதுவுமவன்சொல் விருத்தம்.

உடக்கையாப்நீங்கள்செய்த யோசனைபடிக்குத்தானே
நடந்ததேயானுலிப்போ நமக்கிணையொருவருண்டோ
அடர்ந்திடுபாண்டவரை யதோகெதியாக்கினையே
கடந்துலகாண்டாலெந்தன் கண்கள்வந்தாற்போலப்பா.

வ-ம். மகனே துரியோதனு நீங்கள்செய்த யோசனைப்படிக்குத் தெய்வகடாட்சத்தினுலே அப்படியே வந்தால் உலகத்திலே நமக்கு எதிரியுண்டா பாண்டவர்களை ஓட்டிவிட்டு ஒருத்தனுமே உலகத்தை யாள்வையேயானுல் எனக்குப் போன கண்கள் திரும்பிவந்தது போலல்லவா இந்தயோசனை ஆர்சொன்னுர்களப்பா மகனே.

திரியோதனன் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்.

போர்செய்வோமென்றுகர்னன்பொருந்துமென்றுரைத்தான்தம்பி
சேர்செயுமற்றுளோருமசெய்பலாமென்றுசொன்னுர்

கூர்செய்யுஞ் சூதாலவர் குடியைநான் கெடுப்பேனென்று
போர்செய்யுஞ் சகுனிமாமன் பிரமாணிக்கமாகச் சொன்னர்.

(வ-ம்) கேளும்பிதாவே கர்னமகாராஜா சண்டையினுல் வெல்லவேண்டுமென்று சொன்னர் தம்பி துற்சாதனனும் மற்றபேரு மப்படியே செய்யலாமென்று சொன்னர்கள் அது கூடாதென்று எங்கள் சகுனி மாமன் சொன்னது சூதினல் பாண்டவர்களை ஊரைவிட்டு ஓடும்படியாய் செய்கிறேனென்று பிரமாணிக்கமாய் சொல்லியிருக்கிருரையா.

திருதராட்டிரன்-சகுனிக்குச்சொல் விருத்தம்.

உச்சாகப்பாண்டவாளை யோட்டிவிட்டவர்கள் தன்னை
வைத்தாலுமுந்தன்பார மாய்த்தாலுமுந்தன்பாரம்
பித்தானபிள்ளையேயென் பிள்ளையுன்பிள்ளைகாணும்
பச்சாலுன்னருளிருந்தால் வையகமவனேயாள்வான்.

(வ-ம்) ஓய் மச்சானே நானுள்ளபடியே சொல்லுகிறேன் அந்தப் பாண்டவாளை யோட்டிவிட்டு எங்களை பூமியிலே வைத்தாலும் உன் பாரந்தான் மாய்த்தாலும் உன்பாரந்தான எம்பிள்ளைகள் கள்ளங்கபடு சூதுதெரியாதபிள்ளைகள் என்பிள்ளைகள் உன்பிள்ளைகள்எப்படியாகிலும் இவர்களை முன்னுக்குவரும்படியாய்ச் செய்யவேணும் அத்தானே.

சகுனி திருதராட்டிரனுக்குச்சொல் கவி.

அத்தானுனை யல்லாமல் மற்றுரினி யுண்டோ
இத்தரணியெல்லாம் பெத்தால் வெல்வேனே.

திருதராட்டிரன் திரியோதனனுக்குச் சொல் விருத்தம்.

பெருத்த தொட்டிலையுமாட்டி பிள்ளையுங் கிள்ளிகூட
திருத்தமாய் விருப்பாரந்தத் திருடரை நம்பவேண்டாம்
வருத்தமென் சகுனிமாமன் வார்த்தையைக் கடந்திடாமல்
கருத்துட நடந்துகொண்டாற் கடைததேறிப்போவாயப்பா.

(வ-ம்)கேளுந்திரியோதனு நம்மிடத்திலேபிள்ளையுங்கிள்ளிதொட்டிலையும் ஆட்டுகிறவர்போல இங்குமங்குமாயிருப்பவர்களுண்டு அந்தத்திருடரை நம்பவேண்டாம் உனசகுனிமாமனசொன்னபடிநடந்துகொண்டாயேயானல் கடைத்தேறிப்போவாய் திரியோதனு.

திரியோதிரன் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்.

மந்திரி முனிவர்சொன்ன வார்த்தையு மறைந்திட்டாலும்
தந்திரமான சொலலை தடுப்பேனோ தடுக்கமாட்டேன்
சுந்திர பாண்டவாளை சூருக்கினில வரவேசொல்லி
யெந்தையே யுல்லைகயோலை யெழுதியே யனுப்புவீரே.

(வ-ம்) கேளும்பிதாவே சாபானுக்கிரக சாமர்த்தியமான மகாத்துமாக்களுடைய வார்த்தையைத்தடுத்தாலும் என்சகுனிமாமன் சொல்லை தடுக்கமாட்டேன் இப்போதுபாண்டவாளைவரச்சொல்ல உன்கை ஓலையாக எழுதியனுப்பவேண்டும் பிதாவே.

திருதராட்டிரன்-சொல் விருத்தம்

நல்லதப்படியே யாகட்டும் நாளையதினத்திற்குள்ளே
வல்லபாண்டவர்களிங்கே வந்திடச்செய்கிறேன்பான்
சொல்லுந் துற்சாதனுநீ தூதனை யனுப்பிவைத்து
வில்லினில் வலுமைபெற்ற விதுரனைவரச்செய்வாயே.

(வ-ம்) கேளுமப்பா திரியோதனு உன்சொற்பிரகாரம் நாளையதினத்திற்குள்ளே பாண்டவர்களிங்கே வரும்படிசெய்கிறேன் அப்பாதுற்சாதனு நீசீக்கிரமாய் ஒருதூதனையனுப்பி வில்லினில் வல்லவனுகிய என்தம்பிவிதுரனை யழைத்துவரச்சொல்லடா துற்சாதனு.

துற்சாதனன் சொல் வசனம்.

அப்படியே யழைப்பிக்கிறேனையா.

துற்சாதனன் சேவகனுக்குச் சொல் கவி

பேசியே வீரா வீசியேயோடி
பூசிய விதுரராசனை யழைப்பாய்.

(வ-ம்) ஆரடா அடாதூதா எங்கள் சிறியதகப்பனுனவிதுரமகாராசனை யழைத்துக்கொண்டு வாடா.

சேவகன் சொல் வசனம்.

அப்படியே யழைத்துவருகிறேன் சுவாமி

மக்களேசகுனியெந்தன் மைத்துனுதுரியாகர்னு
மிக்கவேயிருந்தசேதி வெளிப்படப்போகுதப்பா
அக்கரைபாண்டவாள்வந் தகப்படுந்தனிலுநீங்கள்
பொக்கினற்கிணற்றில்கல்லை போட்டாப்போலிருங்களப்பா.

(வ-ம்) கேளும் என்மகனே திரியோதனு அப்பா கர்னு துற்சாதனு சகுனிமைத்தனு இங்கேஆலோசனைபண்ணினதுவெளிப்பட்டால் மோசம் மோசம் பாண்டவர்கள் நம்மிடகையில் அகப்படுகிறவரையிலும் கிணற்றிலே கல்லை!போட்டதுபோலிருங்கள் போய்வாருங்கள்.

திரியோதனன் சொல்வசனம்

சரணம் சரணம் அப்படியே போயிருக்கிறோமையா.

சேவகன் விதுரனுக்குச் சொல்விருத்தம்

துதிபெரு விதுரனுஞ் சூராபோற்றி
விதிதரு மறுவில் வேதாபோற்றி
கதிர்பெரு மறநெறி தாதாபோற்றி
மதிமிகு விதுர மகிபாபோற்றி.

வசனம். சரணம் சரணம் விதுரமகாராசனே சுவாமி பராக்கு.

விதுரன் சேவகனுக்குச் சொல் கவி.

வீரியசூரா காரியமென்ன
சிருடனுன்னை யார்வரவிட்டார்.

வசனம்.

அடாதூதா உன்னை யனுப்பிவைத்தது யார்சொல்லும்பிள்ளாய்

சேவகன் விதுரனுக்குச் சொல் விருத்தம்

அத்தானேகேளாயுந்த னரவிந்தம் பாதாபோற்றி
இத்திசை முழுதும்போற்று மிலங்குமுன் றமையனான
வித்தகன் திருதராட்டிர வேந்தனுருனையிப்போது
மெத்தவு மாவலாக விரைவுடன் வரச்சொன்னாரே.

(வ-ம்.) கேளுமையா விதுமகாராஜனே இராஜாதி ராஜ பரமேஸ்பர ராஜமார்த்தாண்ட உத்தண்டகோலாகலமான திருதராட்டிரமகாராஜன் தங்களை அழைத்துக்கொண்டு வரச்சொன்னார் சுவாமி.

விதுரன் வருகிற தரு-இ-ம்-புன்னாகவராளி-மிசுரதாளம்.

பல்லவி.

சத்திய விதுரராஜன் வந்தான் படைசற்றும் புடைசூழ
புவிமுற்றும் புகழ்படைத்த

சரணங்கள்.

ஒருவருமெதிரில்லா வில்லான்-இந்த
உலகமுழுதினிலு மொருபொய்யுஞ் சொல்லான்
விரகுள்ள பேர்கள்முன் னில்லான் மேலும்
மெய்யான பொருளல்லால் வீண்பொருள் சொல்லான்-சத்தி

தருமத்தைமறவாத சீலன்-ஒன்றும்
தவறில்லாக்கலைபெற்ற சர்ஜ்ஜனுக்கனுகூலன்
அருமைபுகழினில் விலாசன் தினம்
அணிவர்க்குந் தயாளன் ஆப்த பரிபாலன்-சத்தி
வந்தவன் றன்னை யல்லாமல் இது

மாயவார்த்தையென்னும் மறுவார்த்தையில்லாமல்
சந்தேகமேதங் கொள்ளாமல்
தமையனழைத்ததற்குத் தடைசொல்லிதள்ளாமல்-சத்தி

விதுரன்-திருதராட்டிரனுக்குப் போற்றி விருத்தம்.

விண்ணெலாம் புகழு மதிபனேபோற்றி
கண்ணெலா முலவாக் கண்டனேபோற்றி
எண்ணெலாம் படைத்த விறைவனேபோற்றி
தண்ணெலாம் போற்றுமென் தமையனேபோற்றி.

திருதராட்டிரன் விதுரனுக்கு வாழ்த்து கவி.

மதியார் முடிசேர் சதுராவாழி
மதுராமிர்தசொல் விதுராவாழி.

விதுரன்-சொல் கவி.

மின்னியேசுடுவே வேந்தர்கள்வேந்தே
மன்னுலமுதல்வர் மதிகுலவரசே
தன்மையான சபைதனிலிப்போ
என்னையுமழைத்த தியப்பிடுவீரே.

திருதராட்டின் விதுரனுக்குச் சொல்விருத்தம்.

விதுரனேகேளாய்நீதான் விக்கினஞ்சொல்லவேண்டாம்
மதுரமாயோலையொன்று வாகுடனெழுதித்தாரேன்
இதமுடனோலைக்கண்டே இட்சணம்நீதான்சென்று
பதமுடன்பாண்டவாளை பரிவுடனழைத்துவாராய்.

வ-ம். தம்பி விதுரா நீ யாதொரு தடையுஞ்சொல்லாமல் பாண்டவர்கள் இவ்விடம்வரும்படியாய் ஒருஓலைஎழுதித்தருகிறேன் அதை எடுத்துக்கொண்டுபோய் பாண்டவர்களை அழைத்துவரவேணுந்தம்பி.

விதுரன் வசனம்.

அப்படியே யழைத்துவருகிறேனண்ணாவே

திருதராட்டிரன் இராயசக்கணக்கனுக்குச் சொல் கவி.

பொழுதிலாஒலை எழுதடா நீதான்.

இராயசன் சொல் வசனம்.

அப்படியே எழுதுகிறேன் சுவாமி.

இராயசக்காரன் ஓலையெழுதிவாசிக்கும் விருத்தம்.

சிரஞ்சீவிபாண்டவர்க்கு ஜெயங்கள்மென்மேலுமுண்டாம்
வாஞ்செரிதம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்

தட்சணமாகவந்து நீங்களும் பார்க்கவேண்டும்
நிறஞ்செறி விதுரன்பின்னே தடையின்றி வருகுவீரே.

திருதராட்டிரன் வசனம்

ஆரடா இராயசக்காரா இவ்வோலை செந்திரிக்கைபோட்டு எங்கள் தம்பிவிதுரராசன் கையில் கொடும்பிள்ளாய்.

இராயசக்காரன்-சொல்வசனம்

அப்படியே கொடுக்குறேன் சுவாமி

விதுரன்-ஓலைகொண்டுபோகும்போது விசனப்பட்டுசொல்லுகிற

தரு-இ-ம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஐயையோ இப்படியுஞ்செய்வாரோ துரோகம்
அரிஅரிஇதைநினைத்தாலாறுமோ சோகம்

அநுபல்லவி.

ஐயையோ இதுசகுனியால்விளைந்த மூலமோ
அகமிருந்தகவுரவர்க்குயுகமுடிவு காலமோ-ஐயை

சரணங்கள்.

கர்ண[illegible]துற்சாதனன்சகுனிதிரியோதனன் சூது
கருதியவர்க்கொடிமுடிந்தகபடவஞ்ச மீது
சின்னஞ்சிறுபாண்டவர்க்குஇன்னங்கருத்தெரி யாது
திருவுளமேதுணையல்லால்திக்கொருவரினி யேது-ஐயை

நத்துந்திருதராட்டிரனுக்குகண் ணிரண்டோ
நம்பவைத்துகழுத்தறுக்கஞாயமதைக் கொண்டோ
சூத்திரஞ்செய்தசகுனிஇதைக்குறித்தென்ன கண்டோ
கொலைசெய்துவாழ்ந்தவர்கள் குவலயத்திலுமுண்டோ-ஐயை

தருமபுத்திரனுக்குகிரகசாரமும் பொல்லாதோ
சதுராகதிவினையால் தருமமும்மில்லாதோ
அருமையென்னுப்பாவிகளை யக்கிரமமுங்கொல்லாதோ
அரசனன்றுகொன்றுக்கால் தெய்வநின்றுகொல்லாதோ-ஐயை

பாண்டவர்கள் தேசத்திற்கு விதுரன்போகும்போது
தூதர்கள்முன்னோடி தருமராசனுக்குச்
சொல்லுகிற விருத்தம்.

தரணியிலுதித்தோர்க்கெல்லாந்தாயகமாயிரண்டு
கருணையால்குளிக்கும்பஞ்சகர்த்தனேநின்றுள்போற்றி

திருகெல்லாம்படைத்தவுங்கள்சிற்றப்பன்விதுரராஜன்
வருகிறானையாவுங்கள்மலர்ப்பதம்போற்றிபோற்றி

வ-ம். சுவாமி பராக்கு உங்கள் சிற்றப்பனான விதுரமகாராஜன் அஸ்தினபுரத்திலிருந்து தங்களிடத்திற்கு இதோவருகிறார் சுவாமி.

பாண்டவர்கள்விதுரனுக்குப்போற்றிவிருத்தம்.

காவியங்கடலேபோற்றிகார்முகத்தலைவாபோற்றி
கோவியல்முழுதுந்தேர்ந்தகுற்றமற்றவனேபோற்றி
மேவியெங்களைரட்சிக்கும்வித்தகாபோற்றிதர்ம
தேவதையானயெங்கள்சிற்றப்பாபோற்றிபோற்றி.

விதுரன்பாண்டவர்களுக்கு வாழ்த்துவிருத்தம்.

மெய்வருநீதிதேர்ந்த மிகுவிதரணரேவாழி
பகைவருஞ்சிலையில்வெற்றி பாண்டவவீரர்களேவாழி
பொய்வருமொழிசொல்லாத புருஷவுத்தமரேவாழி
ஐவரும்வாழியெந்த னருமைமைந்தர்களேவாழி.

துரோபதைவிதுரனுக்குப்போற்றிகவி.

வேமாகருணைநிதியேபோற்றிமாமாஅடியார்வாழ்வேபோற்றி
பூமாதகலாப்புபனேபோற்றிமாமாஉன்றன்மலர்த்தாள்போற்றி

விதுரன் துரோபதைக்கு வாழ்கதுவிருத்தம்.

கற்பினுக்கரசேயெந்தன்கண்ணின்மணியேவாழி
மற்றொருமைவர்சிந்தைமகிழ்குலக்கொழுந்தேவாழி
பொற்புறுமாதர்க்கெல்லாம்பொருந்துபூஷணமேவாழி
சொற்பொருளுணர்ந்தநல்லதுரோபதைத்தாயேவாழி

பாண்டவர்கள் விதுரனுக்குச்சொல் விருத்தம்.

நீதியுநெறியுகல்லநிலைமையுநிமுமன்பு
ஓதுமிதெல்லாமுள்ளவுத்தமனின்றுள்போற்றி
தீதிலாதானேயிந்தசிறியோமைப்பொருட்டாயெண்ணி
ஏதுகாரணமாய்வந்தீரென்கையேயுரைசெய்வீரே.

(வ-ம்) கேளும் எங்கள் சிறியதகப்பனான விதுரமகாராசனே எங்கள்பேரில் கடாட்சம்வைத்து வந்தகாரியமென்ன தேவரீர் சொல்லவேண்டுமையா

விதுரன்பாண்டவர்களுக்குச்சொல்விருத்தம்.

பாலரேசொல்லக்கேளீர் பாண்டுராஜனுக்குமூத்த
சீலனுன்பெரியதந்தை திருதராட்டிரமகிபன்

மேலுமுங்களையழைத்துவிசையுடன்வரவேசொல்ல
வோலையுமெழுதித்தந்தாருள்ளபடிவேறேகண்டாய்.

(வ-ம்) கேளும்பாண்டவர்களே உங்கள்தகப்பனுக்குநேர்மூத்த திருதராட்டிர மகாராஜன் உங்களை அதிசீக்கிரமா யழைத்து வரச் சொல்லி ஓலை யெழுதிக்கொடுத்தார் சிறிது உள்ளுக்குள் வினையும் நடந்திருக்கிறது பாண்டவர்களே.

தர்மர்விதுரனுக்குச்சொல்விருத்தம்

தகப்பனாரழைத்தனுப்ப தடையதுசொன்னோமானால்
நகைப்பரேயுலகிலுள்ளோர் நல்லதப்படியேபோவோம்
வகைசுபசோபனங்கள் மற்றுமேதேதேனுமுண்டோ
துகைப்படவரவேசொன்ன சூட்சிலையயுரைசெய்வீரே.

(வ-ம்.) என் சிற்றப்பனான விதுரமகாராஜனே எங்கள் பெரியதகப்பனான திருதராட்டிரமகாராஜன் வரச்சொன்னால் அதற்குத் தடை சொன்னால் உலகம்பழிக்காதா அப்படியே போவோம் ஆகிலும் இப்போது எங்களை யழைப்பித்தகாரியந் தெரியச்சொல்ல வேண்டுமை ய[illegible]

விதுரன் பாண்டவாளுக்குச் சொல்விருத்தம்

நீசெய்யும்யாகந் தனக்கு வந்திருந்து
நின்புகழ் பெருமையும் கண்டு
நெடுமுடி திரியோதனன் கெடுசகுனி
நெஞ்சினிற் பொருமையு மெண்ணி
மாசிலாப் பெரிய மண்டபஞ்செய்து
மகிழ்ந்ததிற் குடிபுகுந் தினத்தில்
மைந்தரே யும்மை யதில்வரவழைத்து
மாயசூதாடியே யுங்கள்
தேசமுமரசுஞ் செல்வமும்பறிக்க
திருட்டு ஆலோசனைகள்செய்து
சிறந்தவுன்பெரிய தகப்பனுக்கிதுகள்
செப்பினாரவருஞ் சம்மதியாய்
ஆசையாயெனனை வரவழைத்தேநீபோ
யவரைநீ யழைத்துவாவென்று
படைவுடனெழுதிக் கொடுத்தவுன்பெரிய
யப்பன்கை யோலையீதப்பா,

தருமர் அருச்சுனனுக்குச்சொல்விருத்தம்

தொந்தரையெவர்செய்தாலும்சூதுகளெவர்செய்தாலும்
தந்திரமெவர்செய்தாலுந்தருமமேசெயமென்றெண்ணி
அந்தமேமிகுந்ததம்பியர்ச்சுனுவாடாமூத்த
எந்தையாரனுப்பும்வோலையெடுத்திதைபடித்திடாயே

(வ-ம்) கேளடாதம்பிஅர்ச்சுனுநமக்குப்பகைபாணியாயிருக்கிறபேர்கள் எத்தனைதொந்தரவுகள்செய்தாலும் சூதுகள்செய்தாலுந் தருமமேஜெயமாகையால் அர்ச்சுனு நம்முடைய பெரியதகப்பனார் எழுதிவரவிட்ட ஓலையையெடுத்து வாசியடா தம்பி

அர்ச்சுனன் ஓலையைவாசிக்கும் விருத்தம்.

சிரஞ்சிவிபாண்டவர்க்கு ஜெயங்கள்மென்மேனுமுண்டாம்
வரஞ்செரிதம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்
கிரஞ்சனமாகவந்து நீங்களும்பார்க்கவேண்டும்
தாஞ்செரிவிதுரன்பின்னே தடைபின்றிவருகுவீரே.

தருமர்சொல் விருத்தம்.

நன்மையும்புகழும்நல்ல ஞானமும்வளமும்வாழ்வும்
வன்மையுமழகுநீதி மார்க்கமுங்கொலுவுஞ்சீரும்
மேன்மையு விரலுமோங்கும் வெற்றியு மெய்யுஞ்சார்ந்த
தொன்மையு முடையோரையோ சூதாடநினைப்பதுண்டோ,

(வ-ம்) நலமும் கீர்த்தியும் தயானமும் ஞானமும செல்வமும் வலுமையும் அழகும் நீதியும் குணமும் சிறப்பும் பராக்கிரமமும் வெற்றியும் சத்தியமும் உள்ளவர்கள் சொக்கட்டான் முதலான சூதுகளாடநினைப்பார்களோ இதென்னகாரணம் அரிஅரி வாசுதேவா.

வீமன் சொல் விருத்தம்.

வசையுள்ளோர் தர்மர்துஷ்டர் வஞ்சகர்மானமில்லா
சுசிகரமில்லாயீனர் சூதாடநினைப்பரல்லால்
இசையுள்ளோர்சூதமாட விசைவரோயிதனிலுந்தன்
சுசிதரும்கள்ளுங்கொண்டு கள்ளையுங்குடிக்கலாமோ.

(வ-ம்.) பழிக்கஞ்சாதவரும் துஷ்டரும்வஞ்சனைசெய்வோரும் மானமில்லாதவரும் சத்தியமில்லாதவரும் சொக்கட்டான் முதலான சூதுகளாட நினைப்பார்களே யல்லாமல் நல்லவர்கள் ஒருக்காலும் நினைப்பார்களா இதைவிட கள்ளை சுட்டுக்கொண்டு கள்ளைக்குடிக்கிறதுமெத்த நல்லது.

தருமர் சொல் விருத்தம்.

பஞ்சபா தகத்திலிந்த பகடையு மொன்றேயென்று
மிஞ்சியே வேதசாஸ்திர விற்பனர் விலகவிட்டால்
சஞ்சல சூதவித்தை தனக்கெதி ரிருந்தேயாட
நெஞ்சினி லென்னைத்தானோ நினைப்பது சகுனிமாமன்.

(வ-ம்.) அரி அரி நாராயணா சொக்கட்டான் முதலான சூதுகள்பஞ்சமாபாதகத்திலே இதுவுமொன்றென்று பெரியவர்கள் தள்ளிவிட்ட இந்த சூதுவித்தையை ஆடவேணுமென்று நினைத்தாய் தனக்கெதிராக இருந்து தன்னுடன் ஆடுகிறதற்கு என்னைத்தானா நினைக்கவேண்டும் நம்முடைய சகுனிமாமன்.

அருச்சுனன் விதுரனுக்குச் சொல் விருத்தம்.

பொல்லாத துஷ்டரிந்த புத்தியை கவனத்திற்கொண்டு
மல்லாடி கடுஞ்சூதாட வரச்சொல்லி எழுதினாலும்
வில்லாலு மரிவாலு மிகுந்தசிற் றப்பாவிந்த
கல்லாத சிறியோர்க்குந்தன் கருத்தென்ன வுரைசெய்வீரே.

(வ-ம்.) நல்லது அந்த துஷ்டர்தான் இப்படிப்பட்ட துற்புத்தியை நினைத்துவரச்சொன்னாலும் உம்முடைய திருவுளத்துக்குச்சரியாயிருக்கிறதா சொல்லுமையா எங்கள் தகப்பனாரான விதுரமகாராஜனே.

விதுரன் தருமருக்குச் சொல் விருத்தம்.

வாதாடுந் துரியனுக்குஞ் சகுனிக்குங் கர்னனுக்குஞ்
சூதாட லாகாதென்று சொன்னது கோடியுண்டு
காதாரச் சொன்னதெல்லாங் கருத்தினில் நினைத்திடாமல்
ஏதோவுன் பிதாவைக்கண்டு வெனையனுப்பினாரே.

(வ-ம்) கேளுங்கள் மக்களே திரியோதனனுக்குஞ்சகுனிக்குங்கர்னனுக்கும் சூதாடுகிறதொழில் நீங்கள் நினைக்கவேண்டாமென்று அனந்தம் நீதிகளைச்சொன்னாலும் கேளாமல் தங்களுக்குள்ளே உன் பெரியதகப்பனான திருதராட்டிர மகாராசனுக்குச்சொல்லி அவரைக்கொண்டு எனக்குத் தெரியப்படுத்தி உங்களை அழைத்துக்கொண்டு வரும்படியாய்ச் சொன்னார்கள் அப்படியிருக்கிறது அவ்விடத்தில் ஆலோசனை மக்களே.

வீமன் தருமருக்குச் சொல விருத்தம்.

வாவியில் வசியைநட்டு மடிந்திடச் செய்தான்பின்பு
மேவிய மாளிகையில் நெருப்பிட்டுக் கொல்லப்பார்த்தான்
மேவிய சூதாவிப்போ வென்றிட நினைத்தானந்தப்
பாவியர் முகந்தைதானும் பார்த்திட லாமோ அண்ணே.

(வ-ம்.) ஆதியிலே ஜலத்திலே வசியைநட்டுக் கொல்லப்பார்த்தான் மேலும் அரக்குமாளிகையில் நம்மைவைத்து நெருப்பிட்டுக்கொல்லப்

பார்த்தான் அதுவும் போதாமல் இப்போது சூதாடி நம்மை பறதியாக்க நினைத்திருக்கின்றான் அப்படிப்பட்ட மகாபாவியான துரியோதனன் அழைத்தால் நாம் போகலாமா அண்ணாவே.

அருச்சுனன் தருமருக்குச் சொல் விருத்தம்.

வழிமறை நூல்கற்றோரு மருவுதண் ணீருமூன்று
பிழைபொறுத் திடுவதல்லாற் பின்னையும் பொறுப்பதுண்டோ
முழுதிலும் மோசம்போற முறைமைகொண் டழைத்தாலந்த
வொழுகிலாப் பகைவர்தங்க ளுறவினி வேண்டாமண்ணே

(வ-ம்.) கேளும் அண்ணாவே தருமசாஸ்திரமறிந்தபேரும் தண்ணீரும் மூன்றுபிழை பொறுப்பதல்லால் மேலும்பொறுத்திடாது நாம் நாள்தோறும் அவர்கள் செய்யப்பட்ட மோசத்துக்கெல்லாம் உட்படுகிறபடியினாலே இப்போதும் அழைக்கிறார்கள் அவர்களுறவும் நமக்குவேண்டாம் நாமும் அங்கே போகலாகாது அண்ணாவே.

நகுலன் தருமருக்குச் சொல் விருத்தம்.

விதித்தொரு பாவஞ்செய்தால் மேலதை யனுபவிப்பார்
பதைத்திடா திருக்கேபின்னம் பார்த்திடு வோமென்றாலும்
உதைத்தகால் புழுக்குமுன்னே வுளப்புமே பெருகொணாது
மதித்தவர் நட்புமவேண்டாம் வருந்துயர் நமக்குவேண்டாம்.

(வ-ம்) அண்ணாவே அவரவர்கள்செய்த பொல்லாங்கு பின்[illegible]னுபவிப்பார்களென்றாலும் உதைத்தகால் புழுக்கிறதற்கு நாட்செல்லுமதனிலும் உளப்பு பொறுக்க முடியாது அதுபோலவர்களிடத்திற்கு போனால் ஏதாகிலும் ஒரு பொல்லாங்கு வரவேண்டியதில்லை அண்ணாவே.

சகாதேவன் தருமருக்குச் சொல் விருத்தம்.

பூனைவா யெலியும்வேங்கை புலியின்வாய் மானுங்காட்டில்
ஆனைவாய்த் தழையும்பொல்லா வரவின்வாய் தேரைபோல
மானமும் வலிவும்கெட்டு வையக மிருந்தபொல்லா
ஈனமும் வருநாமங்கே ஏகவொண்ணாது சொன்னேன்.

(வ-ம்.) பூனைவாயில் எலியைப்போலப் பதைத்தலும் புலியின்வாய் மான்போல் அலேச்சலும் ஆனைவாய்த் தழைபோல குழைதலும்பாம்பின்வாய்த் தேரைபோல மடிதலும் அனுபவிக்கவேண்டியதாயாகும் ஆகையினாலே நாமங்கே போகக்கூடாது அண்ணே.

தருமர் தம்பிமார்க்கு சொல் விருத்தம்.

எரிபட வண்டகோள மிடிந்தாலு மாழிபொங்கி
பிரளயம் வந்திட்டாலும் பிதாவாக்கியந் தள்ளலாமோ
வருவது வருமெப்போது வாராதது வாராதென்றுந்
திருகொன்றுஞ் சொல்லவேண்டாம் சென்றுநாம் வருநுவோமே.

(வ-ம்) இத்தபிர்மாண்ட கடாக மிடிக்துவிழுந்தாலுஞ் சந்தசமுத்திரம்பொங்கி ஜலப்பிரளயமானாலும் பிதாவாக்கியத்தைத் தள்ளலாமோ நாம் போகாமலிருந்தாலும் வருகிறதுவரும் வராததுவராது நாம் எப்படியும் போய்வருவோம் தம்பிமார்களே.

தருமர் சேர்வைக்காரருக்குச் சொல் விருத்தம்.

பொற்புசி சேர்வைக்காரா புகழஸ்தினாபுரிக்கு
பரிவுள்ள விதுரன்பின்னே பயணமாகப் போகவேணும்
தாணிபிலாச ரோடுஞ் சதுரங்க் சேனையெல்லாம்
விருதும்ப ரிகைமுழக்கி விரைவுடன் வரச்செய்வாயே.

(வ-ம்.) ஆடா பொற்புசி சேர்வைக்காரா விதுரராசனுடன் அஸ்தினாபுரிக்கு போகவேணும் பிரயாணபேரிகை முழக்கிச் சகலராசாக்களும ரதகஜதுரகபதாதிகளும் வரும்படியாய்ச் செய்யடா சேர்வைக்காரா.

சேர்வைக்காரன் தருமருக்குச் சொல் விருத்தம்.

துதிபெறு குருகுலத்து துரைகள்ரத்தினமே யுந்தன்
பதுமபொற் பாதம்போற்றி பராக்கு எச்சரிக்கைசுவாமி
மதிபெறு சமஸ்தேச மன்னரு மற்றுமுள்ள
சதுரங்க சேனைவந்து சபையோடு சேர்ந்தாரையா.

(வ-ம்.) கேளும் ராஜாதிராஜ பரமேஸ்வரா பராக்கு சகலதேசத்தரசர்களும் வந்தார்கள் சதுரங்கசேனைகளுந் தயாராயிருக்கிறார்கள் சுவாமி.

தருமா அஸ்தினாபுரிக்கு வருகிற-தரு-இம்-கலியாணி.
திரிபுடை-தாளம்-பல்லவி.

இராஜராஜ மகிபதிதரணியில் மதிகுல தருமராசன் வந்தானே

சரணம்.

மாசில்லாத ரத்னமனு நெறிமுறைபரிகுண சேகரன்
தேசுலாவிய குணரசமிலகு சுதாகரன்
விசம்புகழ் பாண்டுபுத்திரன் மித்திர ஜனவர்களும்
பேசரிய மறைமந்திரன் சுபவசிகரன் பரிமள
வாசமிகுந்தரன் உருவில்மாரன் அதிகுலசூரபிரபல தீரன்
வரும் பிரமாண்ட திண்டிறல் மனு நெறி
தருமகண்ட மண்டலாதிபதி மகாராஜர்
மருமலரிவ்வளர் திருமருவு செடுமாலை நமஸ்கரித்து
வருசூரசேனப் பிரபகதந்தென்ன ஒளிபா முடிபைதரித்து
பொருதிறு நப்புபதேனினை புறபுகீர்த்திபைப்பொருந்து நல்ல
புதிய நவமணிவட பிரமடவினி விளிதமொடு திருத்தி
மருவளர்க்திர் திரைகொடுத்திடென்று தாழ
மருமகபதிகளருமையு னிருமருக்கு சூழ
அரிவையாகவெல்லாம் வெண்சாமரை போட
வைரிகள்பலபேரி பாண்பாவிகை பாட

அற்புதம் துதிக்கதம்பிபற்கருக்க வந்தணர் துதிக்கசம்பிரமந் துதிக்க
அந்தரதுந்துமி கவுரிகள்கொம்புகள் பிரைபம்புகள் சவுரிகள்

வண்டிரள் செப்பக் — கண்டுகள் கிடுகள்
மங்களமிகு — சந்தரன் கவுரிகள்
ஆரபாரபேரிகை — மிருத்தங்கித்
தாரைவிரைபூரிகை — தவுண்டை
மல்லரிபல — சில்லரிகருவுகள்
அலைகடலிடையெழு — திருமொழியென
அடரமழைமுழுது — லதிர்தரிகவிலென
அகமுழங்க — விருதுகள்பலர்சொல
மிதுமகிழ்ந்து — சுபகரகுருகுல-ராஜ

பாண்டவர்கள்-திருதராட்டிரனுக்குச் சொல் விருத்தம்.

சந்திர குலத்தில்வந்த தயாபரா போற்றிபோற்றி
மைந்தர்மேல் கனிவுகூர்ந்த மன்னவா போற்றிபோற்றி
விந்தைசேர் வேந்தர்க்கெல்லா மேருவே போற்றிபோற்றி
தந்தைசேர் யுந்தன்செம்பொற் ருளிணை போற்றிபோற்றி.

திருதராட்டிரன்-பாண்டவர்க்கு-வாழ்த்து கவி.

பூவிலவரும் பூரணயுசாய்
மேவியாக்கையிற் குறைவிலாவைரம்
ஆவியானபென் னருமைமைந்தரே
மேவிவேகீங்கள் மென்மேலும்வாழ்கவே.

துரோபதை திருதராட்டிரனுக்குப்போற்றி-கவி.

பூமாதென்னப் பொருமைபடைத்த
கேமாவித்த நிலம்புகழ்வெற்றி
தாமரயார்க்குந் தலைவரவேந்தன்
மாமாஉந்தன் மலர்த்தாள்போற்றி.

திருதராட்டிரன்-துரோபதைக்கு வாழ்த்துகவி.

அருமையுமறிவுமன்பும் ஒருமையுமிகவுமுள்ள
மருமக்கள்நிகரதான மருமகளேநீவாழி.

திருதராட்டிரன் பாண்டவர்களுக்குச்சொல் விருத்தம்

வழுவிலாவரசுநல்ல வளமையும்வாழ்வுஞ்சீரும்
அழகுடன்பெற்றிருக்க ளலங்காரசம்பிரமத்தை
தழுவுமென்தம்பியுங்கள் தந்தையாம்பாண்டுராஜன்
பழுதறப்பார்ப்பதற்கு பாக்கியஞ்செய்திலானே.

(வ-ம்.) கேளுங்கள் மக்களே உங்கள் தாத்தனத்தையும் பராக்கிர மத்தையும் செல்வத்தையும் அழகையும் உங்கள்பிதாவான என்தம்பி பாண்டுமகாராஜன் கண்களிக்க பார்த்து சந்தோஷப்படுகிறதற் கில்லாமல் போச்சுதே அதுதான் எனக்கொருகுறை பின்னொருகுறையு மில்லை மக்களே.

தருமர் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்.

ஞாயநீர்குமிழிவானில் தோன்றியமின்னல்போலும்
மாயும்வருதல்லன்றுன் வருந்துவதினியேதையா
தாயுமாந்தந்தையாக தருமமாநீயிருக்க
சேயராமெங்களுக்குச் சிந்தையிற்குறைவேருண்டோ.

(வ-ம்) கேளும் எங்கள் பெரியதகப்பனுரான திருதராட்டிரமகாராஜனே எங்களைவைபோகத்தை தகப்பனுகிய பாண்டுமகாராஜன் பார்க்கின்றதற்கில்லாமல் போச்சுதென்று சொல்லவேண்டியதேன் சகலத்துக்கும் நீரேதாயுந்தந்தையாகவிருக்க எங்களுக்கு வேறொரு தாழ்வுண்டோ பிதாவே.

திருதராட்டிரன் பாண்டவர்களுக்குச்சொல் விருத்தம்.

மனமகிழ்ந்துதம்பியர்கள் மண்டபமொன்றுசெய்தார்
கனமாகநீங்கள்வந்து காணவேவேண்டுமென்று
நினைவுகொண்டழைத்தேனப்பா நீங்களும்வந்துவிட்டீர்
இனிதுடனவனும்நீரும் இஷ்டமாயிருங்களப்பா.

(வ-ம்) கேளுங்கள் என்னுடைசமக்களாபாண்டவர்களேஉங்களைக் காண்கிறதற்கு எனக்குகண்ணில்லாமற்போனாலும் உங்கள்வசனத்தையாகிலும் இந்தக்காதில்கேட்கிறதற்கு எனக்கு ஆசையாயிருக்கிறது அதுவல்லாமல் உங்கள் தம்பிமார்கள் ஒருமண்டபஞ்செய்தார்கள் அதை நீங்கள் பார்க்கவேணுமென்கிற ஆசையாயழைத்தேன் கண்டுகலந்துபேசி அருமையாயிருங்களப்பா மைந்தர்களே.

திருதராட்டிரன் பாண்டவர்களுக்குச்சொல் கவி.

வளஞ்செழுமுங்கள் வரவுகண்டோன்
உளங்களிகூர்ந்தனனொருமைமைந்தரே
விளங்கியதாயையும் வீஷ்மர்தம்மையுங்
களங்கமில்லாமற்போய் கண்டுகொள்வீரே

(வ-ம்) என்பிள்ளைகளைப்பார்க்கிலும் இஷ்டமான பிள்ளைகள் இங்கே இருக்கிறீர்கள் அதுவேபோதும் வீட்டுக்குப்போய் உங்கள் தாயார் காந்தாரியை முன்னே கண்டுகொள்ளுங்கள் பீஷ்மர் துரோணர் முதலானபேரையுங் கண்டுகொள்ளுங்கள் என்னாசைமக்களே.

பாண்டவர்கள் வசனம்.

அப்படியே கண்டுகொள்ளுகிறோம் பிதாவே.

பாண்டவர்கள் காந்தாரிக்குப் போற்றி கவி.

வயமிகுவாசல் வாழ்வேபோற்றி
ஜெயமிகுகமலத் திருவேபோற்றி
வியமிகுமுலக விளக்கேபோற்றி
தயைமிகுபெரிய தாயேபோற்றி

காந்தாரி பாண்டவர்களுக்குச்சொல் கனி.

பன்றிபான தசம்மா பலகுட்டிப்போட்டாப்போலே
ஒன்றுட நூறுபிள்ளை கணக்குக்குப்பெற்றேனப்பா.

(வ-ம்) பன்றிபான தபலகுட்டிப்போட்டாப்போலே கணக்குக்கு நூறுபிள்ளைபெற்றேன் ஒன்றுக்காகிலும்புத்தியுண்டா திறமையுண்டா சௌரியமுண்டா தாஷ்டிகமுண்டா உங்களைப்போல் கீர்த்திபெற்றது ண்டா ஆருடைப்பா கெட்டேன் ஏதாகிலுமுண்டா அதுஎன்னுடைய வயறுசெய்தகொடுமை எப்படியாகிலும் நன்றாயிருங்களப்பா.

துரோபதை காந்தாரிக்குச்சொல் விருத்தம்.

இ-ப்-ஆனந்தபைரவி.

திறமுடன்வரமுமிக்க செல்வமுஞ்சிறப்புஞ்சீரும்
பொருவிலாவளமுநல்ல புத்திரபாக்கியமும்பெற்று
ஒருவருமிணையிலாத வுத்தமியென்றுசொல்லும்
மருவியபெரியமாமி மலர்ப்பதம்போற்றிபோற்றி.

காந்தாரி துரோபதைக்குச்சொல்விருத்தம்.

எருமைகள்கூட்டம்போ லெனக்குவாய்த்திடு
மருமகப்பெண்களென் மக்கட்சேர்வையோ
ஒருமைபாயுன்னைப்போ லொருபெண்காண்கிலேன்
எரியுதமெனசெய்வே னெழுந்திராய்பெண்ணே.

(வ-ம்) எருமைக்கூட்டம்போலே இந்தனைபேர் மருமகள்களுதும் எனைத்துக்குஆச்சுது ஒருகாரிக்காவது ஒருசித்துவித்தைகள்தெரியுமா உனைப்போலே மருமகள் குந்தியில்லாமற்போனுளேயென்று என்வயிறெரியுது என்னசெய்வேன் எழுந்திருமம்மா எழுந்திரு.

தருமர் துரோபதைக்குச்சொல் விருத்தம்.

மங்கைதுரோபதையேயுந்தன் மாமிபாரிடத்திற்றானே
சங்கையில்லாமல்நீதான் சதிருடனிருந்தையானுல்
துங்கமாம்பீஷ்மர்கிருபர் துரோணருமற்றுள்ளோரை
பொங்கமாய்ப்பணிந்துபோற்றி பொருந்தவேவருகுவோமே.

(வ-ம்) கேளும் பெண்ணே துரோபதை நாங்கள் பீஷ்மர் துரோணர் கிருபாசாரியர்களைக் கண்டுவருகிறோம் அதுவரையிலும் உங்கள் மாமியாரிடத்திலிருப்பாய் பெண்ணே.

துரோபதைசொல் வசனம்.

அப்படியே யிருக்கின்றேன் சுவாமி

திரியோதனன்-சேர்வைக்காரனுக்குச்சொல் விருத்தம்.

திண்டிறல்சேர்வைக்காரா சீக்கிரமாகவோடி
மண்டபத்தனைப்பார்க்க வரச்சொன்னேனென்றுசொல்லி
எண்டிசைபுகழுமிந்த எழிற்பஞ்சபாண்டவாளை
கொண்டேற்கொளுவுக்கிப்போ கொப்பெனவழைத்துவாடா

வ-ம். ஆடா சேர்வைக்கார இந்திரப்பிரஸ்தத்திலேயிருந்து பாண்டவர்கள் ஐந்துபேரையும் இந்த மண்டபத்தைப்பார்க்க நானழைத்தேனென்று அதிசீக்கிரமா யழைத்துவாடா.

சேர்வைக்காரன்-சொல் வசனம்

அப்படியேயழைத்துவருகிறேன் சுவாமி.

சேர்வைக்காரன் தருமருக்குச்சொல்விருத்தம்

மன்னவர்மன்னாபோற்றிமநுமுறைதெரிந்தாய்போற்றி
தன்னகரில்லாபோற்றிதருமபூபாலாபோற்றி
பொன்னின்மண்டபத்தைப்பார்க்கப்பொருந்தியுங்களையேயிப்போ
நன்னயராஜராஜனையமுடன்வரச்சொன்னாரே.

வ-ம். இராஜாதிஇராஜபரமேஸ்வர இராஜமார்த்தாண்ட இராஜகெம்பீர சத்திபபிரபுடா சத்திபபரிபாலகா தர்மபுத்திர மகாராசனே சுவாமி பராக்கு துரியோதனமகாராசன் உங்களையழைத்துவரச் சொன்னார் சுவாமி.

தர்மர்சொல்-வசனம்.

அப்படியேவருகிறோம்பிள்ளாய்,

தர்மர் துரியோதனனைத் தழுவிக்கொள்ளும் விருத்தம்.

திருவருளுலகமூன்றும் திறமுடனுதித்துப்போற்றும்
தருமபுத்திரனேயெந்தன் தமையனேசரணம்வாரும்
பெருமையும்புகழும்வாழ்வும் பெருந்துரியோதனுவுந்தன்
அருமைசேர்தம்பிமார்க ளனைவருமநீயும்வாழி

துரியோதனன்-தருமருக்குச்சொல் விருத்தம்.

வழுவுறவுங்களுக்கு மயனென்னுந்தெய்வதச்சன்
தழுவுறசெய்துதந்த சபையிலுமதிகமாக
செழுநவரத்தினத்தாற் சிறக்கரான்செய்துவைத்த
அழகியமண்டபத்தி னலங்காரம்பாராயண்ணே.

வ-ம். கேளும் அண்ணா தருமபுத்திரரே முன்னாலே வுங்களுக்கு மயனென்னுந்தச்சன் செய்துகொடுத்த சபையைப்பார்க்கிலும் அதிகமதிகமாகச்செய்துவைத்தேன் இந்த மண்டபத்தினுடைய அலங்காரத்தைப்பாராயண்ணே.

தர்மர்-துரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

சுந்தரமிகுந்ததம்பி துரியோதனநீகேளாய்
அந்தமாமண்டபங்க ளனேகம்நான்பார்த்ததுண்டு
விந்தையிதென்னசொல்வேன் விளங்குமுவுலகந்தன்னில்
இந்தமண்டபத்தைப்போல வெங்குநான்கண்டிலேனே.

வ-ம், துரியோதனா நான் அனேக மண்டபங்கள் பார்த்திருக்கி றேன் ஆனால் இந்த சொர்க்க மத்திய பாதாள திரிலோகத்திலும் இப் படிப்பட்ட உன்னிதமான மண்டபத்தை நான் எங்கும் கண்டதில்லை வெகு லட்சணமாயிருக்கின்றது.

சகுனி-துரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

நூதனமாகச்சென்று நுட்பமாயலங்கரித்து
ம்சாதிச்சர்மண்டபத்தில் துரைமக்கள்வந்துகூடி
போதவேமகிழ்ச்சியாகப் பொழுதுபோம்படியாயிங்கே
ஏதொருகாலட்சேப மில்லாமலிருக்கலாமோ.

(வ-ம்) கேளும் என்னுடைய மருமகனான துரியோதனா இந்த அலங் காரமண்டபத்திலே எங்களைப்போலொத்த துரைமக்களெல்லாம் வந் துசும்மாயிருக்கிறது நன்றாயிருக்கவில்லை பொழுதுபோகும்படியாய் ஏதாகிலும் ஒருகாலட்சேபம் பண்ணவேணுங்காணும் துரியோதனம காராஜனே

துரியோதனன்-தர்மருக்குச்சொல் விருத்தம்.

ஆமிதுமெய்தான்மெய்தா னண்ணாகேளொருவின்னப்பம்
நாமெல்லாம்போசனத்துக் கெழுந்துபோந்தனிலுமிங்கே
மாமனுநீயுமாக மகிழ்ச்சியாவெழுந்திருந்து
தோமரவேயோராட்டஞ் சொக்கட்டானாடுவீரே.

(வ-ம்) ஆ ஆ மெய்தான் மெய்தான் மெய்தான் மாமா சபாசு நன் றாயச்சொன்னீர் அண்ணா தருமபுத்திரமகாராசனே நாமெல்லோரும் போசனத்திற்குப் போகுமுன்பாக மாமாவும் நீயும் ஒரு ஆட்டஞ் சொக்கட்டான் போடுங்களண்ணே.

தருமர்துரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

வேதனாவிருக்கஞானம் விளங்கநூலிருக்கநல்ல
நீதிசாஸ்திரமிருக்க நிபுணர்கள்பலரிருக்க
நூதனமாகச்செய்த நூவனூறுமண்டபத்தில்
சூதிதுமடையர்செய்யுந் தொழிலையோசெய்யவேண்டும்.

வ-ம். கேளுந்தம்பி துரியோதனா வேதங்கள் சாஸ்திரங்கள் மனுவி க்கியானங்கள் இது முதலான தருமசாஸ்திரங்களிருக்க இந்த அலங் காரமண்டபத்தில் மூதல்முதல்புத்தியில்லாதவர்கள் ஆடப்பட்டசொ க்கட்டானா ஆடவேண்டும் வேறேயொரு தொழிலில்லையா தம்பி துரி யோதனா

பீஷ்மர்-துரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

சண்டையும்பகையும்யாருஞ் சாற்றியபிழையும்பொய்யும்
கண்டிதமொழியும்பொல்லாக் கலகர்கள்குடியிருப்பார்
கொண்டுகேள்சூதிவித்தை கொற்றவர்க்காகாதிந்த
மண்டலந்தன்னிலின்ன மற்றொன்றைச்செய்யலாமே.

(வ-ம்.) சண்டைக்கும் பகைக்கும் சத்திபதநிற்கும்பொய்க்கும்வேறெதுக்குமெதுவாயிருக்கப்பட்ட இந்தசொக்கட்டானு இல்லை ஆட வேணும் இது இராசசபைக்கு யோக்கியமல்ல வேறொரு காலக்ஷேபஞ்செய்யலாந் துரியோதனமகாராஜனே.

அர்ச்சுனன்-துரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

மனதினிலொன்றைவைத்து வாக்கினிலொன்றைப்பேசி
துனிவருந்துரோகஞ்செய்வோர் சூதாடநினைப்பதல்லாற்
றனதுபாராட்டிதம்பி தமையனென்றொருமையுள்ளோர்
கனவிலுஞ்சூதமாடக் கருத்தினினினைந்திடாரே.

(வ-ம்.) கேளும்துரியோதனு மனதினிலொன்றைநினைத்து வாக்கில் ஒன்றைச்சொல்லி ஒருவருடைய பொருளை ஒருவரபகரிக்கவேண்டுமென்று நினைக்கப்பட்ட துரோகிகள் அந்த சொக்கட்டானுடுவார்களேயல்லாமல் தன் தாய் அண்ணன் தம்பிகளென்று ஒருமையாயிருக்கப்பட்டவர்கள் ஒருக்காலுமிந்தச்சூதாடலைநினைக்கமாட்டார் துரியோதனு.

தருமர்-துரியோதனனுக்குச்சொல் விருத்தம்.

மனதினில்வஞ்சம்நினைந்த மாமனைஎதிரியாக்கிச்
சினத்தசூதாலேயெங்கள் செல்வத்தைப்பறிக்கலுற்றாய்
நினைத்ததையெதுகேட்டாலும் நிமிஷத்திற்றருவேனித்த
அனர்த்தமாஞ்சொக்கட்டானை யாடுவதொழித்திடாயே.

(வ-ம்.) கேளுந்துரியோதனு சகுனிமாமனை எனக்கு எதிரியாக்கி கட்டசூதாடி எங்கள்செல்வத்தைப் பறித்துக்கொள்ளவேண்டியதில்லை நீஎதைக்குறித்துக் கேட்டாலுந் தடையில்லாமல் நானதருகிறேன் இந்தச்சூதாடுகிறதை நிறுத்தவேணுந்தம்பி துரியோதனு.

சகுனி-தருமருக்குச்சொல்விருத்தம்.

சுந்தரமாயோராட்டஞ் சொக்கட்டானுடச்சொன்னால்
சிந்தையுநடுநடுங்கி திகிற்பட்டநீதானுமேல்
புந்தியிலநினைந்துகேட்ட பொருளெல்லாந்தருவனென்றாய்
பந்தயமாய்நீகொடுக்கும் பவுஷிதோதெரிந்துபோச்சே.

(வ-ம்.) கேளுந்தர்மராஜனே ஓராட்டஞ் சொக்கட்டானுடுவோமென்று சொன்னமாத்திரத்திலே பயந்துநடுநடுங்கி திகிலபிடித்து கழகழவழவழ பசபசவென்று முழிக்கிறீர் நீர்தானு துரியோதனமகாராஜன் கேட்டதெல்லாங் கொடுக்கப்போகிறாய் நீகொடுக்கப்போகிறபவுஷு இதிலே தெரிந்துபோச்சுதேபோ ஆ-ஆ தர்மபுத்திரரே.

கர்னன்-தருமருக்குச்சொல் விருத்தம்

கதித்தசூதாடிவெல்லக் கையிலாகாதநீதான்
எதிர்த்தபோர்க்களத்திலின்று யாரைநீவெல்லப்போதீர்

விதித்ததம்பியரும்நீரும் கிலகிலத்துளறிக்கொண்டு
பிதற்றுநீர்விட்டுவிட்டோம் பிராணனைக்காத்துக்கொள்வீர்.

(வ-ம்) கேளுந் தருமராஜனே சொக்கட்டானுடி வெல்லப்போறுய் அதுவெளிச்சந்தான் இவ்வளவுக்கே உன்தம்பிமாரும் நீயும் கிலகிலத்து சலகலத்து கிடுகிடென்று நடுநடுங்கி முன்பின்தோன்றுமல் பினத்துகிறீர்கள் நல்லது உங்களை விட்டுவிட்டோம் நீங்கள் அடங்கலும் உங்கள் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள் போங்கள்போங்கள் வேலைமெனக்கிட்ட தாசிரிகளா.

அர்ச்சுனன்-கர்னனுக்குச்சொல் விருத்தம்.

வஞ்சனைநினைத்தழைத்து மாயசூதாடச்சொல்லி
கொஞ்சமென்றிகழ்ச்சிசெய்து குதிக்கிறுயடாகர்ண
நஞ்சினையிகழ்ச்சிசொன்ன நாக்கையுமறுத்துவுந்தன்
நெஞ்சினைப்பிளந்துவெட்டி நிணக்குடலெடுப்பேன்பாராய்

(வ-ம்.) கேளடா அடாகர்ணு கபடமார்க்கமாக எங்களை அழைப்பித்துவந்து சூதாடச்சொல்லி இகழ்ந்துபேசுகிற உன்னுக்கையறுத்து நெஞ்சைப்பிளந்து நிணக்குடலெடுக்கிறேன் இதோ அஸ்திரம்வருகின்றது இதைப்பிடித்துகொள்ளடா கர்ணு.

தர்மர்-அர்ச்சுனனுக்குச்சொல் விருத்தம்.

அடுத்தடுத்தென்சொன்னலும் அடாதம்பிஅர்ச்சுனுகேள்
பொறுத்தவர்பூமியாள்வார் பொறுபொறுபதறவேண்டாம்
தடுத்துநாம்சொல்வதென்ன தருமமேஜெயமென்றெண்ணி
பொறுத்திமாமனேடே போராட்டம்மடுவோமே.

(வ-ம்) கேளடாதம்பி அர்ச்சுனு பொறுத்தவர்பூமியாள்வார் பொங்கினவர் காடாள்வார் என்றவார்த்தையை நீ கேட்டதில்லையா அவர்தான் அதர்மம்பண்ணினுலும் இகழ்ந்து பேசினுலும் உனக்குக் கோபம் வரலாமா பொறு பதருதகாரியஞ் சிதருது நல்லது தருமமேஜெயம் ஒரு ஆட்டந்தான்போடுவோம் திருவுளமிருக்குது.

துரியோதனன்-தருமருக்குச்சொல் விருத்தம்.

இதுசரிநன்றுய்ச்சொன்னீ ரின்றுனைமெச்சிக்கொண்டேன்
சதிசெய்வனென்றுசொல்லி சற்றுநீயஞ்சவேண்டாம்
நிதியில்நீதோற்றதெல்லாம் நீதானேகொடுக்கவேண்டும்
பதியிலென்மாமன்தோற்ற பந்தயம்நானேதாரேன்

(வ-ம்) இதுவெகசரி சபாசு இப்படியல்லவோ துணியவேணும் அண்ணுகர்மபுத்திரரே இப்போது உன்னை மெச்சிக்கொண்டேன் முன்னேதானே சம்மதிக்கலாகாதா நாம் பாலுந்தேனும்போல இருக்கிற அண்ணன் தம்பிகளுக்குள்ளே ஏதாகிலுமொருவஞ்சனை நடக்குமா நடக்காது ஆனுல் நீர்தோற்றதேயுண்டானுல் நீரேகொடுக்கவேண்டும் என்மாமன் தோற்றபொருளைநானேகொடுக்கிறேன் போடுங்கள் பார்ப்போம்.

தர்மர்-சகுனிக்குச்சொல்-விருத்தம்.

எந்தனுக்கெதிரியாக யிருந்தந்தகெடுசூதாட
தொந்தமாய்வாயுங்கையுந் துடிக்கின்றசகுனிமாமா
விந்தையாய்நூறுகோடி விலைபெற்றமுத்துமாலை
பந்தயமாக்குறித்து பண்புடன்வைத்தேன்பாராய்

(வ-ம்) என்னுடனேகூட சொக்கட்டானுடுகிறதற்கு வாயுங்கையுந் துடிக்கின்ற சகுனிமாமா இதோ நூறுகோடி பொன்பெற்றமுத்துமாலையை இதோபந்தயமாக கட்டிவைத்தேன் பாராய்.

துரியோதனன்-தருமருக்குச்சொல் விருத்தம்

சாந்தமாங்குணத்தின்மிக்க தர்மபுத்திரரேகேளாய்
வேந்தனென்மாமன்வைக்க வேண்டும்பந்தயத்துக்காக
போந்திடும்நூறுகோடி பொன்பெற்றவலையமித்தைப்
பந்தயமாயெவரும்பார்க்க பத்தியம்வைத்தேன்பாராய்

(வ-ம்) கேளாய் அண்ணே தருமபுத்திரரே என்சகுனிமாமன்வைக்கவேண்டிய பந்தயத்துக்காக இதோ நூறுகோடி பொன்பெற்றயாகுவலயத்தை எதிர்பந்தயமாகவைத்தேன் இதோபார்த்தீர்.

முதலாவது ஆட்டம்.



தருமர்சொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

ஸ்ரீகிருஷ்ண அரிகிருபை யாளா-யுந்தன்
செயலல்லவோ தீனதயாளா ஸ்ரீகிரு

(வ-ம்.) ஓய் தருமராசா[illegible]ணத்தோண்ணுமுதல் விழுந்தபடியினாலே உம்மிட ஆட்டங்[illegible]போகும் முன்போடுகிறேன பாரும்

சகுனி சொல் தரு.

ஓடிவாடாசூட்டிச் சாத்தான்-எந்தன்
உருட்டுக்கும்பிரட்டுக்கும் உதவிசெய்காத்தான்-ஓடி

(வ-ம்.) பன்னிரண்டு பத்துகாய்வைத்தபிறகு

தருமர்சொல் தரு சத்தியமேதுணை தருமமேஜெயம்.

சத்தியமேதுணையென்றுந் தர்மமேஜெயமென்றும்
உற்றுநினைத்தபேர்க்குவுண்டோவுண்டோ லயம்-சத்தி

(வ-ம்.) காலத்தோரஞ்சு.

சகுனிசொல் தரு

தந்திரமேதுணையென்றன்சமர்த்தே ஜெயமென்றும்
இந்திரஜாலம்கற்றனக்கென்னமோ லயம்-தந்தி

இதுவும் சகுனிசொல் தரு.

அக்கிரமந்துணையென்றும் அவர்க்கேஜெயமென்றும்
தக்கவித்தைகள்கற்றசகுனிக்கென்ன பயம்-அக்கி

(வ-ம்.) இருபகடை பன்னிரண்டு எட்டு இரிக்காலொன்பது

தருமர்சொல் தரு.

பதராமலேயாடுங்காணும் மாமா
பதராமலேயாடுங்காணும்
பதராமற்பாச்சிகைபக்குவமாய்ப் போடு
பந்தயம்விழுந்ததைப்பார்த்தாட வேணும்-பதரா

(வ-ம்.) காலுமூணேழு.

சகுனிசொல் தரு.

சுருக்காகத்தாடவேணும் தம்பி
சுருக்காகத்தாடவேணும்
சுருக்காகபாச்சிகைவெறுக்காமலே போட்டு
சுருக்காகவேயாடுகுறுக்காகப் பேசாதே-சுருக்

(வ-ம்.) இரண்டெட்டு இரண்டுதுகை பத்து

தருமர்சொல் தரு.

விழுபன்னிரண்டொருபத்து ஆ-ஆ
விழுபன்னிரண்டொருபத்து
விழுபன்னிரண்டொருபத்து விழுந்தாக்கால்
முழுதுங்குச்சுமக்காயால் [illegible]னேகட்டலாஞ்சோடு-விழு

(வ-ம்.) மூணத்தொண்ணு.

சகுனிசொல்-தரு.

நான் கட்டுவேன் முன்னேசோடு தம்பி
நான்கட்டுவேன் முன்னேசோடு
நான்கட்டுவேன் முன்னேசோடு
நான் கட்டகருங்குங்குமக்காயைரெண்டையுங் குத்தி-நான்

(வ-ம்) இரிக்கால்-பன்னிரண்டு ஒன்பது.

தருமர்சொல்-தரு.

பத்தும்பகடையும்வேணும் இப்போ
பத்தும்பகடையும்வேணும்
பத்துடனேபொருபகடையும் விழ்ந்தால்
குத்தினகாய்நட்டுகுங்குமமுங் கட்டலாம்-பத்து
(வ-ம்.) காலத்தோரஞ்சு

சகுனிசொல்-தரு.

கட்டினஜோடுபேறவேணும் இப்போ
கட்டினஜோடுபேறவேணும்
கட்டினஜோடுசேர்த்துக்காயுமொயில் போட்டு
எட்டுக்குங்குமக்குத்திலட்டுபோடவே வேணும்-கட்

(வ-ம்.) இரண்டு பன்னிரண்டு-பத்து.

தருமர்சொல-தரு.

என்கையிற்பந்தயங்காணும் மாமா
என்கையிற்பந்தயங்காணும்
என்கையிற்பந்தயமேனேவிழக் காணும்
முன்கையிலாறென் னுமூணத்தோ னல்லாமல்-என்

(வ-ம்.) ஆறெண்ணேழு.

சகுனிசொல்-தரு

பன்னிரண்டுதுகையெட்டும்வேண்டும் இப்போ
பன்னிரண்டுதுகையெட்டும்வேண்டும்
பன்னிரண்டுதுகையெட்டுபந்தயம்விழுந் தாக்கால்
பலித்தும்நமதாட்டம்கெலிக்கும்கெலிக்கு மொரு-பன்

(வ-ம்.) இரிக்கால்-துகை-பன்னிரண்டு-எட்டு-பத்து.

சகுனியும் துரியோதனனும் சந்தோஷப்பட்டுச்சொல்விருத்தம்.

என்னுடைசமருமகனுன யெழில்துரியோதனகேள்
மன்னுனதர்மர்முத்தமாலையைநான்கெலித்தேன்
பொன்னுனமாமாவு[illegible]ப் புகழ்ந்திடவென்னலாமோ
முன்னுனவலக்கை[illegible]முத்தம்நான்தருகுவேனே.

(வ-ம்) என்னுடைய மருமகனான துரியோதனமகாராசனே தருமராசன் பந்தயமாகவைத்த முத்துமாலையை கெலித்தேன்.

(வ-ம்.) ஆ ஆ சகுனிமாமா உன்சாமர்த்தியம் என்னால்சொல்லமுடியுமோ ஏதோ உன்வலக்கையைத்தாரும் ஒருமுத்தங் கொடுக்கிறேன்.

சகுனி-தருமருக்குச்சொல் விருத்தம்.

மதியுள்ள தருமபுத்ரா மனதுநீதளரவேண்டாம்
முதல்முதல்தோற்றபேர்கள் முற்றிலுங்கெலிப்பாருந்தன்
ரதகஜதுரகநாடு நகரத்தைக்குறித்துமேலும்
உறமுடனினிபோராட்ட மின்னமுமாடுவோமே.

(வ-ம்.) கேளும் தருமராசனே நாம்தோற்றுப்போனோமென்று நினைக்கவேண்டாம் முதல்தோற்கிறது நல்லது இனிமேல் நீகெலிப்பாய் ஆகையால் உன்னுடைய ஆனைசேனை நாடுநகரம் பரிவாரங்குறித்து பந்தயங்கட்டி இன்னுமொருதரம் ஆடுவோம் வாரும் தருமராசனே.

இரண்டாவது ஆட்டம்.

சகுனிசொல்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-மிசுரதாளம்.

நானேகெலிக்கிறேன்பார் இந்த-ஆட்டம்
நானேகெலிக்கிறேன்பார்
கோனானதருமர்கொடித்தேருங் குதிரையும்
ஆனையுஞ்சேனையுமவராளுந் தேசமும்-நானே
(வ-ம்) இரிக்கால்-எட்டு பனிரண்டுபத்து.

தருமர்சொல் தரு.

தருமமேசத்தியம் அரி அரி
தருமமேசத்தியம்
இம்மையிற்கோடி இடறுகள் வந்தாலும்
நன்மைசேர்நாடுநகரத்தை தோற்றாலுந்-தரும
(வ-ம்.) துகைநாலத்தோரஞ்சு.

சகுனிசொல்-தரு.

இனிவிடுவேனோ நான்கொஞ்சத்தி
லெழுந்திருப்பேனோ
சனிபாபேழரைநாட்டுச்சனிபோல பிடித்து
முனிவாயெதிர்பந்தயமுழுதுமோடி படித்துநானே-இனி
(வ-ம்.) பனிரண்டு பத்து.

தருமர்சொல்-தரு.

விட்டுவிட்டாலும் விடாமல்நான்
கட்டுபட்டாலும்

குட்டுபெட்டாலும்குறைவந்து நேர்ந்தாலும்
கஷ்டப்பட்டாலும்நடுக்கம்வந் திட்டாலும்-விட்டு
(வ-ம்.) இரிக்கால் பத்து

சகுனிசொல்-தரு.

ஏற்கவேசூது வழவமென்று
விதற்கெலிப்பேது
பார்க்கலென்துகையைப் பொக்கிஷதொட்டி
மூர்க்கமாய்த்தொடைதட்டிமுன்னே ஜோடுகட்டி-ஏற்க
(வ-ம்.) பனிரண்டு துகைபத்து.

தருமர்சொல்-தரு.

சூதுசெய்தாலும் எண்ணமலும்
போறுசெய்தாலும்
காதகஞ்செய்தாலுங்கபடமே செய்தாலும்
தோதகஞ்செய்தாலுந்தொந்தரை செய்தாலும்-சூது
ஆறெண்ணேமூ.

சகுனிசொல்-தரு.

பாண்டவர்சாரை சகுனியென்னும்
பாம்பின்வாய்த்தேரை
பாண்டவரென்னைப்புழித்துச் சொல்லாவண்ணம்
பூண்டதிருதுமுடிந்தது என்னெண்ணம் நானே
(வ-ம்) பன்னிரண்டு-எட்டு ஆறுநாலு பத்து.

தருமர்சொல்-தரு.

மிக்கவேபின்று எங்களெவ்
விதத்திலும்வென்றே
சொக்கட்டானடித்துஜெங்கட்டி யாண்டாலும்
இக்கட்டாலெங்களுக்கிடர்வந்து மூண்டாலும்-தரும

சகுனி சந்தோஷப்பட்டு துரியோதனனுக்குச்சொல்கொச்சகம்.

அஞ்சபேருந்தவிர யானைபரிசேனைரதம்
இஞ்சவுள்ளநாடுநக ரினபமிகுசேனைரதம்
வஞ்சவுப்புசட்டி வரவோடமில்லாமல்
பஞ்சவரைபஞ்சாய்ப்பறக்கடித்தேன்பார்த்திரா.

(வ-ம்.) கேளும் என்னுடைசமருமகனான துரியோதன மகாராசனே இந்தப் பாண்டவாளைவர்தவிர இவர்களுக்குள்ள ரதகஜதுரக பதாதிகளையுங்கெலித்து உப்புசட்டி வரவோடுங்கூட இவர்களுக்குச் சதந்திரமில்லாமல் பஞ்சவரை இலவம்பஞ்சாய்ப் பறக்கடித்தேன் பார்த்தையா துரியோதனமகாராசனே.

துரியோதனன் சகுனிக்குச்சொல் விருத்தம்.

இத்துடன்விடலாகாது இவர்க்குள தம்பிமாரும்
அத்துடனிவருமாக ஐவர்துபேரையுங்குறித்து

எத்துடனினியோராட்டம் விளையவேகன்றுயாடி
கொத்துடன்கெலித்தாலெங்தன் குலதெய்வம்நீரமாமா

(வ-ம்.) கேளுங்காணும் ஒய்மாமா இதிலேமகிழ்ந்துபோரும் வீமன் அர்ச்சுனன் நகுலன சகாதேவன் இன்னம் நாலுபேருமிருக்கவில்லை யா இந்த தருமராஜாயிருக்கவில்லையா ஆகவைந்துபேரையுங்குறித்து இனியோராட்டம் போட்டாலல்லவோ சரி.

சகுனிதிரியோதனனுக்குச்சொல்விருத்தம்

நகைமொழிசொன்னீர்முட்ட நனைந்தவர்க்கீரமுண்டோ
மருவுமென்வார்த்தைதன்னை மனதினில்நிசமென்றெண்ணி
அகமகிழ்ந்தாடுவோமென் றவர்களேசொல்லுவார்கள்
தருமைமருமகனேசும்மா சற்றேநீயிருந்துபாராய்.

(வ-ம்) ஆஆ மருமகனே முட்டநனைந்தவர்களுக்கு ஈரமுண்டா நாடுநகரம் ஆனைசேனை பரிவார மிதுகளெல்லாந் தோற்றுவிட்ட மகா ரோஷக்காரரான பாண்டவர்கள் தங்களஞ்சுபேரையுங்குறித்து ஆடப்போகிறார்கள் பொருந்திரியோதனமகாராசனே.

சகுனி-தருமருக்குச்சொல்-விரு த்தம்

தருமபுத்திரனேநீதான் சற்புத்திரனகையாலே
மருவுமென்வார்த்தைதன்னை மனதினில்நிசமென்றெண்ணி
ஒருமையுன்தம்பிமாரு முன்னையுங்குறித்தேயின்னம்
அருமையாய்நாமோராட்டம ஆடுவோமாடுவோமே

(வ-ம்) கேளுந் தருமபுத்திரனே நீ சற்புத்திரனனபடியால் என் சொல்லைத் தள்ளமாட்டாய் இப்போ உன்தம்பிமாரையும் உன்னையும் ஆக ஐந்துபேரையுங்குறித்து இன்னமோராட்டமாடுவோம்வாருந்த ருமராசனே

தருமர் சகுனிக்குச்சொல்விருத்தம்

ஆவதுந்தெய்வத்தாலே யழிவதுந்தெய்வத்தாலே
மேவியநம்மாலிங்கே வேறொன்றுநடப்பதில்லை
தாவியவெங்களையுங்கூட கனக்குறித்தாடச்சொன்னீர்
கோவிலில்முறையைச்சொன்னீர் கொப்பெனவாடுவோமே

(வ-ம்) ஒய்மாமா தோற்புங்கெலிப்பும் நன்மையுந் தின்மையும் ஆகிறதும் அழிகிறதும் திருவுளச்செயலேய லாமல் நம்முடைய செயலல்ல எ லாநதோற்றுப்போன எங்களையுங்குறித்து ஆடுமென்றுசொல்லுகிறீர் நல்லநீதி அப்படியே யாடுவோம வாரும்

சகுனி துரியோதனனுக்குச்சொல் வசனம்

ஆஆ மருமகனே தருமபுத்திரன் மகாபுத்திசாலி ஐந்துபேரைங்குறித்து ஆடுகிறதற்குப் பின்வாங்கமாட்டானென்று முன்னேதானே சொன்னேன் பார்த்தீரா திருஷ்டாந்தம்

மூன்றுவது-ஆட்டம்.

சகுனிசொல்-தரு.

அஞ்சுபேரையுமிப்போ கெலிக்கிறேன்-நமக்
கடிமைத்தொழில்புரிய வலிக்கிறேன்
கொஞ்சும்பரியுந்தேரும் குடையும்பரியும்போக்கி
தஞ்சம்நாடுநகரஞ் சகலமும்நம்மதாச்சு-அஞ்சு
(வ-ம்.) மூணுபன்னிரண்டு-எட்டு-இரிக்கால்-நாலத்தோரஞ்சு.

தருமர்சொல்-தரு.

உங்களுக்கேசெல்வம் பெருக்கட்டும்-நாங்க
ளொடுங்கினலுந்தர்ம மிருக்கட்டும்
எங்களுக்கினியெல்லா மிடறுகள்வந்தாலும்
அங்கங்குன்றியுங்கட் கடிமையாய்ப்போனலும்-உங்
(வ-ம்.) மூணத்தொண்ணு.

சகுனிசொல்-தரு.

கடலெல்லாந்தாண்டியோர் கால்வாயைத்தாண்டவென்
கையிலாகாதென்று விடுவேனே-பெருங்
கட்டையெல்லாம்வெட்டி கட்டுப்போடவொரு
கரும்பைவெட்டபயப் படுவேனே-இந்த
அடியிலேதிரிக் கடந்தபந்தயம்போட்டு
அச்சத்தில்தத்திப்பற்றி யத்திக்குத்தி-அஞ்
(வ-ம்.) நாலெட்டு-பனிரண்டு-இரிக்கால் துகை-நாலத்தோரஞ்சு.

தருமர்சொல்-தரு.

பேருமூரும்வாழ்வும் பெண்டுபிள்ளையும்நாம்
பிறந்தபோதேகூடப் பிறந்ததோ-இந்தப்
பேதகஞ்செய்தவன் னிதஞ்செய்துமன்னர்
பெற்றசெல்வமும் பின்சிறந்ததோ-மாமா
நேருமிரவிதன்னில் நிலவுஞ்சிலதுகாலம்
ஆருமுளநடுக்கு மிருளுஞ்-சிலகாலம்
(வ-ம்.) நாலத்தோரஞ்சு.

சகுனிசொல்-தரு.

மலைகளெல்லாங்கையால் வாரியுண்டுகுண்டு
மணியைக்கண்டுபயப் படுவேனே-பகை
வந்துசேர்ந்தபோது வேரைக்கெல்லிடாமல்
வழவழவென்றுவிட்டு விடுவேனே-இதோ
மெய்யுமெளிதிற்சாரை வெளியிற்புறப்படாமல்
வெட்டிக்கிட்டிக்குட்டிக் கட்டிக்கொட்டிக்கட்டி-அஞ்
(வ-ம்.) இரண்டுபன்னிரண்டு-இரண்டெட்டு துகைமூணத்தொண

தருமர்சொல்-தரு.

போகாதபொருள்தன்னை போவென்றுசொன்னாலும்
போகாமலொன்றுப் தாருமோ-விட்டு
புதைத்திவைத்தாலுந்தா னிருக்குமோமாமா
புண்ணியவசமப்படியிருந்தால் நானென்செய்வேன்
வாகானவுலகத்தில் மழையுஞ்சிலதுகாலம்
வேகமானகோடை வெயிலுஞ்சிலதுகாலம் போ

(வ-ம்.) மூணத்தொண்ணு.

சகுனிச்சொல்தரு.

முன்னேவைத்தகாலைப் பின்னேவைத்துயென்னால்
முடியாதென்றால்சகுனி யாவேனோ-எண்ண
முடியுமட்டுமொரு காலில்நின்றேயதை
முடிக்காமலெழுந்துநான் போவேனோ-நான்
சொன்னசொல்லுக்கொரு சின்னம்வந்திடாமற்
கூட்டிகூட்டிப்போட்டுக் காட்டிமூட்டிவாட்டி-அஞ்

(வ-ம்.) நாலெட்டிரண்டரிக்கால்-துகை-ஒன்பது.

தருமர்சொல்-தரு.

கபடமெண்ணிப்பொல்லா துரோகஞ்செய்துவருங்
கனத்தைத்தேடுவதென்ன யுத்தியோ-சும்மா
கதறிக்கதறிக்கள்ள கயிறுருட்டிப்பகடைக்
காயில்வெல்லுவதென்ன வெற்றியோமாமா
குவியுங்கடலிநீரைக்குடத்தி லடைக்கலாமோ
குடிக்கும்வம்பரைபோலத் துடிக்குஞ்சகுனிமாமா-கபட

(வ-ம்.) நாலத்தோரஞ்சு.

சகுனிச்சொல் விருத்தம்.

தருமபுத்திரன்செருக்கும் தம்பிவீமன்கொழுப்பும்
மருவுமர்ச்சுனன் துடிப்பு மற்றிருவர்கள்பதைப்பும்
அரிவைதுரோபதைநொடிப்பு மவள்சிரித்திடும்சிரிப்பும்
ஒருநொடியிலென்கையா லொடுங்கிப்போனதைக்கண்டீரோ.

(வ-ம்.) பார்த்தீர்களா பார்த்தீர்களா தர்மபுத்திரன் செருக்கும் தம்பிவீமன்கொழுப்பும் அர்ச்சுனனுடைய துள்ளலும் இந்தப்பசங்களுடையமுறுக்கும் அந்த துரோபதையினுடைய குலுக்கும் பலுக்கும் கெலிப்பும் சிரிப்பும் ஒரு சகுனிகையிலேவந்து ஒடுங்கிப்போனதைபார்த்தீர்களா ஆ ஆ.

துரியோதனன் தருமருக்குச்சொல் விருத்தம்.

தெய்வத்தின்செயலோநான்முன்செய்தபுண்ணியமோ நீங்கள்
ஐவருந்தோர்த்திரெங்க ளடிமையாய்ப்போனீரப்பால்

மைவருங்கண்ணுளந்த மாதுதுரோபதையைவைத்து
கைவரவினியோராட்டங் கருத்துடனுடுவீரே.

(வ-ம்.) கேட்டீரோ தருமபுத்திரரே நீங்கள் ஐவருந்தோற்று எங்களுக்கு அடிமையாய்ப்போனதினுலே நீங்களைந்துபேரும் தொட்டுப் பார்க்கிறீர்களே அந்த அழியாத பத்தினியைக் குறித்து ஓராட்டம் போடுங்கள் பார்ப்போம்.

பொதுவசனம்.

(வ-ம்.) இப்படியாய் துரோபதையைக் குறித்து ஆடச்சொல்லி துரியோதனன்சொல்ல திருதராட்டிரனைப் பார்த்து விதுரமகாராசன் சொல்லுகிற விதங்காண்க.

விதுரன் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்.

ஐயையோகெடுவாயிந்த வஞ்சீதமுலகிலுண்டோ
நையவுன்குடிக்குநாச காலமும்வந்துதோதான்
பொய்வளர் அண்ணன்தேவி பெற்றதாயாச்சேயந்த
தையலைக்குறித்தேயாடத் தகாதென்றுசொல்லொணுதே.

(வ-ம்) கேளாய் அண்ணு திருதராட்டிர மகாராசனே இவ்வனியாயம் உலகத்திலுண்டோ உன்னுடைய சமஸ்தானத்துக்கு என்ன கேடுகாலம்வந்துதோ உன்மகனுக்கு அந்த துரோபதையம்மன பாரியாளானபடியால் தாய்க்குச் சமானமாச்சுதே அவளையும் வைத்தாடச்சொல்லி உன்மகன் சொல்வதைக்கேட்டு நீ சும்மா யிருக்கலாமா உன்சொல்லைத் தள்ளிப்போடுவானு வேண்டாம் வேண்டா மென்று ஒருவார்த்தையைச் சொல்லத்தகாதா ஐயையோ அண்ணே.

சகுனி விதுரனுக்குச்சொல் விருத்தம்.

தோற்றுப்போனவர்களொன்றுஞ்சொல்லாமலிருக்கமேலும்
வார்த்தையைச்சொல்லாமல்மற்ற மன்னவர்பார்த்திருக்க
வீற்றமாந்தலையிறக்க முனக்கிப்போவந்ததென்ன
யேற்றவுன்ஞாயமிங்கே யிருக்கட்டும்போம்போங்காணும்.

(வ-ம்.) தோற்றுப்போன பாண்டவர்கள மாணிக்கம்போல் வாயைத்திறவாமலிருக்க மற்றவர்களுக்குஞ்சிடுக்குப்பொடுக்கெண்ணுமலிருக்க உனக்குத் தலையிறக்கம் வந்ததேன்காணும் இப்போ வெகு ஞாயம் பேசவந்தாய் போம்போம் விதுரா.

விதுரன் சகுனிக்குச்சொல் வசனம்.

ஓய் சகுனிமாமா உன்னுலேதா னிந்த சபஸ்தானம் வெட்டவெளிச்சம் பட்டம்பகலாய்ப் போகப்போகிறது உன்பேச்சுக்கு வாவில்லை நீர் சும்மா யிரும்.

விதுரன் திருதராட்டிரனுக்குச் சொல்-விருத்தம்.

பிள்ளைகள்தீங்குசெய்தால் பிதாநல்லபுத்திசொல்லி
தள்ளவேவேணுமந்த தன்மையுன்னிடத்திலில்லை

உள்ளநாலுள்ளமட்டும் வோரவஞ்சனையேசெய்தாய்
எள்ளுந்தண்ணீருநாளை யாருனக்கிறைக்கப்போறூர்.

(வ-ம்.) கேளும் அண்ணு திருதராட்டிர மகாராசனே பிள்ளைகள் ஒருபொல்லாங்கு செய்தால் தகப்பன் நல்ல புத்தியைச்சொல்லி அதைத்தடுக்கவேணும் அந்தநடத்தை உன்னிடத்திலில்லை எப்போதும்உன் தம்பி பிள்ளைகளுக்கு ஓரவஞ்சனைசெய்தால் உன் பிள்ளைகள் நாளை எள்ளுந்தண்ணீருமிறைக்க உதவவேணுமே அண்ணே.

இதுவும் விதுரன்சொல் விருத்தம்.

தம்பிபிள்ளைகளுமூத்த தமையன்பிள்ளைகள்கெலித்து
கொம்பனையாளைக்கூட குறித்தாடச்சொல்லலாமோ
வெம்பியுன்மகனுரைத்த வேலையேநடக்குமானல்
நம்மிடயரசும்வாழ்வும் நாசமாய்போகும்சொன்னேன்.

(வ-ம்.) தம்பி பிள்ளைகள் கூடப்பிறந்த தமையன்பிள்ளைகளடிமையாக்கிக் கொள்ளுகிறது அவர்கள் பெண்சாதியைக் கூட வேதுநியமித்து யடிமையாக்கிகொள்கிறது உன்மகன் சொல்லுகிறது உனக்குச் சரியாயிருக்குதா அப்படி நடக்குமானுலிந்த ஆதீனத்துக்கு கெடுதி வரும் சொன்னேன் சொன்னேன்.

சகுனி-தருமருக்குச்சொல்-வசனம்.

தம்பி தர்மபுத்திரா அந்தக்கிழவனும் இந்தக்கிழவனும் ஏதோ பேசிக்கொள்ளுகிறூர்கள் இந்தக் கிழவன் பேச்சு இந்த துரியோதினனகிண்ணுரக்காரனுக்கு ஏற்கப்போகுதா துரோபதையைக் குறித்து நாம் ஓராட்டம்போடுவோம் வாரும்.

தருமர்சொல் (வ-ம்.) அப்படியேசெய்வோம்.

துரோபதையை வைத்தாடுகிறது.

நான்காவது ஆட்டம்.

சகுனிசொல்-தரு-இ-ம்-புன்னகவராளி-அடதாளம்.

என்மருமகனுக்குசதல்லவோ ராட்டம்
எப்படியாகிலுங்கெலிக்கிறே னிந்தாட்டம்

சகுனிசொல் வசனம்.

இரண்டுபனிரெண்டு-இரண்டெட்டு-இரண்டிரிக்கால்-துகைபத்து.

துரியோதனன்-சகுனிக்குச்சொல்-வசனம்.

ஆஆஆஆ ஓய் கர்னமகாராசனே பார்த்திரா எங்கள் சகுனிமாமன்சொகுசை நானென்சொல்வேன் ஓய்மாமா உன்கையை இப்படி தாரும் என்கண்ணிலே ஒற்றிக்கொள்ளவேணும்.

தருமர்சொல்-தரு.

ஐயையோசதெல்லாபாசற்குத் தருமமல்ல
அந்நீதஞ்செய்தாலதற்குநானென் சொல்ல

சகுனிசொல்-வசனம்.

ஆ ஆ விளங்கினதே பழயபந்தயம்தான்மூணத்தொண்ணுதான்.

நன்மையிலுஞ்சிலதுன்மையிலு மதந்
நாளையிலுமெந்தவேளையும்பார்க்கில் என்மரு

சகுனிசொல்-வசனம்.

மூன்றுபனிரெண்டு-மூன்றெட்டு-மூன்றிரிக்கால் மூன்றுதுகைபத்து.

தருமர்சொல்-தரு.

வெய்யானமூர்க்கமும்பொய்யான மார்க்கமும்
வீச்சுகளுங்கொஞ்சம்பேச்சுகளும்பார்த்தால் ஐயை

தருமர்சொல் (வ-ம்.) நாலுமூணேழு.

சகுனிசொல்-தரு.

அஞ்சுபேரையுங்கூடகெலித்ததும் பெரிதல்ல
அடிமையாக்கிக்கொண்டதும்பெரி தல்ல
ஆனைகளும்பரிசேனைகளுமவர்
அஸ்திரங்களுநல்லவஸ்திரங்களும்ரத்ன
ஆரங்களுஞ்சுத்தவீரங்களுமவ
ராடைகளுஞ்சித்ரமேடைகளுங்கட்டி
ஆடைகளும்ரொக்கசாடிகளுமவர்
அட்டிகளுஞ்சக்காகட்டில்களுமவர்
ஆட்டங்களுமாதர்கூட்டங்களுந்திர
ளாடுகளும்பசுமாடுகளும்வர
ஆஸ்திகளுஞ்சிலபாஸ்திகளுமிது
வெல்லாமவலித்தோமோஎல்லாங்கெலித்தோமே
அதுவும்பெரிதல்லஇதுவும்பெரிதல்ல.

தருமர்சொல்-தரு.

சொக்கட்டனுடவேயோசனைபண்ணினதும்
தோர்க்கடிப்பேனென்றுமனதிலெண்ணினதும்
தோதகமும்வஞ்சபேதகமுமொன்றைச்
சூட்டுவதுங்கோபமூட்டுவதும்பல
தொடுவழக்கும் பொல்லாபடுவழக்கும் வெகு
துற்புத்தியுங்கெடுவிற்புத்தியுமிந்த
சொற்பனையுஞ்சதிகற்பனையும்பேய்போல்
துள்ளுவதுமாடிக்கொள்ளுவதுமிந்த
சொற்பிரட்டுங்கள்ளர்கைப்பிரட்டுமிந்திர
சுழலுகளும்முழுதும்பழுதுகளுங்கெட்ட
சூதுகளும்வீண்வாதுகளும்பார்க்கில்.

துரியோதனன்-வீஷ்மருக்குச் சொல்-விருத்தம்.

தரித்திரனர்தர்மபுத்திரன்பாவந்தானோ
தம்பிமார்செய்தவினைதாழ்வுதானோ

சிரித்துக்கலுக்கெனக்குலுக்கும்பச்சை
சேயிழையாள்துரோபதைசெய்தீங்குதானே
பொருத்தமுள்ளவென்மாமன்சகுனிசெய்த
புண்ணியமோநான்செய்தபூசைதானே
வருத்தமின்றிபாண்டவர்கள்வந்தவாறும்
வந்தவிடத்தினில்விடிந்தவாறும்பாரீர்.

(வ-ம்,) கேளும் எங்கள் பாட்டனாகிய வீஷ்மரே இந்ததருமபுத்திரன் செய்த அதர்மமோ தம்பி அழகப்பமாருடைய தவக்குறையோ அல்லாமலும் அங்ஙனேசிரித்து அங்கனேநெடித்து அப்படி முறிக்கி இப்படி திருப்பி கலுக்கென்று குலுக்கி மொளுக்கென்று முறிஞ்சிப்போனாளே அந்த துரோபதையான தேவடியாள்செய்த பொல்லாங்கோ என் சகுனி மாமனுடைய புண்ணியமோ என்பாக்கியவசமோ ஆஆ இந்தப் பாண்டவர்கள் அங்கேயிருந்து வந்ததும் இங்கே வந்தயிடத்திலே இவர்கள் அதோகெதியாய்ப் போனபோக்கும் பார்த்தீரா பாட்டனாரே.

வீஷ்மர்-துரியோதனனுக்குச்சொல்விருத்தம்.

நமதுகுலம்பிறர்நகைக்குங்குலமேயல்ல
நராதிபருக்கிதுகளெல்லாம்ஞாயமல்ல
சமரசமாப்பாண்டவர்கள்ளந்நியரல்ல.
சகோதரரைகெடுக்கிறதுதருமமல்ல
அமிர்தகுணபாஞ்சாலியற்பமல்ல
அவள்சபித்தாலுன்னைவிடப்போறதில்லை
விமலமில்லாவடதுரியாவையோவிந்த
விபரீதகுணமுனக்குவேண்டாமப்பா.

(வ-ம்.) ஆஆ அடா துரியோதனா என்னடா நம்முடைய குலம் பிறர்நகைகைகப்பட்ட குலமல்லவே அந்த பாண்டவர்கள் அந்நியர்களல்லவே சகோதரர்களுக்கு ஒருகேடு நினைக்கிறது தர்மமல்லவே அந்தராசபத்தினியான துரோபதை அற்பசொற்பமல்லவே அவள் வாக்கினாலே ஒன்றைச் சொன்னால் உன்னைவிட்டுப் போகிறதில்லை ஐயையோயிந்த விபரீதகுண வார்த்தைகள் வேண்டாமப்பா.

துரியோதனன்-வீஷ்மருக்குச்சொல்-விருத்தம்.

பெருக்கவென்னப்பனென்னைப் பெற்றவன்திருதராட்டிரன்
ஒருத்தரேயெந்தன்வார்த்தைக் குடன்பட்டுநடப்பாரிந்த
நரைத்தலைகிழவரெல்லாம் நானென்றுசொன்னாலதை
இருத்தவேறொன்றைச்சொல்ல எப்போதும்வழக்கந்தானே.

(வ-ம்.) சரிசரி சரிசரி ஆஆஇதிலே குறைச்சலில்லை யேதுகாணும் என்னப்பனென்னைப்பெற்றவன் திருதராட்டிர மகாராசனேசரி நானெப்படி சொன்னால் அப்படியே கேழ்க்கவும் நடக்கவும் வீஷ்மர்துரோணர் என்றுஞ் சொல்லப்பட்ட நரைத்த கிழவரெல்லாம் நானெ

ன்றுசொன்னு லதைவிலக்கி வேறென்றைச் சொல்லுகிறது வழக்க ந்தானே நல்லதாகட்டும்.

துரியோதனன் விதரனுக்குச்சொல் விருத்தம்.

சிற்றப்பாசிலபேரை அனுப்பியையவர்
 தேசமெல்லாம்தோரணங்கள் கட்டச்சொல்லும்
வற்றவுப்புசட்டிவாவோடுங்கூட
 வைக்காமலிங்கெடுத்துவரவேசொல்லு
குற்றமுள்ளஐவரையுமெழுந்திருக்கச்சொல்லு
 கொத்தடிமையானதொழிற்செய்யச்சொல்லு
சித்தினிதுரோபதையைசபையிலிப்போ
 சீக்கிரமாயெழுந்துவரச்சொல்லுவாயே.

(வ-ம்.) அப்பா சிற்றப்பா இனிமேல் முன்பின்யோசனை பண்ண வேண்டியதில்லை சிலபேரையனுப்பி பாண்டவர்கள் தேசமெல்லாம் தோரணங்கட்டச்சொல்லு அவர்கள் வீட்டிலே யிருக்கப்பட்ட உப்பு சட்டி வரவோடுங்கூட பாக்கியில்லாமல் எல்லாம் என்வீட்டிலே கொண்டுவந்து போடச்சொல்லு மிந்த பாண்டவர்களைந்துபேரையு மெழுந்திருக்கச்சொல்லி அடிமைவேலைசெய்யச்சொல்லு அந்தசித்தினிசிறுக்கியாகிய துரோபதையை இங்கே யிழுத்துவரச்சொல்லு மெழுந்துபோம் சிற்றப்பா.

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

எந்தகாரியஞ்செய்தாலு மெங்களைஎன்செய்தாலும்
அந்தகற்புடையாளான யரிவைதுரோபதையைமன்னர்
மந்திரசபையிலிப்போ மானமில்லாமற்பேசும்
நிந்தையைமறந்தாயானல் நீடூழிகாலம்வாழ்வாய்.

(வ-ம்.) அப்பா துரியோதனு நீ செங்கோல் செலுத்தப்பட்டவன் செங்கோலுக்கு முன்னே சங்கீதமாகுமா நீயாரை என்னசொன்னுலும் எதை எப்படி செய்தாலும் பெரிதல்ல தன்மானம் பிறர்மானமென்றும் பாராமலந்த மகா கற்புடையவளான துரோபதையை சபையிலே சின்னமாக இழந்துபேசுகிறையே அதுநலமல்ல அதை விட்டுவிடுவாயானல் கற்பகோடிகாலம் வாழ்வாயப்பா.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

நற்பயநன்றாய்ச்சொன்னீர் நாலஞ்சுபேருநித்த
தெப்பமாய்க்கூடிக்கூடி திரிந்ததுரோபதையாளுக்கு
கற்பேதுமானமேது கணக்கேதுகாரியமேது
சொற்பனத்திலுமந்த தோகையைமறந்திட்டேனே.

(வ-ம்.) சிற்றப்பா நன்றாகச்சொன்னீர் சுருக்குபையிலே அரிவாளை வைத்தாப்போலிருக்கிறது நீர் சொல்லுகின்றது யேதுகாணும் நித்தம் ஐந்துபேருடன் கூடப்போகிறவேசி அவளுக்குக் கற்பா மானம்

காரியமா கணக்கா ப்ளா பளா அந்த ராஜகுலத்திலே என்னையல்லவா பார்த்துநகைத்தாள் அது என்மனதிலே யிருக்கின்றது விடுவேனோ.

விதுரன் துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

திறமையில்லா விகடதுரியோதனனே
சேதியொன்றுசொல்லுகிறேன்தெளிவாய்க்கேளும்
பொறுமைதனிலேமிகுந்தபூமிதேவி
பூமிபாரம்பொறுக்கமாட்டேனென்ன
திறமுடையமாயனுடன்சொன்னதைத்தை
தீர்க்கிறேனென்றுசொல்லிநெடியமாலும்
தரைதனில்வந்தவதரித்தானதற்கேற்றாப்போல்
சக்கிமுக்கிதட்டாதேசண்டையப்போறாய்.

(வ-ம்) கேளுமப்பா துரியோதனா பூமியிலே அக்கிரமம் மிகுத்து பூமிதேவியானவள் பூமிபாரம் பொறுக்கமாட்டாமல் மகாவிஷ்ணு வுடனேமுறையிட்டாள் அந்த மகாவிஷ்ணுவும் அந்த பூமிபாரத்தைதீர்க்கிறேனென்று நம்மிலே ஒருவராகவந்து அவதரித்திருக்கின்றார் ஆகையினாலே ஏதோ ஒரு விபரீதம் விளையப்போகிறது அதற்கேற்றாப்போலேநீயுஞ் சக்கிமுக்கிப்போடுகிறாய்வேண்டாம் மோசம்வருஞ் சொன்னேன் சொன்னேன்.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

பின்னையுநலமேயந்தப் பிரகாரம்நடக்குமானால்
தின்னுஞ்சக்கரைப்பந்தல்மேல் தேன்மாரிபொழிந்தபோல்தான்
கும்பிடப்போனதெய்வம் குறுக்காகவந்ததுபோல்தான்
துன்னிகர்நினைத்தகாரியம் சுறுக்காகநடத்துவேனே.

(வ-ம்.) ஆஆஆஆ பின்னையுஞ் சந்தோஷந்தான் அப்படியே நடக்குமானால் சர்க்கரைப்பந்தலிலே தேன்மாரி பொழிந்தாற்போல்தான் ஆனால்நான் நினைத்தகாரியத்தை எல்லாஞ்சுறுக்காய்முடிப்பேன்.

துரியோதனன்-பிரதிகாமியனுக்குச்சொல்-விருத்தம்.

பிறிச்சதுநீதானப்பா பிரதிகாமியனேவாடா
கறிச்சநீள்மாங்கள்போல சபையிலேகிற்பதாக
பறிச்சபாண்டவர்களின்று பகடையில்வைத்துதோற்ற
முறிச்சிறிக்கியைநீபோய் முகத்துமுன்னிழுத்துவாடா.

(வ-ம்) அடா பிரதிகாமியனேவாடா இங்கேபாண்டவர்கள் சபையிலேவந்துதோற்றார்களே அந்தமுறிச்சிறிக்கியை இங்கேஇழுத்துவா.

பிரதிகாமியன்-துரியோதனனுக்குச்சொல்-கவி.

கற்புதமென்னுதற்புயமன்னா
சொற்புடன்சொன்னசொற்படிசெய்வேன்.

பிரதிகாமியன்போய்த் திரும்பிவந்து துரியோதனனுக்குச்சொல்-கவி.

திடம்பெறுமன்னா அடர்ந்தனனங்கே
தொடர்ந்தொருவழக்கு நடந்ததுகேளும்.

(வ-ம்.) அழைக்கப்போனவிடத்திலே நடந்ததைக்கேளும் சுவாமி

துரியோதனன் பிரதிகாமியனுக்குச்சொல்-கவி.

கன்னியைஇழுத்துக்கொண்டு முன்னமேவரச்சொன்னல்
துன்னியவழக்குண்டென்று என்னடாசும்மாவந்தாய்.

(வ-ம்.) துரோபதையை யிழுத்துக்கொண்டு வாச்சொன்ன லென்னடா வழக்கென்று சொல்லவந்தாய்.

பிரதிகாமியன்-திரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

என்னைமுன்தோற்றபின்பு எழிலைவர்தோர்த்திட்டாரோ
பின்னுமைவர்தோற்று பிறகென்னதோர்த்திட்டாரோ
முன்னமேயென்னைத்தோர்த்தால் மொழியுண்டுபின்னேதோர்த்தால்
அந்நீதமெனையழைக்க வடுக்குமோவரசர்க்கென்றாள்.

(வ-ம்.) என்னை முன்தோர்த்து பிறகு ஐந்துபேர்களுந் தோர்த்தார்களோ ஐந்துபேருந்தோர்த்து அதின்பிறகு என்னைத் தோர்த்தார்களோ அப்படியில்லை முன் என்னைத்தோர்த்தால் பேச்சுண்டு ஐந்துபேருந் தோர்த்தபிறகு என்னைத் தோர்த்தபடியினலே அது நியாயமல்ல அந்தச்சபையிலே அழைக்கிறது தருமமல்லவென்று அந்தம்மாள் சொல்லுகிறாள் சுவாமி.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்.

கொம்பிலேகொம்புபட்டு குதிரைக்குமுளைத்ததென்றால்
நம்பும்பாண்டவரைப்போல நம்மையுமெண்ணிக்கொண்டாள்
தம்பிதுற்சாதனஓர் தாண்டிலேநீபோயந்த
வம்புதுரோபதையையிங்கே மயிர்பிடித்திழுத்துவாடா.

(வ-ம்.) அடா துற்சாதன கேட்டையா அந்த சிறுக்கி கொண்ட அகம்முன்னே தோற்றவர்களென்றும் பின்னே தோற்றவர்களென்று மொருவழக்குண்டாக்கினள் குதிரைக்கு கொம்பிலே கொம்பு முளைத்ததென்றாள் தன்னுடைய வைச்சக்காரர்கள் நம்புவார்களே அப்படி நம்மையு மெண்ணிக்கொண்டாப்போ லிருக்கிறது அவளைப் போய் மயிர்பிடித்து இழுத்துவாடா தம்பி.

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

தாட்சண்யமெண்ணமாட்டேன் தயவையுமெண்ணமாட்டேன்
நாட்சென்றவைராக்கியமெல்லா நானிப்போதீர்த்துக்கொள்வேன்
வாட்சென்றமன்னரெல்லா மருவியகொலுவின்முன்னே
சூட்சியாய்கொண்டுவந்து சுருக்கினில்விடுவேனண்ணே.

(வ-ம்.) அண்ணவே கண்ணியமுள்ளவர்கள் முகத்தைக்கூட பார்க்கமாட்டேன் இந்த அடியிலே அவளையிழுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன் பாருமண்ணே.

துற்சாதனன் சொல்லிக்கொண்டுபோகிற-தரு.

இ-ம்-மோகனமீசரதாளம்-பல்லவி.

அப்படியவள்சொல்ல லாச்சே-எங்க
ளடிமையாய்ப்போனபின் பேச்சே

அநுபல்லவி.

தப்பிலிசிறிக்கிறை தவிடாக்கொழிக் கிறேன்
தடுத்துச்சொன்னால்வாயை பிடித்துக்கிழிக்கிறேன்-அப்ப

சரணங்கள்.

புலியைபூனைகள்வந்து வெல்லுமா-இவள்
பொங்கலலாமினிஇங்கே செல்லுமா
வலியமயிர்பிடித்துநானே யிழுக்குறேன்
ஞாயமெடுத்துச்சொன்னால்நாக்கை யறுக்கிறேன்-அப்ப
செத்தமாடுபுல்லைத் தின்னுமா-இவள்
சித்திரமினியெங்கே மின்னுமா-யெந்தன்
சத்தங்கேட்டவுடன்வந்தாலே பார்க்கிறேன்
தடங்கல்சொன்னால்சக்கையாய் பேர்க்கிறேன்-அப்ப
பெண்டுபெண்ஜாதிக்கிந்த வார்த்தையே-ஓகோ
பிரதிகாமியனே நீ பார்த்தையா
என்படுவேசியையிப்போ தழைக்கிறேன்
இகலெடுத்துச்சொன்னால் சிகைபிடித்திழுக்கிறேன்-அப்ப

துற்சாதனன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

மதித்ததுரோபதையேநீதான் மானமுள்ளவளேயானால்
விதித்ததுநூற்றொருவரன்பு வேணுமென்பவளேயானால்
கொதித்தவென்னண்ணனுன்னை கொலுவினிலழைக்கச்சொன்னார்
எதிர்த்துத்தாஞ்சொல்லாம லெழுந்திருந்தென்பின்வாராய்.

(வ-ம்) கேளாய துரோபதையே நீ நல்ல மானமுள்ளவளானால் எங்களண்ணன் கொலுவுக்கு சீக்கிரமாகவா.

துரோபதை துற்சாதனனுக்குச்சொல்-கொச்சகம்.

மட்டுமருங்கு மரியாதையில்லாமல்
பொட்டனவேவந்தழைத்த புத்தியில்லாமைத்துனரே
தொட்டமுடியுங்களண்ணன் சூழுஞ்சபையிலென்னை
இட்டுவரச்சொன்னவிதம் இன்னதென்றுசொல்வீரே.

(வ-ம்.) மருங்குமரியாதை யில்லாமல் வந்தழைத்த மைத்துனரே இராஜாக்களிருக்கப்பட்ட சபையில் உங்களண்ணனென்னை அழைத்துவரச்சொன்ன விபரம் இன்னதென்று தெரியச் சொல்லவேணும் மைத்துனரே.

துற்சாதனன்-துரோபதைக்குச்சொல்-கொச்சகம்.

மன்னியதருமபுத்திரன் வலியசூதாடியையோ
முன்னிலைநகரம்நாடு முழுதுமேதோற்றான்பின்னே
தன்னையுந்தோற்றான் தம்பி மாரையுந்தோற்றான்பின்னே
உன்னையுந்தோற்றேனல்ல லொடுங்கினான்வந்துபாராய்.

வ-ம்.) என்னத்தைச் சொல்லுகிறது தர்மராசா ஒரு ஆட்டம் ராக்கட்டா னுடுவோமென்று சொன்னான் அதுநமக்கு யோக்கிய

மல்லவென்றுசொன்னேம்அப்படியல்லவென் றுஆடி நாடுநகாமுதலா னதுகளும் தோற்றுனப்பால் தம்பிமாரையுந்தோற்றுன் பிறகு தன் னேயுந்தோற்றுன் கடைசியில் உன்னேயும் தோற்றுன் ஓடிப்பாடி ஒடுங்கி உட்கார்ந்துக்கொண்டிருக்கிறு ரவர்களே வந்துபார்த்து வரு வாய்வா.

துரோபதை-துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்.

உன்னேயுஞ்சொக்கட்டானி லிசையவேவைத்துதோற்க
மன்னவரெனக்குச்சொல்லி வரவழைத்திடுவார்கண்டாய்
உன்னேயார்கண்டாருங்க ளண்ணனேயார் தான்கண்டார்
பின்னமாய்பேசவேண்டாம் பேசாமல்நடந்திடாயே

(வ-ம்.) என்னே சூதாடிதோற்ற என்பிரான்நாயகர் என்னே வரவ ழைப்பார் உன்னேயார் கண்டார் உங்களண்ணனே யார்கண்டார் அதிக மாய் பேசவேண்டாம் நடநட.

துற்சாதனன்-துரோபதைக்குச்சொல் விருத்தம்.

நடக்கதான்வந்தேனிப்போ நாழிகைதனிலேயுன்னே
அடக்கதான்வந்தேனெங்க ளண்ணர்முன்கொண்டுபோய்
விடுக்கதான்வந்தேனந்தவேந்தர்கள்சபையில்வெட்கம்
கெடுக்கதான்வந்தேனந்த கெர்வமேனெழுந்துவாடி.

(வ-ம்.) நடக்கவா நடக்கவும் உன் கெர்வத்தையடக்கவும் எங்கள ண்ணர்முன்னே கொண்டுபோய் விடுக்கவும் அந்தச்சபையில் வெட் கத்தைகெடுக்கவுந்தான் வந்தேனறியாயா என்னே.

துரோபதை-காந்தாரிக்குச்சொல்-விருத்தம்.

மாமிநீபாராயுந்தன் மகன்செய்யுமனியாயத்தை
தாமதமன்னர்சூழும் சபைதனில்வரவேசொல்லி
காமிகள்போலேயெந்தன் கைபிடித்திழுக்கவாரான்
பூமியிலிதன்னேப்போல பொல்லாதகொடுமையுண்டோ.

(வ-ம்) ஆ மாமி இந்த அனியாயமுண்டா அந்த ராசசபைக்குவரச் சொல்லி உன்மகன் கையை தொட்டிழுக்கவந்ததைப் பார்த்தா யாமாமி.

துக்சாதனன்சொல் விருத்தம்.

கொடுமையென் றுரைத்தாய்நீங்கள் கொத்தடிமெனங்களுக்கு
அடிமையாய்போனுல்நாங்க ளாளாமல்விடுவதுண்டோ
கடுமையாய்யென்தாய்பின்போய் கட்டிக்கொண்டதினுலே
விடுவனேஉன்னேசும்மா மினுக்காதே ஓடிவாடி.

(வ-ம்.) கொடுமையென்னடி சும்மாகுலுக்குருப்நீங்கள் ஆண்பெ ண் அடங்கலும் எங்களுக்கு கொத்தடிமையாய்விட்டால் சும்மாவிடு வதுண்டோ எங்களுடைய தாயைப்போய் கட்டிக்கொண்டதினுலே விட்டுபோவேனே வாடிவா.

துரோபதை-காந்தாரியிடத்தில்-புலம்பல்-தரு
இ-ம்-கண்டாமீசுரதாளம்-கண்ணிகள்.

ஐயையோநானென்னசெய்வேன் மாமி-இந்த
அனியாயந்தானுண்டோ மாமி
செய்யும்வாரேதுஎன் மாமி-எந்தன்
சிந்தைகலங்குதே மாமி
தஞ்சமுநீயேயென் மாமிபெற்ற
தாயும்நீரேயென் மாமி
வஞ்சனைசெய்யாதே மாமி-என்
மானங்கார்க்கவேணும் மாமி-இவனைக்
கண்டவுடனேயென் மாமி-எந்தன்
கால்களும்நடுங்குதே மாமி-உன்
அண்டையில்வந்தேனே மாமி-என்னை
ஆதரிக்கவேணும் மாமிநீ
காட்டிக்கொடாதேயென் மாமி-என்னைக்
காப்பாற்றவேணுமே மாமிஉந்தன்
வீட்டினில்வந்தேனே மாமி-என்னை
வெளியேதள்ளாதே மாமி-நல்ல
பெண்ணாய்ப்பிறந்தாயே மாமி-என்போல
பெண்ணையும்பெற்றாயே மாமி-இந்த
மண்ணாளும்வேந்தர்க்கு மாமி-இது
மரியாதையாசொல்லு மாமி-நூறு
பிள்ளைகளைப்பெற்று மாமி-என்னைப்
பேதகஞ்செய்யாதே மாமி-என்னை
தள்ளிவிட்டாலையோ மாமி-இன்னம்
தள்ளிக்கொண்டேபோவான் மாமி-இப்போ
நம்பினேனுன்னையான் மாமி-என்னை

நகைக்கப்பண்ணுதேஎன் மாமி-சும்மா
வெப்புதேயென்னுளம் மாமி-இந்த
வேளைகார்க்கவேணும் மாமி

காந்தாரி-துரோபதைக்குச்சொல்-விருத்தம்'

காகங்கற்றென்றேலோடி கணவனைக்கட்டிக்கொண்டு
ஓசையாலழுதுநீலி யுனையல்லால்வேறேயுண்டோ
வாகைமைத்துனன்மார்மற்ற மாமன்மாருற்றார்பெற்றார்
ஏகமாய்நிறைந்தசபைக்கு ஏகவொண்ணுதோபோடி.

(வ-ம்.) அடிகுடுப்பாஎன்னடி ஆமுடையானையறியாமல் ஆயிரம் பெருடனேபோகிறவ ளொருத்தியாம் அவள் காகங்கர் என்றுகத்தினுல் அங்ஙனேயொருகணவனை அப்பாவென்று கட்டிக்கொள்ளுவாளாம் அவளே நீ அதற்கென்ன மாமன் மைத்துனன் உற்றார்பெற்ருரிருக்கிற சபைக்குப்போகிறதற்கு என்னடிபோடிமாதங்கி.

துற்சாதனன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

பிழையுடன்தினமுமைந்து பேருடன்போரவேசி
தழையுறுமன்னர்கூடுஞ் சபைக்குநீவரப்போகாதோ
குழைகிறாய்குழைந்தைசும்மா குலுக்கிறாய்செல்வங்கொஞ்சி
இழையுறாய்என்னடியுன் னெத்துநானறிவேன்வாடி.

(வ-ம்.) அடி ஒருத்தரல்லவே ஐந்துபேருடனே நாள்தோறும் இணங்கி குளிர்விட்டுப்போன தாசிதானே எங்களண்ணன் முன்னே வரலாகாதா குழைஞ்சிப்போகிறு யேஎன்னடி நானிந்த வித்தையெல்லாம் அறிவேன் வாடி.

துற்சாதனன் துரோபதையை தொடவந்தபோது துரோபதை புலம்பல்.

துரோகியிதுவென்ன சொல்லடா-என்னை
தொடவேண்டாம்நீதூர நில்லடா
துரோகியென்தர்ம துரைகளறிந்தாக்கால்
தூக்கிப்போட்டுஉன்னுக்கை யறுப்பாரே-துரோ

துற்சாதனன்-சொல்லல்.

தொட்டிழுக்காமல்நான் போவேனே-போனல்
துரியோதனன்தம்பி யாவேனே
பட்டியுண்பாண்டவர் பரதேசியானரே
படிவாங்கிசோறுண்டடிமையாய்ப் போனரே-தொட்

துரோபதைச்-சொல்லல்.

சகடமிங்கே படிக்கிறாய்-உந்தன்
சமர்த்தெல்லாஞ்சொல்லி துடிக்கிறாய்
முக்காலுங்காக முழுகிக்குளித்தாலும்
கொக்காகுமோபோடா வக்காகுமோ அடாதுரோகி

துற்சாதனன்-சொல்லல்.

என்னடிஎண்ணமற் பேசுறாய்-உனக்
கேற்றபடியெல்லாம் வீசுறாய்
மன்னியுன்னிக்காலே பின்னிநானிக்கொள்ள
சின்னபின்னமாக முன்னும்பின்னுமாக-தொட்

துரோபதை-சொல்லல்.

முழுதுமெண்ணமல்நீ மலைக்கிறாய்-வெறி
முண்டைநாயைப்போலே குலைக்கிறாய்
கழுதைக்குபதேசங் காதிலேசொன்னாலும்
அவக்குரலல்லாமலங்கொன்றில்லை யென்சொல்வார்-துரோ

துற்சாதனன் சொல்லல்.

ஆட்டத்திலுனை வைத்து தோற்றாரே-நீங்கள்
அடிமையாய்ப்போனதும் பார்த்தாரே
ஆட்டிநீட்டிப்பூச்சிகாட்டிச்சொல் லாதேயென்
வீட்டுக்குசொந்தவெள்ளாட்டியாய் போனபின்-தொட்

துற்சாதனன் - துரோபதைமயிரைத் தொட்டபோது - துரோபதை புலம்பல்-இ-ம்-கெண்டா-மீசுரதாளம்.

ஐயையோபாவிதெய்வமேயிந்த
வனியாயந்தானுண்டோ தெய்வமே-எந்தன்
மன்னவர்கோதிமலர்சூடுங்கூந்தலை
மடையன்தொடலாமோ தெய்வமே-எந்தன்
போர்வீரர்தொட்டுபுகழுமென்கூந்தலை
புலையன்தொடலாமோ தெய்வமே-எந்தன்
கண்ணார்தொட்டுகலைக்குமென்கூந்தலை
கடையன்தொடலாமோ தெய்வமே-அந்த

முனை வீரர்தொட்டுமுடிக்கின்றகூந்தலை
மூடன்தொடலாமோ தெய்வமே-நல்ல
சுத்தவீரர்மலர்சூடுமென்கூந்தலை
துஷ்டன்தொடலாமோ தெய்வமே-நல்ல
மல்லிகைசூடிமணக்கின்றகூந்தல்
மண்மேற்புரளுதே தெய்வமே-நல்ல
சம்பங்கியெண்ணெய்தடவியகூந்தல்
தரையில்புரளுதே தெய்வமே-நல்ல
சீப்பிட்டுவாரிதிகழுமென் கூந்தல்
தெருவிற்புரளுதே தெய்வமே

துற்சாதனன்சொல்-விருத்தம்.

பஞ்சவர்கைகளுன்மேற் பட்டமாத்திரத்திற்பொல்லா
வஞ்சகியுன்னுடம்பு மணக்குமோவளர்ந்துபோமோ
மிஞ்சியென்கைப்பட்டாலுன் மினுக்கெலாங்குலைந்துபோமோ
அஞ்சுடனுருகட்டு மதற்கென்னயெழுந்துவாடி.

(வ-ம்.) ஓ ஓ எனனடி உன்னுடைய வைச்சக்கார ரைந்துபேருடையகை உன்பேரில் பட்டமாத்திரத்திலே மகா கமகமவென்றுமணக்குமோ மிஞ்சிபூரிக்குமோ மிஞ்சிஎன்கைபட்டால் உன்தேவடியாள் மினுக்கெல்லாஞ் சிந்திப்போமோ அதற்கென்ன ஐந்துபேருடனுருவதாகட்டும் எழுந்துவாடிவா.

துரோபதைசொல்-தரு—இ-ம்-சங்கராபரணம்.

பேசாதெல்லாம்பேசிப்பேய்போல் துள்ளுகிறாய்
பெண்கள்மெச்சபெருமையைக் கொள்ளுறாய்
நீசனேநீதத்திநிலத்தில் விழுகிறாய்
நிந்தையென்றெண்ணாமல் நெருப்பில்விழுகிறாய்
போதகனே துஷ்டகாதகனேகெட்ட
சாதகனேருணபாதகனே அடாசிச்சீபினத்தாதே
அடாதுஷ்டா சிச்சீபினத்தாதே

துற்சாதனன்சொல்-தரு.

மெத்தமெத்ததுள்ளிவிழுகிறு யென்னடி
மேல்வாவொண்ணுமல்பேசுறு யென்னடி
கற்றசமர்த்தெல்லாங்காட்டுறு யென்னடி
கண்ணீருதிர்த்துக்கதறுரா யென்னடி
சித்துக்கள்ளிப்போடி யெத்துக்கள்ளிஇந்திர
சித்துக்கள்ளியடிவித்தைக்கள்ளிசும்மாநடந்துவாடி
கொலுவுக்குநடந்துவாடிவாடி.

துரோபதை-புலம்பல்—இ-ம்-எதுகுலகாம்போதி.

ஐயையோபாவிதெய்வமேநானிந்த
அவதிப்படவிட்டாயோ தெய்வமே

ஐவர்க்குங்கைகொடுத்து அருமையாயிருந்தேனே
அதற்காகவிப்படிசெய்தாய் தெய்வமே
மணவாளருடன்கூடி மகிழ்ச்சியால்விளையாடி
வலக்காரமாயிருந்தேனே தெய்வமே
வந்தவிடந்தனிலே இந்தவிதியெனக்கு
வருமென்று அறியேனே தெய்வமே

துற்சாதனன்சொல் விருத்தம்.

வந்திடுமிடத்திற்பொல்லா மாரீசக்கள்ளிதேகஞ்
சிந்திப்போனதுதானென்ன சிணுங்கிநீயழுவதென்ன
முந்திவில்வளைத்தபோது முடிமன்னர்சபைக்குநீதான்
வந்ததுமில்லையாசும்மா மசக்கிறுயெழுந்துவாடி.

(வ-ம்) வந்தவிடத்திலேயே என்ன தேகம் சிந்திப்போனது ஆதியிலேவில்வளைத்து மாலையிடுகிறபோது வந்தராஜாக்களெல்லாம்விழித்தகண் சிமிட்டாமல் பார்க்கும்படியா யந்தராஜசபையிலே நின்று அங்ஙனேதிருப்பி அங்ஙனேமுறுக்கி அங்ஙனேகுலுக்கி அங்கனே மினுக்கின தேவடியாள்தானே இப்போது மாமன்மார் மைத்துனன்மார்க ளிருக்கிறசபைக்கு வருகிறதற்கு சும்மா பசக்கிறுய் எழுந்துவாடிவா.

துரோபதைசொல்-கண்ணி.

பத்தினிவாக்குபலியாமற் போகாது
பார்மன்னருக்கிந்த துற்புத்தியாகாது
தற்றிவழூந்தாற்றரையும் பொறுக்காது
தையலர்தீங்குதெய்வம் வெறுக்காது
பட்டவனேகுறையிட்டவனேநின்ற
விட்டவனேகடைகெட்டவனே அடாசீச்சீபினத்தாதே

துற்சாதனன்சொல்-கண்ணி.

பத்தினிவாக்குநான்பார்க்கிறேன் வாவுந்தன்
பட்டிமிரட்டைமிரட்டாதே வாவுந்தன்
விந்தைகள்சொல்லிவிளங்காதே நீவாடி
வெந்நீரிலேவீடுவேகாது வாசும்மா
போஷிக்கிறுயென்னை தூஷிக்கிறுயடி
பூசிக்கிறுய்சும்மாரோஷிக்கிறுயடி நடந்துவாடிகொலுவுக்கு

துரோபதைபுலம்பல்-இ-ம்-கண்டா-ஆதிதாளம்-கண்ணிகள்.

கொழுக்கொம்பிறக்கும்போதேகொடிவிழுந்தலைத்தார்போல
குலையவிட்டாயோஐயோ தெய்வமே-எந்தன்
கொற்றமன்னவருக்கும்மற்றபெரியோருக்கும்
குறையென்னசெய்தேனோ தெய்வமே
ஒருதாயில்லாதவர்க்குவூரெல்லாந்தாயென்றசொல்
உலகவாழ்க்கையும்பொய்யோ தெய்வமே

துற்சாதனன் சொல் - விருத்தம்,

கண்ணுக்குகலநீர்சிந்த கதறியேயழுகின்றாய்நீ
ஒண்ணுக்குரெண்டுசொல்லி யுதாசினமாய்ப்பேசுகின்றாய்
பெண்ணுக்குளுன்னைப்போல பிரட்டுளதிருட்டிநீலி
மண்ணுக்குள்கண்டதில்லை மாரிசக்கள்ளிவாடி.

(வ-ம்.) கண்ணுக்குக் கலநீர்சிந்தும்படியா யழுகிறாய் ஒன்றைச் சொல்லினாலிரண்டாய்ச் சொல்லி எடுத்தெறிந்து பேசுகிறாய் ஆஆ ஆஆ உன்னிட திருட்டு மாரீசத்தனமும இந்திரசித்துகளும இந்தவித்தைகளும் எங்கே கற்றாயடி எழுந்துவாடி வா.

துரோபதைசொல் - கண்ணி!

மயிரைபபிடிக்கிறாய் மன்மேலேயிழுக்கிறாய்
வமபுகள்பேசியபின்வாயேன் புழுக்கிறாய்
உயிரைப்பறிக்கிறாய்லட்டாரங் காட்டுகிறாய்
ஒருக்காலேயென்சும்மாயொடித்து முறிக்கிறாய்
ஒகோகெடுவாட்ஐயோ-கெடுவாய் ஐயோபோட
படுபாவிஉனக்கென்ன பேய்க்காலமோ-பாவி

துற்சாதனன்சொல்-கண்ணி!

விண்ணானப்பேசிமினுக்கிறா யென்னடி
வேசிகள்போலதுலுக்கிறா யென்னடி
ஒண்ணானலெட்டாய்முடியுறா யென்னடி
ஓகோசும்மாவொடிக்கிறா யென்னடி
தட்டாதேசும்மாகிட்டாதேயடி
பேசாமல்நீவாடி கொலுவுக்குப்பேசாமல்நீவாடி

துரோபதைபுலம்பல் - தரு - இ-ம்-கண்டாமீசுரதாளம்.

பல்லவி.

ஆவிதியே ஐயையோ ஆவிதியே.

அநுபல்லவி

பாவிநானென்னபாதகஞ் செய்தேனோ
பாவிகையில்சிக்கிபரதவிப்பதும் ஆவிதி

சரணங்கள்.

ஆருக்குநானொரு அக்கிரமஞ்செய்தேனோ-விதியேநான்
ஆரையடித்துவலங்கோலஞ்செய்தேனோ. ஆவிதி
பாரினிலஇந்தப்பாடுபடவேநான்
பஞ்சபாண்டவருக்கு பாரியாளானதும். ஆவிதி

துற்சாதனன்சொல் - விருத்தம்.

நீலிகளானபேர்க்கு நிமையிலேகண்ணீரென்பார்
ஓலமிட்டழுமுனக்கு உடம்பெல்லாங்கண்ணீர்கண்டாய்

கோலங்கீழ்நுழையுமெந்தன் குணத்தையுமறிந்துமிந்திர
ஜாலஞ்செய்யாதேசும்மா தளுக்காதேயெழுந்துவாடி,

(வ-ம்) நீசிக்குதிமையிலேகண்ணீரென்று சொல்லுகிறதுஉனக்கு உள்ளங்கால் முதற்கொண்டு உச்சந்தலைவரைக்கும் கண்ணீரானாலுந் தணியும் யுனக்கிணையல்ல சும்மா அழுவதினால் உன்னைவிட்டுபோவேனோ நீ பாயின் கீழ நுழைகிறவளானால்நானகோலத்தின்கீழ் நுழைகிறவனென்றறியாயோஓடிவாடி வா.

துரோபதைசொல்-கண்ணிகள்

பெண்ணுடன்கூடப்பிறந்தது மில்லையோ
பெண்சாதியைப்பலவித்துவாழ்ந்ததுமில்லையோ
தன்னருள்சற்றுந்தயானமு மில்லையோ
தாயார்வயிற்றிற்பிறந்தது மில்லையோ
பட்டவனைத்துயரிட்டவரைமுறை
விட்டவனைகேடுகெட்டவனை அடாபோடாபாவி

துற்சாதனன்சொல்-கண்ணிகள்

மாட்டுக்காரப்பயல்போலென்னைப் பேசாதே
மாதங்கிநீசும்மாவிச்செல்லாம வீசாதே
நீட்டியாட்டியுன்நீட்டெல்லாங் காட்டாதே
நிமிஷம்போனால்மானமதிலேநிற்க மாட்டாதே
தளுக்காதேபேய்போல்குலுக்காதேகொஞ்சி
குலுக்காதேமிஞ்சிபலுக்காதேயடி
பேசாமல்நீவாடி கொலுவுக்கு பேசாமல்நீவாடி.

துரோபதை-புலம்பல்.

ஆவிதியே ஐயையோ விதியே.
என்போலும்பெண்களுக்கிடரென்னசெய்தேனோ விதியே
இதுவென்தன் தலையிலெழுதினப்படி தானோ விதியே
இன்பமாய்ப்பாஞ்சாலனென்றனைப்பெற்று
எடுத்துவளர்த்ததுமிதற்காகத்தானோ ஆவிதியே
வல்லரவின்வாயில்தேரைப்போலானேனேவிதியே வேடன்
வலையிலகப்பட்டமான்போலுமானேன் விதியேயிந்த
பொல்லாதநிர்மூடப்புலையன்கையில்சிக்கி
புலம்பிப்புலம்பிசும்மாய் புலம்பித்தவிப்பது ஆவிதியே

துற்சாதனன்சொல்-விருத்தம்.

விதிநல்லவிதியேயானால் வில்வளைத்திட்டபோது
மதியிலென்னண்ணனுக்குமணமாலைசூட்டிடாயோ
கெதியில்லாபாண்டவரை கெதியென்றநம்பிக்கேட்டால்
இதினுடன்போமோயின்னமிருக்கிறதனைத்தும்வாடி.

(வ-ம்.) ஆஆ விதியினலென்னயிருக்குதடி எல்லாம் மதியினலிருக்கிறது ஆதியிலே வில்வளைத்து மாலை யிடுகிறபோது இந்த அர்ச்சு

னாராசனுக்குப்போட்ட மாலையை எங்க ளண்ணனான துரியோதன காராசனுக்குப்போட்டுவிட்டால் இத்தனைபாடெல்லாம் வராதே பாண்டவர்கள் பாண்டவர்களென்று பாண்டவாளைநம்பி கெட்டபடியினாலே இத்துடன் போச்சுதா இன்னமனேகமிருக்கிறது எழுந்துவாடி வா.

துரோபதை - சொல்கண்ணி.

பாண்டவராலேகெட்டு — விழுவாய் - என்
பாவமிடிந்துகெப மாகவே — போவாய்
மூண்டைநகரத்திலமுழ்கிக் — கிடப்பாயுன்
மூர்க்கமல்லாமலபோயார்மேல் — விடுவாய் - சும்மா
அலைக்காதேகெர்வம்நிலைக்காதே — பேய்போல
மலைக்காதேநாய்போல — குலைக்காதே
பேடாபடுபாவிஉனக்கென்ன — போங்காலமோ - பாவி

துற்சாதனன்சொல் - கண்ணி.

பாண்டவர்பேச்சுபகலே — முடிந்தது
பழிகெல்லாமுன்தன் தலைமேல் — விடிந்தது
தாண்டிபென் னுள்ளமதனலா — எரியுது
சபையிலேநீவந்தாபெல்லாக் — தெரியுது
வடிக்காதேவிங்கிதுடிக்காதேகல்வி
நொடிக்காதேசொல்விதுடிக்காதேயடி
நடந்துவாடிவாகொலுவுக்குநடந்துவாடிவா

துரோபதைபுலம்பல் - இ - ம - முகாரி - ஏகதாளம் - கண்ணிகள்.

ஓகோயிதென்னகொடுமைபோனவையையோ — மன்னர்களே - ஒரு
சோதில்லாமன்னர்கள்நீதியிதானோ — மன்னர்களே
ஓகோயிதுவோமனுநீதிபோனதையோ — மன்னர்களே - அபி
மானமுஞ்செங்கோல்நிதானமுமில்லையே — மன்னர்களே
பெண்களைபெற்றபெரியோர்களில்லையோ — மன்னர்களே - என்னை
பேதகஞ்செய்தால்பெண்பாதகமல்லவா — மன்னர்களே - ஒரு
பெண்ணுடன்கூடபிறந்தவரில்லையோ — மன்னர்களே - ஒரு
பெண்ணாகப்பாரினிற்பிறந்ததுநான்தானோ — மன்னர்களே
மனையாளுடன்கூடிவாழ்வாருமில்லையோ — மன்னர்களே - பெண்
மானமென்றாலயார்க்குமானமோவல்லவோ — மன்னர்களே - இந்த
அனியாயப்போலேயவனியிலுமுண்டோ — மன்னர்களே - இது
அரசாட்சிசெய்யுமாசுற்சுத்தமமோ — மன்னர்களே - எங்கள்
ஐயாதுரோணரேஅசுவத்தாமரேஎன் — ஐயமாரே - இந்த
அநீதமபோலேயவனியிலுமுண்டோ — ஐயமாரே - இந்த
பொல்லாதவர்த்தைபுராணமபடித்தேயென் — ஐயமாரே - இந்த
பொல்லாங்கைபோலவேபூமியிலுமுண்டோ — ஐயமாரே - இந்த
வையகமபோனாலும்வாழ்வென்னபோனாலும் — ஐயமாரே - இந்த
மன்னர்சபையிலென்மானமபோகலாமோ — ஐயமாரே - இந்த

மெய்யானமாமனுக்கியோனத்தெரிந்தவரே ஐயமாரே-என்
மேலென்னகுற்றங்கிளக்கக்கண்டீரோயென் ஐயமாரே
பாரம்பரவும்பலவுந்தெரிந்தயென் பாட்டனாரே-இந்தப்
பாவிகொடுமையைப்பார்த்திருக்கின்றீரே பாட்டனாரே
தாரமென்றிலலாமல்தள்ளிவிட்டீர்களே பாட்டனாரே
தன்மையினல்தயைதாட்சண்ணியமில்லையே பாட்டனாரே-உங்கள்
அன்பிலாப்போனதும்பெண்பாவம்போகுமா பாட்டனாரே
அரவக்கொடியோனுரைத்திடும்வார்த்தைக்குப் பாட்டனாரே
வுடன்பட்டிருக்கஉன் னுள்ளங்குளிர்ந்ததோ பாட்டனாரே
ஆதரவாகயழைக்குவரீரேயென் மாமனாரே-எந்தன்
அபிமானம்போகவிலைவிட்டீரேஎன் மாமனாரே
மாதாபிதாவுருநீயென்றிருந்தேனே மாமனாரே-யென்னை
மன்னவர்சபையில்வரவழைத்தீரேயென் மாமனாரே
குருகுலமன்னர்தலமுறைகண்டாயென மாமனாரே-உங்கள்
குலத்தினிலிந்தகொடுமையடுக்குமோ மாமனாரே
பெரியோரிருந்தும்பிழைகள்செய்ததாலே மாமனாரே-மழை
பெய்யுமோவையகமுய்யுமோவையையோ மாமனாரே

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

கொஞ்சமும்இரக்கமில்லாக் கொற்றவன்சபையினுள்ளே
தஞ்சமென்பவரில்லாமல் தரையில்விழுந்தழுதபாஞ்சாலி
கஞ்சமென்முகங்கள்வாடி கைகட்டிஎதிரேநிற்கும்
பஞ்சபாண்டவரைப்பார்த்து பதறுவாள்கதறுவாளே.

(வ-ம்) அகோதெப்படியென்றால் தயைதாட்சண்ணியம் சுவுஇரக்கம் யாதுமில்லாததுரியோதனன் சபைதனிலே துரோபதைபிரண்டழுது பாண்டவர்களைபார்த்து தெய்வத்தை நினைந்து புலம்புகிறவிதங்காண்க.

துரோபதைபுலம்பல்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்-கண்ணிகள்

என்னசெய்வேனினிஎப்படியாறுவேன் தெய்வமே-ஓகோ
என்பிராணநாதருக்கிப்படிவந்ததோ தெய்வமே-ஒரு
துஞ்சிபவஞ்சகதுரோகமதியோமே தெய்வமே-ஓகர்ம
துரைகளுக்கித்தனை துன்பம்வரலாமோ தெய்வமே-ஐயோ
சத்தியமில்லையோதர்மமுமில்லையோ தெய்வமே-ஓன்ற
சத்தியமும்நல்லதர்மமும்பொய்த்ததோ தெய்வமே-ஓநல்ல
புத்திநெறியில்லாப்புல்லர்க்குக்காலமோ தெய்வமே-ஓஅந்த
புல்லர்கடத்தைக்குப்பூமிபொறுக்குமோ தெய்வமே

பாண்டவர்களைப்பார்த்துப்-புலம்பல்.

இன்னவயதில்தேடிமாலையிட்டீர் பாவிகளா-இப்போ
தெருவில்நிற்கச்சகவிட்டீர்களே பாவிகளா-என்னை
கன்னியவயதிற்கலியாணஞ்செய்தீரே பாவிகளா-பின்று

காட்டிக்கொடுத்துகடக்கப்போய்நின்றீரே பாவிகளா-என்னை
மானக்கிளிபோலே வைத்திருந்தீர்களே பாவிகளா-எந்தன்
மானங்குலையமரப்போல்நின்றீரே பாவிகளா-ஒரு
வர்ணகிளிக்குப்பால்வார்த்துவளர்த்தீரே பாவிகளா-பூனை
வாய்க்கிரை ஈந்தாபோலாக்கிவிட்டீர்களே பாவிகளா-உன்
வீரம்குறைந்துகோவில்லுமுறிந்ததோ பாவிகளா-இந்த
மெய்கெட்டவேந்தன்முன்கைகட்டிநின்றீரே பாவிகளா-நல்ல
தாரத்தைவைத்துச்சபையிலேதோத்தாலும் பாவிகளா-உங்கள்
தாஷ்டீசவீரதனத்தையுந்தோத்தீரோ பாவிகளா-தங்கள்
ஆதீனமெல்லாஞ்சூதாடிப்பரித்தாலும் பாவிகளா-உங்கள்
ஆண்மையைக்கூடஅடித்துபறிக்காரோ பாவிகளா-இப்போ
நிலத்திலமையும்நிசமும்பொய்யாச்சுதோ பாவிகளா-இந்த
நீச்சற்றுகைகட்டி பேசவும்வாச்சதே பாவிகளா

பீமன்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

சேயிழைதனையிழுத்து நிகழ்சபைதனிலேவிட்ட
தீயவஞ்சகரையென்கை தெண்டாயுதத்தினாலே
வாயிணைப்பிளந்துகொத்தி மணிக்குடலெடுத்துமண்டை
வாயிரஞ்சுக்கலாக யடிக்கிறேன்பாராயண்ணே.

(வ-ம்.) கேளும் அண்ணே நம்முடைய மனையாளான துரோபதையை இந்தராசசபையில பங்கப்படுத்திச் சபையில்வரும்படியாய்செய்தவனையும இட்டுக்கொண்டுவந்தவனையும் மணிக்குடலெடுத்து அவர்கள்மண்டையை ஆயிரஞ் சுக்கலாக இதோ அடிக்கிறேன் நீர் சும்மாயிரும் அண்ணாவே.

அருச்சுனன் தருமருக்குச்சொல் விருத்தம்

மானமில்லாமலிருக்க மாதினையிழுத்துவந்த
ஈனரைஎன்கையம்பா லிட்சணத்திலேதானே
கானகம்தீப்பட்டார்போற் கடிந்துநீற்றுளியாக
நானிதோவடிக்கிறேன்பார் தடங்கல்சொல்லாதேயண்ணே.

(வ-ம்.) கேளும் என்னண்ணாவே நம்முடைய மனையாளான துரோபதையை இந்தராசசபைக்கு வரும்படியாய்ச்செய்த துஷ்டரைசெங்காடு தீப்பட்டாப்போல் நீற்றுளிபடலமாக இதோ அடிக்கிறேன் தடங்கல்சொல்லாதே அண்ணாவே

தருமர் தம்பிமாருக்குச்சொல் விருத்தம்.

சினத்தமன்னர்கள்வாழ்வுஞ் செல்வமுஞ்சிலதுகாலம்
குனித்தியதுன்பம்வந்து குறைவதுசிலதுகாலம்
அனித்தியகாலம்வந்தா லடியோடேபோகுங்கண்டாய்
இனித்தியதம்பிமாரே இன்னமும்பொருங்களப்பா.

(வ-ம்.) கேளுங்கள் தம்பிமார்களே இராசாக்களுடையசெல்வமும் செருக்கும ஓங்கிறது சிலகாலம ஒடுங்குகிறது சிலகாலம் அதுகளுக்கு

அனித்தியகாலம் சம்பவித்தாலடியோடே போய்விடும் இன்னமும் பொறுங்களப்பா.

துற்சாதனன் துரோபதையைப்பார்த்துச்சொல் விருத்தம்.

மைச்சினமாமன்மார்கள் மாதவமுனிவருந்தான்
வைச்சக்காரர்களாமைவர் மேவியசபையில்நிற்க
அச்சமென்னடியுனக்கு அழுகிறாயொழுகிப்போறாய்
கைச்சணிவேசியர்க்கு கண்ணீர்க்குறைச்சலுண்டோ.

(வ-ம்.) அடி மைச்சினமார் மாமன்மார் குருக்கள்மார் உன்வைச்சுக்காரர்களைந்துபேரும் இவர்களே இச்சபையிலிருக்கின்றார்கள் இங்கேஉன்னையிட்டுக்கொண்டுவந்ததில் உன்மானத்துக்குகுறைவு வந்துவிட்டதா என்னடி சும்மா அழுதழுது ஒழுகிப்போகிறாய் கைகண்டதாசிக்குக் கண்ணீரில் குறைச்சலாயில்லடி நில்.

விகர்னன்சொல் விருத்தம்.

பண்ணூற்றும்பாவைதனைப் பங்கமாய்பேசக்கேட்டு
பெண்ணூற்றுந்தெரிந்தோரெல்லாம் பேசாமலிருக்கலுற்றீர்
தொண்ணூற்றொன்பதுபேர்பின்னே தோன்றியவிகர்னன்சொல்ல
தொண்ணூற்றும் வார்த்தையுங்கட் கேற்குமோவேற்றிடாதே.

(வ-ம.) கேளும்மகாராசாக்களே மகாபதிவிரதையான துரோபதையைஇந்தச் சபையிலேபங்கமாய்சொல்ல அதைக்கேட்டு எல்லாந்தெரிந்த பெரியோர்கள் யாவரும் ஊமைபோல வாயை மூடிக்கொண்டுசும்மா விருக்கிறீர்களே துரியோதனன்முதலாகிய தொண்ணூறொன்பதுபேருக்கு பின்பிறந்தவிகர்னனாகிய ஒருசிறுவன்சொல்லும்வார்த்தை உங்கள்செவிக்கு ஏற்குமோ ஏற்காது ஆகிலுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்.

இதுவும்விகர்னன்சொல் விருத்தம்

ஐந்துபேர்தமக்கோமான மனைவற்றுமிலையாமானம்
இஞ்சொல்சேர்மனையாளென்ப தெல்லார்க்குமுண்டுகண்டா
மிஞ்சிநல்லருந்ததிக்கு மிருந்தகற்புடையாள்தன்னை
கொஞ்சமாய்சொல்லும்வார்த்தை கொற்றவர்க்கடுத்திடாதே

(வம்-) கேளுங்கள் மகாசபையோர்களே இந்தப்பாண்டவர்கள் ஐந்துபேருக்குந்தானுமானம் இந்தமானம் அனைவருகளுக்குமில்லையா அவனவன் பெண்சாதியை வைத்து வாழ்கிறவனேயல்லாமல் வேறல்ல அந்தஅருந்ததிக்கு சமானமான பதிவிரதையாகிய துரோபதையைஇந்தராசசபையிலே வேசியென்றும்தாசியென்றும்பேசுகிறதுராசாக்களுக்கு தர்மமா நீதியா ஐயோ என்ன பாவம்

துரோபதைசொல் விருத்தம

துன்னியசபையிலுள்ள தொழும்பெரியோரேபோற்றி
என்னைமுன்தோற்றபின்பு எழிலவர்தோர்த்திட்டாரோ
மன்னவர்முன்னேதோர்த்து மற்றென்னைதோர்த்திட்டாரோ
நன்னிலைதுணைதோர்கள் ஞாயமாய்பேசுவீரே.

(வ-ம்.) கேளுங்கள்சபையிலுள்ள புண்ணியவான்களேபாண்டவர்கள் முன்னேதோர்த்தபிறகு என்னைதோர்த்தார்களா என்னைமுன்தோர்த்தபின்ஐந்துபேருந் தோர்த்தார்களா இதிலேகண்ணாற்கண்டதைநியாயமாய் சொல்லவேணும் பெரியோர்களே,

விகர்னன்சொல் விருத்தம்.

நிலத்தினிற்றுரியோதனன் நெடுமுடிவைவர்தேவி
கலக்கமுற்றழுதுவிம்மி கதறியேபுலம்பக்கேட்டால்
நலத்தினில்மிகுந்தநீதிநியாயத்தைதெரிந்தநல்ல
குலத்தினிற்பிறந்தோரானால் கூசாமற்பேசிடாரோ.

(வ-ம்)இந்த கடல்சூழ்ந்த பூமிக்கெல்லாம்அதிபதியான பாண்டவர்களுக்கு அபிஷேகபத்தினியான துரோபதையானவள் இந்தசபையில் முறையிட்டு அலறிவிம்மி அழுதுநியாயத்தைக் கேட்டால்நீங்கள் சத்தியம் தயை தாட்சண்யம் நியாயமுள்ளவர்களும் நற்குலத்திற் பிறந்தவர்களு மானால் எதார்த்தத்தைப் பேசலாம் சபையோர்களே.

இதுவும் விகர்னன்-சொல் விருத்தம்.

நன்னுதற்புடையாளிங்கே நடந்ததைக்கேட்டாலெங்கள்
அண்ணன்தன்முகத்துக்கஞ்சி யந்நீதஞ்சொல்லப்போறீர்
மண்ணின்மேல்நின்றுபெண்ணின்வழக்கோரஞ்சொல்லொணாது
கண்ணிற்கண்டதனைஎள்ளுக் காய்பிளந்தாற்போற்சொல்வீர்.

(வ-ம்) அந்தபதிவிரத ரத்தினமான துரோபதை முறையிட்டுஇந்த சபையில் நடந்தகாரியத்தை யதார்த்தமாய் சொல்லச்சொன்னு லெங்களண்ணன் துரியோதனமகாராசன் முகத்துக்கஞ்சி அசத்தியம் சொல்லப்போறீர்கள் மண்ணின்மேல்நின்றுவழக்கோரஞ்சொல்லலாகாது கண்ணில் கண்டதை எள்ளுக்காய் பிளந்தாற்போல சொல்லும் பெரியோர்களே.

சகுனி-விகர்னனுக்குச்சொல்விருத்தம்

கிரிகைகெட்டவனேநூற்றைக் கெடுத்ததுகுறுணியென்று
உரையுடனுலகந்தன்னிற் சொல்லுவாரதனைப்போலே
விரல்மிகுநூறுபேரில் விஷத்தைபோல்நீயொருத்தன்
ருகைசெய்யப்பிறந்தபோதே குலநீணிவிலங்குமப்பா.

(வ-ம்) கேளாய் என் இளையமருமகனான விகர்னனே நூற்றைக்கெடுத்தது குறுணியென்றுஉலகத்தில் சொல்லுவார்கள் அதுபோலேநூறுபெரிலே நீயொருத்தன் இந்தகுலத்தை கெடுக்கப்பிறந்தாய்உன்னால உங்களண்ணன்பேர்நன்றாய் விளங்கும்,

விகர்னன்சொல்- விருத்தம்.

பார்புகழ்கர்னராசன் படைத்தவெப்பொருளுந்தோற்று
சார்புதம்பியரைதோற்று தன்னையுந்தோற்றுவிட்டு

சேர்வுகொண்டொருவருக்கு தொண்டனாய்போனபின்பு
தார்சூழலவளைத்தோற்கத் தகாதென்றுசொலலொணாதோ.

(வ-ம்,) கேளுங்கள் இராசாக்களே இந்தத்துரோபதை என்னைதோ
ற்றபிறகு தன்னை தோற்றார்களா வென்று கேட்டால் பேசமலிருப்ப
து தருமமா தருமராசன் தன்னுடைகரங்களெல்லா முன்னேதோற்றுபி
றகுதம்பிமாரையுந் தோற்றான்பின்பு தானுந்தோற்று அடிமையாய்
போனானெனுவனுக்த அடிமைய ய்போனவனிந்த துரோபதையை
வைத்து ஆடுகிறது தருமமல்ல துரோபதையை தோர்த்ததில் நன்
மையல்லவென்று சொல்லுங்கள் சபையிலுள்ளபெரியோர்களே

விதுரன்சொலவிருத்தம்.

நரைக்கெதன்னவயதுசென்று நாட்படவிருந்தாலென்ன
தரித்திடுஞ்சாஸ்திரங்கள்சதகோடிகற்றாலென்ன
பெருந்தடுஞ்சிறியோரேனும் புத்தியுள்ளவனேதக்கோன்
இந்தவிகர்னன்வார்த்தை விகிதந்தான்மெய்யேமெய்யே

(வ-ம்.) நாம நரைத்துபோனதினாலென்ன நாட்படயிருந்துதானெ
ன்ன அனேகசாஸ்திரங்கள் படித்துதானென்ன சிறுபிள்ளைகளாயிரு
ந்தாலும் புத்தியுள்ளவனே பெரியவனிந்த விகர்னன்சொன்னவார்த்
தையே சரியென்றுச்சொன்னான்,

கர்னன் விகர்னனுக்குச்சொல்விருத்தம.

ஒஞ்சநிவழக்குச்சொல்ல உன்னையாரழைத்தாரிங்கே
நெஞ்சொடுநீதிசாஸ்திரம்நீதானாகற்றுக்கொண்டாய்
கஞ்சிலேவடிக்கத்கற்றாய்கற்றாப்போல்பேசலுற்றாய்
பிஞ்சிலேபழுத்துபோறாய் பேசாதேநீவிகர்னா,

(வ-ம்) ஒய்தம்பிவிகர்னா ஒருதலைவழக்கு பேசவேண்டாம் உன்னை
யழைக்கவில்லை தருமசாஸ்திரமெல்லாம் நீ தானா படித்துக்கொண்
டாய் சபையிலுன்னைவிட பெரியவர்களில்லையா ஒடித்தகஞ்சிலேவடி
க்கவும கல்லாமைகற்றுபேசவும் பிஞ்சிபிலேபழுததவன் நீயொருத்
தன் புறப்பட்டாய் பேசாமல் சுமமாயிரு விகர்னா.

இதுவும்-கர்னன்-சபையிலுள்ளவர்களுக்குச்சொல்-விருத்தம்

தெரியாமல்சிறுவிகர்னன் செப்பியவார்த்தைதன்னை
பெரியோரென்றுரைத்தீரல்ல பெரியோருங்களைப்போலுண்டோ
சரிதானுவழக்கிலுள்ள சங்கற்பந்தெரிந்திட்டீரோ
வரிவாகயிதோநான்கேட்கும வார்த்தைக்குத்தாரஞ்சொல்வீர்

(வ-ம்.) கேளுங்கள் அபியாகபிள்ளை இந்தவிகர்னன்வெகு ஞாயத்
தை சொன்னானென்று மெச்சிக்கொண்டபோதே இவனைவிடநீங்கள்
யோக்கியந்தான் ஆஆ இந்தவழக்கிலுள்ள சூட்சத்தைதெரிந்துக்கொ
ண்டீர்களோ இதோ நான்கேட்கும கேள்விக்கு உத்தரவு சொல்லுங்
கள்பார்ப்போம்.

இதுவும்-கர்னன்சொல்-விருத்தம்.

தனக்குள்ளேபொருளுந்தம்பி மாரையுந்தனையுந்தோற்றான்
புனக்கிளியிஐவர்படைத்த பொருளல்லால்வேறேயுண்டோ
குனிக்கவோமரத்தைநாடிக் குறித்தாடிகெலித்துக்கொண்டால்
கனக்கவேதழைபூபிஞ்சு காய்பழம்வேறேசொல்வீர்.

(வ-ம்) கேளுங்கள் இச்சபையில் வந்திருக்கும் உரியவர்களாகிய பெரியோர்களே தனக்குள்ள பொருள்களெல்லாந் தோற்றுத் தம்பிமாரையுந் தோற்றுப்போனாலிந்த துரோபதை அவர்களுக்குடன்பட்டபொருளேயல்லாமல் மற்றப்படிக்கு வேறுண்டோ நல்லது ஒரு மரத்தை குறித்து சூதாடி செலித்துக்கொண்டால் அதில் தழைவேறு பூவேறு பிஞ்சுவேறு காய்வேறு கனிவேறு பளாபளா நன்றாய்ச்சொன்னீர்கள்.

விகர்னன்சொல்-ஆசிரியவிருத்தம்.

தடைக்கஞ்சாபாம்புக்கோராணையில்லை
சாந்தமிலாமூர்க்கருக்கோதருமமில்லை
மடைக்கஞ்சாவெள்ளமதைமறிப்பாரில்லை
மனம்போனபோக்குக்கோர்வழியொன்றில்லை
படைக்கஞ்சாஉங்களுக்குப்புத்தியில்லை
பூவைகண்ணீர்விருதாவிற்போவதில்லை
தடைக்கஞ்சாகுடியரைப்போல்சேர்ந்திருந்தச்
சமஸ்தானத்தைகெடுக்கத்தலைப்பட்டீரே.

(வ-ம்.) தடைக்கஞ்சாபாம்புக்கு ஆணையில்லை சாந்தமில்லா மூர்க்கருக்கு தருமசிந்தையில்லை அலைகடந்தவெள்ளமதை தடுப்பாரில்லை இன்னப்போனபோக்குக்கு வழியேயில்லை பழிக்கஞ்சாவுங்களுக்கு புத்தியில்லை இந்த பதிவிரதை கண்ணீர் பழுதாகப்போகிறதில்லை கெஞ்சாகுடியரைப்போல் நீங்கள் இரண்டொருவர் சேர்ந்து இந்த சபஸ்தானத்தைக் கெடுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறீர்கள்.

கர்னன்-விகர்னனுக்குச்சொல்-விருத்தம்.

என்னடாவிகர்னநீதா னிறைசபைதனிலேநின்று
நன்றிசேர்சமர்த்தனென்று நல்லுரைபகர்ந்திட்டாய்நீ
துன்னவர்மாலைமார்பன் துரியோதனமகாராசன்
மன்னிடவிழியால்தன்னை விட்டிடானகண்டிடாயே.

(வ-ம்) ஆனால் கேளடா விகர்ன நீசொன்னசொல் துரியோதனமகாராசன் துரோபதையை விடப்போகிறதில்லை சும்மாவிரு விகர்னா.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்.

இத்தனைபேச்சென்னடாவடாதம்பி
எழில்துற்சாதனப்புலியேஎன்சொற்கேளாய்
மெத்தபுத்திசாலியிந்தவிகர்னனென்றும்
மேன்மேலுந்தலையசைத்தவேந்தர்முன்னே

பித்தனென்னும்பாண்டவர்கள் துகில்முன்வாங்கி
  பேசித்தபடிவழக்குபேசுமிந்த
சித்தினியைஎதிர்நிறுத்திமானபங்கந்
  தெரிந்திடவேயிவள் துகிலையுரிந்திடாயே.

(வ-ம்.) அடாதம்பி துற்சாதனா இங்கேவா அந்த விகர்ணன் மெத்தபுத்திசாலியென்று மெச்சிக்கொண்டார்களே இந்த ராசாக்களிவர்கள் பார்க்கும்படி அந்தபாண்டவர்களைந்துபேருடைய வஸ்திரத்தை முன்னே வாங்கிக்கொண்டு இப்போது எதிர்வழக்குப்பேசவந்தானே இவனை நிறுத்தி சேலையை உரியடாதம்பி

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

பன்னிவிகர்ணன்சொல்லைப் பழுதென்றதுரியாகேளாய்
என்னமோகெடுதிகால மிசைந்ததவுங்களுக்கு
கன்னியைபங்கஞ்செய்யக் கருத்தினில்நினைத்தபோதே
மன்னுமுன்குடிகளுக்குத்தீங்கு வந்ததுவந்ததப்பா.

(வ-ம்.) அடா துரியோதனா உனக்கு என்னமோ பொல்லாதகாலஞ் சம்பவித்தது அந்த மகாபத்தினியான துரோபதையை மானபங்கஞ்செய்யவேண்டுமென்று எப்போது நினைத்தாயோ அப்போதே உன்குடிக்கு அனர்த்தகாலம் வந்தது சொன்னேன் துரியோதனா.

விதுரன்-கர்னனுக்குச்சொல்-விருத்தம்.

தண்டுமுலகங்க ர்க்குந் தார்மன்னரிடத்திருந்து
புண்டுங்கோலைப்போலப் புகல்கின்றகர்னநீதான்
எண்படுநூல்கடோர்ந்து மிழிவழக்குரைக்கலுற்றாய்
பெண்பழிதேடிக்கொண்டோ பெரியவனாகப்போறாய்.

(வ-ம்.) கேளும் கர்னா தர்மசாஸ்திரமெல்லாம் பார்த்திருந்து ராசாக்களிடத்திலிருந்தும் புண்ணில்கோலிட்டாப்போல் இநுவழக்குப்பேசுகிறாய் பெண்ணைப்பார்த்தால் பேயுமிறங்குமென்பார்கள் அவ்வளவுமில்லாமல் ஒரு பெண்பிள்ளைகள்பேரில் உன் பிரதாபமெல்லாங்காட்டுகிறாய் இதனாலேயா பெரியவனாகப்போகிறாய்.

கர்னன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

பெரியோரைத்துணைக்கொள்ளென்று பேசினபடியேநீங்கள்
உரியோரென்றிங்கேசேர்ந்து வுதவியில்லாமற்போச்சு
பிரியவுட்சுவரிருக்கப் புறஞ்சுவர்பூசப்பட்ட
சரியானபெரியோர்நீதான் சப சுநன்றாச்சொன்னீர்

(வ-ம்.) சேளும் விதுரமகாராஜனே பெரியோரைத் துணைக்கொள்ளென்றல்லவோ வேதஞ்சொல்லுகிறது அப்படி நீங்கள் பெரியோர்களென்றும் உங்களைச்சேர்ந்தசற்கு ஒரு உதவியில்லாமற் போச்சுது அதிலேயும் உட்சுவரிருக்கப் புறஞ்சுவர் தீர்த்தப்பட்டீர் சரிதான் பெரியவர்தான்.

விதுரன்-கர்னனுக்குச்சொல்-விருத்தம்.

பொய்சகூறிசொன்னவருஞ்சபையிலொரு
  தலைவழக்காம்புகன்றபேரும்

பைசாசமாநரகில்வீழ்வனென்று
நூன்முறையைப்பறக்கடித்தாய்
மெய்சார்ந்தவிகர்னனையுமெடுத்தெறிந்தா
யளவிலாவிகாதஞ்சொன்னாய்
பொய்சாருப்வழக்குரைத்தாய்
துரியோதனனையுங்கெடுத்தாய்புகழோகர்னா

(வ-ம்) கேளும் கர்னா பொய்சாக்ஷி சொன்னவரும சபையில் ஒருதலைவழக்காய் பேசினவனும் நரகத்திலடைவார்களென்று சொல்லப்பட்ட தருமசாஸ்திரத்தைத்தள்ளிப்போட்டாய் இந்த விகர்னன்சொல்லும் வார்த்தையையும் எடுத்துப்போட்டாய் அந்த துரியோதனன் புத்தியையும் கெடுத்தாய் இப்படிப்பட்ட துர்நடத்தையினாலேயா நல்லவனாகப்போகிறாய் கர்னா

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

நல்லதுசிற்றப்பாவுன் ஞாயதனைநிறுத்திவையும்
எல்லையில்கர்னன்சொல்லு மெனசொல்லுமுனக்கொவ்வாது
வல்லதுற்சாதனனேகேள் வடிவவெம்புலிபோற்போற்றி
சொல்லுமிங்கிவளுடுத்த துகிலையுமறிந்திடாயே.

(வ-ம்) கேளும் சிற்றப்பா கர்னன்சொல்லும் என்சொல்லும் உன் செவிக்கேற்கப்போகுதா உன்னுடைய அபிப்ராயம் அங்கேயிருக்கட்டும் அடா துற்சாதனா இவளுடுத்தியிருக்குஞ் சேலையை உரியடாவென்று முன்னேதான் சொன்னேனே இன்னமுந்தாமதமா தம்பி துற்சாதனா.

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

உரித்திடுஞ்சேலையென்றே யுரைத்தவென்னண்ணாகேளீர்
பரிந்துநீசொல்லுமுன்னே பதைக்குதேயென்தன்கைகால்
தெரிந்திடசபையிலுள்ளோ சிரித்திடவைவர்நெஞ்சம்
கரிந்திடவிவள்தன்சேலை கடுகெனவுரிவேன்பாராய்.

(வ-ம்.) கேளும் என்னண்ணாவே நீசொல்லுகிறதற்கு முன் என் கைகாலும் பதைக்குது அப்படியே யுரிந்து போடுகிறேன் பாரும்.

துரோபதையை துற்சாதனன்மேடைமேல்-இழுக்கிற-கண்ணிகள்.

பங்காயென்னண்ணனைப் பார்த்துநகைத்தவுன்
ஆங்காரமிப்போ அறிகிறேன்வாடி
தாங்காமலிந்தசபையிலே நீகேட்ட
தீர்ககாமல்வழக்கைநான் தீர்க்கிறேன்வாடி
வேணபட்டுஞ்சும்மாய் வீம்புபேசுமுந்தன்
ஆணவமிங்கே அடக்கிறேன்வாடி
நாணயமாகவுன் னுகரீக்மெல்லாம்
காணவேயெல்லோர்க்குங் காட்டுகிறேன்வாடி

துரோபதை-மேடையில்-போகிறபோது சொல்-விருத்தம்-முகாரி.

பெரியோரிலையோபெண்களையும் பெற்றோரிலையோமானமுள்ள
உரியோரிலையோவேந்தனுக்கிங் கொருத்திக்கில்லையோநீதிசொல்ல

அரியோரில்லையோவொருவருக்கு மருளே இல்லையயானென்றுந்
தெரியாயேழையென்பங்கில் தெய்வமில்லையோவிதியே.

(வ-ம்.) அரி அரி வைகுந்தவாசா முகுந்தா அன்பனைக்காக்கும் கோவிந்தா மகாசபையில் மனுவிக்கியானந்தெரிந்த பெரியவர்களில்லையா என்போலும் பெண்களைப்பெற்றோரில்லையா மானாபிமானமுடைய சுற்றத்தாரில்லையா நன்மை தீமையெனனும் நீதிமொழிகளைச் சொல்லும்படியான அறிவாளிகளில்லையா ஒருவருக்காவது அருளிச் செயலில்லையா எதுந்தெரியாத எழையானவள்பங்கில் தெய்வமுமில்லையா விதியே

துற்சாதனன்சொல்-கண்ணி.

தெய்வந்தானென்னசெய்யுமோபார்ப்போமுன்
சித்துவித்தையிங்கே காட்டாதே
சேலையுரிந்திந்தசபையிலேநானுன்னை
திகம்பரமாக்காமல் விடுவேனோ

துரோபதை-ஸ்ரீகிருஷ்ணசாமியை-துதிசெய்கிற-புலம்பல்.

தரு-கெண்டா-ஆதிதாளம்-பல்லவி.

மாயவனேவைகுந்தவாசா எந்தன் மானங்கார்க்கவேணுஞ்சர்வேசா
ஆபநான்மறைதேடும் ஆதிமூலப்பொருளே
அபயமபயமுந்தன் உபயபாதமேகெதி-அரி-மாய

துற்சாதனன்சொல்-கண்ணி.

நேயமாக ஆதிமாய னென்றுஞ்சொன்னால்
நிலைநிற்குமோ மானமென்றெண்ணாதே-ஒரு
பாவிநான்செய்த அபசாரப்பொறுத்துப்
பரிவாரட்சிப்ப துன்பாரம்

துற்சாதனன்சொல்-தரு

பலபேருமெய்யென்று மெச்சிக்கொள்ளவுந்தன்
பத்தினிசனமிங்கே காட்டாதே-யிப்போ
பாரின்முன்சேலையை யுரித்துசபைதனிலே
பவுஷக்கெடுக்கிறேன் பாரடி

துரோபதைசொல்-முன்தரு.

ஆணைமுறையிடவே வந்தாய்-மடுவில்
அன்றுமுதலையைப் பிளந்தாய்
ஓதுங்கஜேந்திரனைப் புரந்தாய்-இணை
யுனையல்லாற்றிக்கில்லை யெந்தாய-அரிமாய

துற்சாதனன்சொல்-கண்ணிகள்.

மாளா துகில்வர மந்திரங்கற்றுயுன்
மந்திரவித்தைக்குச் சலிப்பேனோ-சும்மாய்
வளருந்துகிலெல்லாம் வாங்கிவாங்கியுந்தன்
மானங்குலைக்கிறேன் பாரடி

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

சித்திரமாயனந்தஞ் சேலைகளுதிக்குமானால்
எத்தனைகோடியென்று யிழுத்துநானுரிவேனப்பா
உத்தவென்மார்புந்தோளு முளைக்குதேவுடல்கள்சோர்ந்து
இத்தனைகலைவந்தற்று லென்னசெய்வேன் அண்ணேயண்ணே.

(வ-ம்) அடடா அப்பா இதென்னகாரணமோ தெரியவில்லை அற்புதநிற்புதமாய் சித்திரவிசித்திரமாய் கோடிசூரியப்பிரகாசமானசேலைகள் விதவிதமாய் வாசாமகோசமாய் புற்றிலே ஈசலானது பெரும்போக்குப் புறப்பட்டாற்போல யெத்தனைகோடிசேலையென்று நானுரிவேன் கையுஞ்சோர்ந்துபோகுது காலுமிளைந்துபோகுது என்னாலாகாது அண்ணே.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்

புலியொருபூனையாகப் போனாப்போலடடாதம்பி
பலர்களுநகைப்பதாகப் பயனில்லாவார்த்தைசொன்னாய்
உலைவிலாக்கலைகளின்ன முண்டாகும்வித்தைபார்ப்போம்
வலியடாவுரியடாநீ மனமதுதளர்ந்திடாதே.

(வ-ம்.) அடாதம்பி துற்சாதனா புலியைப்போலொத்த நீ பூனையாபொடுங்கிவிட்டு எல்லோரும் நகைக்கும்படியாய் என்னாலேயாகாதென்றுசொன்னாய் தயிரியம்விடாதே இன்னமபார்ப்போம் உரியடா உரி.

வீகர்ணன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

உரிஉரியென்றிந்தப் பழிக்காளாக்கென்ச்சொல்லாதே
நெரிநெரிதப்பியொருவ நீயுமுன் குடியும்வாழ்வும்

வரிவரிவேற்கண்ணாளின் மனநெருப்பாலின்றோடே
சரிசரியென்றுசொல்லுஞ் சத்தியமில்லாவண்ணே.

(வ-ம்.) மீகளாய் அண்ணே உரிஉரி நாழிநாழி உழக்காழாக்கென்று சொல்லவேண்டாம் உன்னுடைய தம்பியாரும் நீயும் குடியும் உன்னுடையசெங்கோலும் உன்னுடைய வாழ்வும் துரோபதைமனமென்னப்பட்ட நெருப்பிலே சரி சரியென்று சொல்லண்ணே.

துரோபதை-முன்புலம்பல்-தரு. 1

அடலிரணியனைவின் சேர்த்தாய்-உந்தன்
அன்பில்பிரகலாதனைக் காத்தாய்
திடமானதேவர்கள் துயர் தீர்த்தாய்-இந்த
ஜெகங்களுக்குப்யக்கிருபைக்கண் பார்த்தாய்-அரி-மாய

துற்சாதனன்சொல்-கண்ணி

ஓலமிட்டேசும்மா யொழுகிப்போருயுந்தன்
ஒழுங்கலுக்கும்பயப் படுவேனோ-கை
ஓய்ந்துபோனுலுமெய்ச் சாய்ந்துபோனாலும்-நா
ஞனைபங்கம்பண்ணுமல் விடுவேனோ

துரோபதை சால்-கண்ணி

நாராயணா அரி கோவிந்தா-உன்னை
நம்பினேனையா கோவிந்தா
ஆரணனே அரிகோவிந்தா நானுன்
அடைக்கலமையா கோவிந்தா-அரி-மாய

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

அறிவுள்ளவண்ணாவேகேள் யடைவுடனேற்றம்போட்டு
மறிகடல்நீரையெல்லாம் மாளவேயிறைத்திட்டாலும்
நெறியுள்ள இவள்படைத்த நெடுந்துகில்முழுதுமவாங்கி
உரிவதுகடினமையோ யினியென்னாலாகாதப்பா.

(வ-ம்) கேளாயண்ணே சத்தசமுத்திரத்தில் யேத்தம்போட்டு வற்றிப்போகும்படியாய் நீரையிறைக்கலம் இவளுக்குண்டான வஸ்திரத்தை உரிதற்கினிமேல் என்னாலாகாது எங்களப்பன் தரமல்ல கல்லைக்கடிக்க.

பொது-விருத்தம்

வனக்கிளிதுரோபதைக்கு மாளாபல்வளர்ந்தசேலை
தனித்தனியுரிந்துற்சா தனன்கைகள்சலித்துநிற்க
குனித்தனிவிதுரன்வீஷ்மன் கோதிவேதியன்துரோணன்
இனித்தசொல்பெரியோரெல்லா யெழுந்தவருரைசெய்வாரே.

(வ-ம்) அதேதெப்படியென்றால் துரோணர் வீஷ்மர் அஸ்வத்தாமர் விதுரன் இன்னும் சபையிலிருக்கப்பட்ட பெரியோர்கள் சொல்லுகிற விதங்காண்க.

துரோபதைசொல்லல்-முன்-தரு

தேவாதிதேவனே   பின்னேரம்-என்னைத்
திருக்கண்பார்த்தாலே   யுபகாரம்
நிமிஷத்திலேயிந்த   அரசர்க்குள்ளேயுன்னை
நிர்வாணமாக்குறேன்   பாரடி-மாய

துரோபதைசொல்-தரு.

கருதிபமெய்யருக்கெல்லா   மெய்யா-என்னைக்
கைசோரவிட்டிடாதே   ஐயா
விரிகடல்மேற்றுயில் தய்யா   இந்த
வேளைகாத்தருள்செய்வாய்   ஐயா-அரி-மாய

துற்சாதனன்சொல்-கண்ணி.

உரித்தசேலையெல்லா   முறிந்துகொண்டேனின்ன
மொருசுத்திருக்குதுபாரடி   இந்த
ஒருசுத்துபோனாலுன்   பரிசுத்தமில்லாமிங்
குடனேவெட்டவெளி   யாமடி

துற்சாதனன்சொல்-விருத்தம்.

சேலைநாமுறிவோமென்று திருவடிநீயறிவையோதான்
மூலையிலொருவுள்ளாடை முன்னமேயுடுத்திக்கொண்டாய்
ஏலநீயுடுத்தவாடை யிதனையுமுறிந்துகொண்டால்
நீவிகள்குருமேவயப்பால் நீயென்னசெய்யப்போறாய்.

(வ-ம்.) ஆ ஆ இதென்ன ஆச்சரியமடி இந்த சபையில் உன் துகிலை நாங்கள் உரிவோமென்று உனக்குத்தெரியுமா சேலைகளுள் ஒரு சேலைகட்டிக்கொண்டாயே இதையும் உரித்துப்போட்டாலின்னமொரு சேலை நான் கொடுப்பேனென்று நினைத்தாயோ என்ன உன் புத்தி.

பீமன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

மதித்ததுரோபதையைத்தீண்டி வஸ்திரங்களையநாங்கள்
எதிர்த்தும்மைப்பொருளா யெண்ணியிருப்பமோதுரியோதனகேள்
துதித்தவிகர்னன்போக தொண்ணூற்றொன்பதுபேர்தன்னை
சிதைக்கிறேனெமபுரத்திற் சேர்க்கிறேனெழுந்துவ ரீர்.

(வ-ம்.) அடா துரியோதன இந்த ராஜசபையிலே துரோபதையை நிறுத்தி வஸ்திரபங்கம் பண்ணும்படி நாங்கள் பார்த்திருப்போமா எங்களண்ணன் சொல்லுக்கு அடங்கியிருந்தோமே யல்லாமல் நீங்களனைவரும் ஒருபொருட்டா இப்பவும் இந்த விகர்னன் ஒருத்தன் தவிர மற்ற தொண்ணூற்றொன்பது பேரையும் எமபுரத்துக்கு இப்போ அனுப்பிவைக்கிறேன் எழுந்திருந்து வாங்களடா.

தருமர்-பீமனுக்குச்சொல்-விருத்தம்.

மறுத்தேனென்றும்மறக்காதேகருத்தேதகைவில்கதைகொண்டாய்
ஒருத்தால்தெய்வமொண்ணுதோபொருத்தாயின்னம்பொருவீமா.

சபையிலுள்ளோர்சொல்-விருத்தம்.

இவளேஐவருக்குந்தேவி யிவளேமற்றெவர்க்குமாதா
இவளேஇப்பூமிதேவி இவளேயக்கினிசொரூபி
இவளேசத்தியசிதானி யிவளேயுத்தமகுணனி
இவளேயிக்குலத்துதெய்வ மிவட்கிணையொருவருண்டோ.

(வ-ம்.) இவளே பஞ்சபாண்டவர்க்கு மனைவி மற்ற யாவர்களுக்கும் இவளே மாதா பூமிதேவியு மிவளே அக்கினிசொரூபி இவளே சத்தியவசனி இவளே உத்தமகுணத்தைப்பெற்றவள் இந்த குலத்துக்கு லதெய்வம் இவளேயல்லாது மற்றெவரையும் இவளுக்கிணைசொல்லக் கூடாது தகும் தகும்.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்.

தராதரந்தெரிந்தோரெல்லாஞ் சந்தோஷப்படுவதாலும்
வராதுகிலிவட்குச்சும்மா வளர்ந்துதேயுமையாலும்
பொறுமிவளசெய்தகுற்றம் பொறுத்தேனடாதம்பி
துரோபதைதனையெடுத்தென் துடைமீதுவைத்திடாயே.

(வ-ம்.) அடாதம்பி துற்சாதனா இங்கேயிருக்கிற கிழவரெல்லாம் அவள்மேலே சந்தோஷப்படுகிறபடியினாலே மானத்துகில் இவளுக்குவளர்ந்தது ஆனபடியினாலே எனக்கிவள் என்னகுற்றஞ்செய்திருந்தபோதிலும் பொறுத்துக்கொள்ளத்தான்வேணும் நிலைலென்று வந்து என்தொடைமேலே உட்கார்ந்தால் பொறுத்துக்கொள்ளுகிறதற்கு தடையில்லை நல்லது நீயாகிலும் எடுத்து வந்து என் துடைமேலே உட்காரவையடா தம்பி துற்சாதனா

விகர்னன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

தாவியெதிர்வரும்யெமனைத் தடுக்கலாகும்
 தலைகொண்டபடுவிஷத்தை யிறக்கலாகும்
மேவுவடவாக்கினியை யவிக்கலாகும்
 மேல்வருபிரமசாஸ்திரத்தை விலக்கலாகும்
ஆவதிகேள்சற்புடையோர் சபித்தால்தீர்க்க
 ஆதிமுப்மூர்த்திகளா லாகாதண்ணே
பாவையிவள்மகிமைதனைக் கண்ணிற்கண்டும்
 பழிதேடிகொள்வதற்கே பதைக்கின்றாயே.

(வ-ம்) கேளும் அண்ணே கொல்லவருகிற எமனை தடுக்கலாம் தலைக்கேறின விஷத்தையுமிறக்கலாம் வடவாக்கினியையும் விலக்கலாம் மேலேவரும் பிரம்மாஸ்திரத்தையும் விலக்கலாம் கற்புடைய ஸ்திரீகள் மனம்நொந்து அவள் வாக்கினாலே ஒன்றைச்சொன்னால் அதைத்தடுக்க மும்மூர்த்திகளாலுமாகாது இவள் மகிமையைக் கண்ணாலே கண்டும் பழியைத்தேடிக்கொள்ளலாமோ அண்ணே.

திரௌபதைக்கும்-திரியோதனனுக்கும்-தர்க்கம்

தரு-இ-ம்-காம்போதி-மிசுரதாளம்.

ஒருமைத்தரணிபற்குள்பெருமைப்படவுதித்தாய்படுபாவி இந்த
அருமைக்குருகுலத்தின்முறைமைதவிரவிட்டாயடாதோஷி யடி
முறைமைத்தவிரவிட்டைவர்கள்நித்தமிழுக்குமொருவேசி உன்
முறையிப்படியிருக்கசபைமெச்சவுநொடித்தாயடிதோஷி உந்தன்
மனதிற்பகையைவைத்துயீவிடந்தனிலழைத்தபடுபாவி நீ
வலியப்பகடைவைத்து அடிமைப்படகெலித்தாய்டாதோஷி அடி
அடிமைப்படகெலித்து அவர்கைப்பொருள்பறித்தறியாயோ நீஎன்
அடிமைப்படசிறிக்கிதுரைசொற்படிக்குநடக்கவருவாயே யெந்தன்
தருமத்துரைகளுக்குச்சதிகற்பனைநினைத்தபடுபாவி இந்தச்
சகுனிப்புலையனிட்டசொற்படிமுடித்தாயடாதோஷி எந்தன்
சலவைத்தொடைமடிக்குள்சரசத்துடனிருக்கவருவாயே இந்தச்
சகுனிசொல்லையெடுத்துகடலுக்குப்புரமெட்டிஎறிவேனே நானுன்
கொடையிற்றினியிருக்கச்சபையிற்பழுதுரைத்தபடுபாவி உந்தன்
தொடையிற்கழுகுகொத்தநெளியப்புழுபுழுத்து மடியாயோ

தலையைபடுகளத்திலுருகுக்கனைகள் பட்டென்னுயிர்போயுமுன்னை
தழுவிக்கொள்ளநினைத்தமனதெப்படிமறக்கும்மறவேனே
என்னைத்தழுவிக்கொள்ளநினைத்தமடியில்தனையழைத்தபடுபாவி
என்றன்தருமதுரைகள்கைக்குள்டிபட்டலறியெப்போவிழுவாயோ
உன்னைசபையில்துகிலவிழ்த்ததலையைக்குனியவைத்திவர்தானே
என்னசபதத்துடனழைததுப்புகழ்பெற்றின ஜெயிப்பாரடிபோடி
உந்தன்தலையைக்கணைதரிக்கமுடிபெற்றிடுஞ்சமர்த்தரிவர்தானே
இந்தச்சவலைப்பசகளுக்கு மினிமற்றொருவருக்குமசைவேனே

நீங்களிடிபட்டுவொருமிக்கக்கொடியபடுகளத்தில்மடியாமல்
மண்மேலணயச்சுருளவிழ்த்த மயிரைகையாலெடுத்துமுடிபேனே.

துரோபதைசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

கொலுவினில்நிறுத்தியெந்தன் கூந்தலுந்துகிலுந்தீண்டி
மெலியச்செய்பவரைநாளை வேருடன்போர்க்களத்தில்
தலைதனைத்துணிந்துவெட்டி தனிமுரசறைந்திடாமல்
இலகவேவிரித்தகூந்த லெடுத்தினிமுடித்திட்டேனே.

(வ-ம்.) கேளுங்கள் சபையிலுள்ள ராசாக்களே என்னை இந்த இராஜசபையிலேநிறுத்தி என்கூந்தலையுந் துகிலையுந்தீண்டி என்னை அவமானபங்கஞ்செய்தவனை நாளை இரணக்களத்தில் அவன் மார்பின்மேலிருந்து மயிரைமுடிக்காவிட்டால் நான் துரோபதையல்ல.

பீமன்சொல்-விருத்தம்.

மங்கைதிரௌபதையையிந்த மகாசபையினில்நிறுத்தி
பங்கமாய்ப்பழுதுசொன்ன பாதகர்தம்மையிந்தச்
செங்கையிற்கெதையினலே சின்னபின்னங்களாகச்
சங்கரித்திடுவேன்சொன்ன சபதமுமுடிப்பேன்பாரீர்.

(வ-ம்.) கேளுங்கள் சபையிலுள்ளவர்களே துரோபதையைச்சபையிலே நிறுத்தி மானபங்கஞ் செய்துவைத்தபேரை என்கையிலிருக்கும் கெதையினலே அடித்துக்கொன்று நான்சொன்ன சபதத்தைமுடிக்கிறேன் ராசாக்களே.

இதுவும்-பீமன்சொல்-ஆசிரியவிருத்தம்.

மதித்ததிரௌபதையைமயிர்பிடித்திழுத்து
வஸ்திரமுரிந்தவன்தன்னைச்
சமைத்தவனுதிரமள்ளியுண்டெனது
தாகந்தீராமல்நானினிமேல்
கதித்தவென்கையாற்புனலெடுத்துண்ணேன்
கதையினற்ஜலத்தினையடித்துக்
குதித்துமேலெழுந்ததிவலையையுண்டு
கொண்டவன்பகையைமுடித்திடுவேன்.

(வ-ம்.) கேளுங்கள் ராசாக்களே மந்திரிகளே துரோபதையை மயிரைத்தொட்டிழுத்துவந்துவஸ்திரபங்கம்பண்ணினவனெவனே அவனை நெஞ்சைப்பிளந்து அவனுடைய உதிரத்தை என்கையினலே அள்ளிக்குடித்து என்னுடைய கோபமென்னப்பட்ட தாபந்தீர்க்காமல் இனிமேல் என்கையினலே ஜலத்தையள்ளி தாகபானம் பண்ணேன் சலம் சாப்பிடவேணுமானல் இந்தக் கெதையினல்சலத்தையடித்து மேலேயெழுந்த சலத்தை சாப்பிடுவேனேயல்லாமல் என் கையினலள்ளிச் சாப்பிடுகிறதில்லை.

அருச்சுனன்சொல்-விருத்தம்.

படுதுரியோதனன்சொற் பழுதுபோகாமலேந்தி
விடுவிடென்றுரைக்குமிந்த விரோதியாங்கர்னன்றன்னை

தொடுகணையாலேபாவி துள்ளவேபிடித்துநாளைப்
படுகளஞ்சேர்க்காவிட்டால் பார்த்திபனனுவேனே.

(வ-ம்.) கேளுங்கள் ராசாக்களே இந்தத் துரியோதனன் சொல்லைக்கீழேவிடாமல் எடுத்துக்கொண்டு இச்சகம்பேசுகிற இந்தக் கர்னனுயிரை என்னுடைய அஸ்திரங்களுக் கிரைகொடாவிட்டால் என்பேர் அர்ச்சுனனு நல்லது ஆகட்டும்.

நகுலன்சொல்-விருத்தம்.

கவடுவஞ்சனைக்கும்பொல்லா கரடகதமனகன்போல
தவறுகள்மிகவேசெய்யுந் தவுபலநாதன்றன்னை
அவமதித்தமர்க்களத்தி லதோகெதியாக்கிவெற்றி
நவின்றிடச்செய்யாவிட்டால் நகுலவ்ன்னகுவேனே.

(வ-ம்.) கேளுங்கள் ராசாக்களே மகாகரடக தமனக வித்தைகளாலே மித்துருபேதஞ் செய்யப்பட்ட சவுபலநாயகனை ரணமுகத்திலே சங்காரம்பண்ணுமற்போனல் நான் நகுலனு நல்லதாகட்டும்.

சகாதேவன்சொல்-விருத்தம்.

புகுநரிகுருக்கள்போலும் புருஷவேசிகளைப்போலும்
வெகுபகைமனதில்வைத்து மித்ரபேதங்கள்செய்து
மகுடமன்னரைக்கலைத்து மாரீசஞ்செய்யுமிந்த
சகுனியைக்கொல்லாவிட்டால் சகாதேவனனுவேனே.

(வ-ம்.) கேளுங்கள் ராசாக்களே நரிகுருக்களென்றுஞ் சொல்லுவார்களே அவர்களைப்போலவும் புருஷவேசிகளைப்போலவும் சதிசர்ப்பனை சாமத்துரோகம் மித்திரபேதமெல்லாஞ்செய்து சமஸ்தான சபையைக் கலைக்கப்பட்ட இந்த சகுனியை சித்திரவதைசெய்துக்கொல்லாவிட்டால் நான் சகாதேவனு பாருங்கள்.

பொது-விருத்தம்.

தருமபுத்திரனில்லாமல் தம்பிமார்நான்குபேரும்
அரிவைதுரோபதையுஞ்சொன்ன அடல்பெருசபதங்கேட்டு
மருவியபெரியோரெல்லாம் மனமிகக்கலங்கும்போது
குருகுலக்கொடியோனன குருடனுங்கூறுவானே.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

ஆகோதெப்படியென்றால் தர்மபுத்திரமகாராசன்தவிர மற்றத் தம்பிமார்நால்வரும் துரோபதையுஞ்சொன்ன சபதங்களைக்கேட்டு சபையிலுள்ள பெரியோர்களும் இராசாக்களும் மனதில் விசனமடைந்திருக்குந் தருணத்தில் திருதராட்டிசமகாராசன் திரௌபதைக்குச் சொல்லுகிறவிதங்காண்க.

திருதராட்டிரன்சொல்-விருத்தம்.

கற்பினுக்கரசேதெய்வ கடாக்ஷமுள்ளவளேபோற்றி
மற்பெருமைவர்க்கிந்தை மகிழ்குலக்கொடியேபோற்றி

பொற்புருமாதர்க்குள்ளே பொறுமையுள்ளவளேபோற்றி
அற்புதத்திருவேயிந்த அபசாரம்பொருப்பாய்போற்றி.

(வ-ம்.) அம்மா திரௌபதையே நீயென் தாயாச்சுதே எங்களை ரட்சிக்கவந்த தெய்வமாச்சுதே அப்படியா இப்படிப்பட்டவளா நீவேண்டாமென்று சொன்னேனே என்பேச்சை இந்தப் பசங்கள் கேட்கிறார்களா உன்மகிமை இந்தபசங்களுக்கும் எனக்கும் தெரிய வந்தது நாங்களென்ன அபசாரஞ்செய்தாலும் பொறுத்துக்கொள்ளவேணும் தாயே.

விகர்னன்சொல்-விருத்தம்.

எட்டினாற்குடுமைகையி லெட்டாமற்போச்சுதானல்
திட்டெனக்கால்பிடிக்குந் திருடர்போல்வந்தாயப்பா
கட்டிதங்கத்தின்மாற்றைக் கண்ணிலாரறிவரோதான்
துட்டப்பிள்ளைகட்கின்னஞ் சொல்லுவதெல்லாஞ்சொல்வாய்.

(வ-ம்.) கேளுமையா என்பிதாவே எட்டினாற்குடுமி எட்டாவிட்டால் கால்பிடித்துக் கொள்ளுகிறதென்று சொல்லிக்கொள்வார்களே அப்படியிருக்கிறது இந்தத் திரௌபதையை நீ துதிசெய்கிறது தங்கத்தினுடைய பிரகாசமும் மாற்றும் குருடனுக்குத் தெரியுமா இத்திரௌபதையின்மகிமை நமக்குத்தெரியுமா ஒருக்காலுந் தெரியாது நீ சொல்லவேண்டியதெல்லாம் உன் துஷ்டப்பிள்ளைகளுக்குச் சொல்லும் இந்த அம்மாளுக்கு உபசாரஞ் சொல்லவேண்டியதில்லை.

திருதராட்டிரன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

உச்சிதமயிலேகேளா யுணர்விலாவெந்தன்மைந்தர்
மச்சினமுறைகொண்டேதோ வகைவிளையாடினார்கள்
குச்சிதமாயெண்ணாதே குறைமனதினில்வையாதே
பிச்சர்களென்றேயிந்தப் பிழைபொறுத்தாள்வாயம்மா.

(வ-ம்.) அம்மா துரோபதையே என்பிள்ளைகள் கள்ளங்கபடுதெரியாதபிள்ளைகள் சூதுவாது ஒன்றுந்தெரியாது இப்படிப்போனால் இப்படிவருமென்றுந் தெரியாதவர்கள் மேலும் எனக்கு மச்சினமார்கையால் அந்தமுறைகொண்டு நாமெதைச் சொன்னாலும் எதைச்செய்தாலும் கோபித்துக்கொள்ள மாட்டார்களென்கிற நம்பிக்கையினாலே விளையாடினார்கள் அந்தவிளையாட்டை நீ வினயமாக நினைக்கவேண்டாம் ஆயிரங்குற்றமானாலும் அடியேனைப் பொறுத்தெப்படியாகிலும் இதை மன்னிக்கவேணுந்தாயே.

திருதராட்டிரன்சொல்-கவி.

பொன்னுலகம்புகழும் கன்னியர்க்கரசே
என்னவரம்வேணும் முன்னிநீமொழிவாய்.

(வ-ம்.) கேளுமம்மா துரோபதையே உன்மனது துயரமெல்லாம் நீங்க என்னாலே உனக்குவேண்டிய பிரயோசன மின்னதென்றுகேட்டால் நான் கொடுக்கிறேன் கேளுமம்மா.

துரோபதை-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்.

ஒருமைகள்பலவும்பேசி யுலகெலாங்குருகுகின்ற
அருமையென்மாமாவுந்த னரவிந்தபாதம்போற்றி
வருமனுந்தியன்றி மற்றுமக்கடிமையான
தருமமூர்த்திகளைக்கொண்டு தவிழ்ந்துநீர்விடுகுவீரே.

(வ-ம்.) கேளும் என்மாமா கேட்டதைக் கொடுக்கிறேனென்று சொன்னபடியினாலே நீங்கள் சூதாடி அடிமைப் படுத்திக்கொண்ட அந்த தர்மமூர்த்திகளை அடிமைத்தனத்தை மீட்டுக்கொடுக்கவேணும் மாமா.

திருதராட்டிரன்சொல்-வசனம்.

அப்படியே கொடுத்தேன் அம்மா.

இதுவும்-திருதராட்டிரன்சொல்-கவி.

கனியெனும்நிறம்போல இனியசொற்கேளாய்
மனதினில்வருந்தா தினியொருவரங்கேள்.

(வ-ம்.) கேளுமம்மா துரோபதையே இன்னமொருவரங்கேள் கொடுக்கிறேன்.

துரோபதைசொல்-விருத்தம்.

நூல்வரும்நீதியாய்ந்து நுண்ணியகேள்விக்கட்டி
மால்வரும்புகழைப்பெற்ற மாமாகேளொருவிண்ணப்பம்
அலைவரும்வெற்றிபெற்ற வாயிதத்துடனேமற்ற
நால்வர்தன்னடிமைநீக்கி நயமுடன்தந்திட்டாயே.

(வ-ம்.) கேளும்மாமாவே இன்னம்வேண்டியதைக் கேட்கச்சொன்னபடியினாலே மற்ற நாலுபேரையும் ஆயுதத்துடனே அடிமைத் தனத்தை நீக்கிவிட்டவேணும் மாமா.

திருதராட்டிரன்சொல்-வசனம்.

அப்படியே கொடுத்தேன் இன்னமொருவரங் கேளம்மா.

துரோபதைசொல்-வசனம்.

கேளும் மாமாவே ஸ்திரீஜாதிகள் வரம்பெற்றால் பிராமணஸ்திரீகள் ஒருவரமும் க்ஷத்திரியஸ்திரீகள் இரண்டுவரமும் வைசியஸ்திரீகள் மூன்றுவரமும் பெறலாமேயல்லாமல் அதற்குமேலும் பெறலாகாதே மாமாவே.

திருதராட்டிரன்சொல்-விருத்தம்.

தேடக்கிடையாமைந்தர்களே தீதாஞ்சூதில்நீர்தோற்ற
நாடுகொடுத்தேனகர்கொடுத்தேன் நாலுவிதச்சேனைகள்கொடுத்தேன்
வீடுகொடுத்தேனென்பொருளுவிளங்கக்கொடுத்தேன் கைகொண்டு
வீடுபடைத்துமுன்போலும் போர்பொறுத்துவாழ்வீரே.

(வ-ம்.) கேளுங்கள்பெருமையுள்ள என்கட்டிமக்களே நீங்களே ஆயாசப்படவேண்டாம்; அந்தப்பிள்ளைகள் வேறல்ல நீங்கள் வேறல்ல இப்போது நீங்கள் சொக்கட்டாடித் தோற்ற நாடுநகரம் இரதகஜதுரகபதாதி சதுரங்கசேனைகளெல்லாம் கொடுத்துவிட்டேன் நீங்கள் எப்போதும்போல் இராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டு சுகமாயிருங்களப்பா.

தருமர்-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்.

அப்படிதானேசெய்வோ மையனேநின்றுள்போற்றி
பெட்புறவுலகந்தன்னிற் பிதாவாக்கியந்தள்ளுவாரோ
எப்படிநீர்சொன்னாலும் யாமதைத்தடுப்பதில்லை
மெய்ப்புடன்விடைகொடுத்தால் மேனகர்க்கேகுவோமே.

(வ-ம்.) கேளும்பிதாவே உலகத்திலே பிதாவாக்கியந் தள்ளுவார்களா நீ எப்படிசொன்னாலும் அப்படியே கேட்போம் செலவுகொடுத்தனுப்பினால் இந்திரப்பிரஸ்தம்போய்ச் சேருகிறோம்.

சகுனிசொல்-விருத்தம்.

பகையெலாம்போச்சேநான்றான் பட்டதுவீணாய்போச்சே
வகையெலாம்போச்சேயுங்கள் வைரங்கள்விட்டுபோச்சே
சுகமுடனவரும்நீரும் துஜங்கட்டிவாழ்ந்திருங்கள்
தருமிதுநன்றாய்ச்செய்தீர் சபாசுன்னைமெச்சினேனே.

(வ-ம்.) இன்றோடே இந்தபகையும்போச்சுது இருக்கட்டும் எப்படியாகிலும் நீங்களும் அவர்களும் ஒருமித்துச் சுகமாயிருந்தால் சரி தேடிவருமென்று சொல்லுவார்களே அப்படியிருக்குது அடா போங்கள் வேலைமெனக்கிட்ட தாசிரிகளா ஆ-ஆ-ஆ.

கர்னன்சொல்-விருத்தம்.

மதிப்புடன்தன்னைத்தேடி வந்திடுஞ்செல்வந்தன்னை
உதைத்துமேதள்ளிவிட்டா னுமக்கென்னநமக்கிங்கென்ன
பிதைப்பகளென்றுசொல்லி பேச்சென்றுநின்றுபோச்சே
விதைப்படுசகுனிமாமா விடுவிடுபேசவேண்டாம்.

(வ-ம்.) கேளும் சகுனிமாமா வேணுமென்று தனக்குத்தானே அந்தசெல்வத்தை வேண்டாமென்றுதைத்துத் தள்ளிவிட்டானிப்போது உமக்கும் எமக்கும் என்னமுழுகிப்போச்சுது துரியோதனன் பங்காளியென்கிற பட்டமாத்திரம் வந்தது இதனாலே நீரேன் பேசுகிறீர் சும்மாயிரும்.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்.

துற்சாதனநீவாடா சுருக்காயோர்நொடியிற்சென்று
பொய்சார்ந்தவைவர்தன்னைப் போகாமல்மடக்கிக்கொண்டு

பிச்சானகிழவன்பேச்சைப் பெரிதென்றுநம்பிப்போக
உச்சாயமல்லவென்று உடனேபோய்தடுத்துவாடா.

(வ-ம்,) அடாதம்பி துற்சாதனு இங்கேவாடா சீசிக்கிரமாயோடி தர்மபுத்திரர்களை போகவொட்டாமல் மடக்கிக்கொண்டுவா கண்ணில்லாத பயித்தியக்கார கிழவன்பேச்சை நம்பிப்போகிறது காரியமல்லவென்று அதற்குண்டான பேச்சுகளெல்லாம்பேசி அவர்களை இந்திரபிரஸ்தத்துக்குப் போகவொட்டாமல் இங்கே இட்டுக்கொண்டுவாடா தம்பி துறசாதனு.

துற்சாதனன்சொல்-வசனம்.

அப்படியே செய்கிறேன் அண்ணுவே.

துற்சாதனன் பாண்டவர்களுக்குச்சொல் விருத்தம்.

ஐயரேகேளீருங்க ளறிவென்னவாண்மையென்ன
மெய்வரும்படியாய்தோற்றி விழியிலாக்கிழவன்பேச்சை
கைவரும்படியாயெண்ணிக் கடிந்துலகாளப்போறீர்
பொய்வரும்புகழும்போகும் பொறியிலாநெறிசெய்தீரே.

(வ-ம்.) பாண்டவர்கள் நீங்கள்சத்தியமாய் சபையில் ஆடித்தோற்ற நாடுநகரமுதலானதை நான்கொடுத்தேன் போய்விடுங்களென்று முன்பின்தோன்ருக்கிழவன் சொன்னுன் அதைக்கேட்டுக்கொண்டு நீங்கள்போகலாமா இதுதருமமா இதுவரையிலும் சத்தியமாயிருந்து இப்போது அசத்தியத்தைக்கொண்டா போகிறதுவாரும்.

தருமர்சொல்-வசனம்,

அப்படியே வருகிறோம் தம்பி துற்சாதனு.

தர்மர்-சபையில்வந்து-சொல்லுகிற-விருத்தம்.

இதாகிதந்தெரிந்துசொல்லு மிறைவரேசொல்லக்கேளீர்
பிதாசொன்னவார்த்தையெல்லாம் பிசகுதானென்றுசொல்லி
சுதாவிலேவந்துசொன்னுன் தோற்றுதுற்சாதனன்ருன்
எதாகிலுமொருமார்க்கத்தை யின்னதென்றுரைசெய்வீரே.

(வ-ம்,) ஐயா துரோணரே பீஷ்மரே நாங்கள் சொக்கட்டாணுடித்தோற்ற நாடுநகரமுதல் மறுபடியும் உங்களுக்குக்கொடுத்துவிட்டேனென்று என்பிதாவான திருதராட்டிரமகாராசன் சொல்லிவிடைகொடுத்தனுப்பியிருக்க அதுதகாதென்று துற்சாதனன் தடுக்கிறுன் அதைத்தெரிந்து சொல்லுங்களையா.

துரியோதனன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்.

சொல்வதென்னமுன்பின் தோன்ருதகிழவன்பேச்சைக்
கல்லின்மேலெழுத்தென்றெண்ணிக் கடித்துலகாளப்போறீர்
நல்லதுதானுயிதுவும் நியாயமாயினிமேலுங்கள்
வல்லபங்கட்டிவைத்து வனத்திணுக்கேகுவீரே.

(வ-ம்) என்னத்தைக்காணும் இங்கேசொல்லுகிறது பிரமாணிக்கமாய்ச் சூதாடி எப்போ தோர்த்தீர்களோ அன்றேம்போச்சுது எங்கள் தகப்பன் பெரியமனிதனுச்சுதே கண்ணிலாக்கிழவன் ஏதொன்றுர் தோற்றுமல் ஒன்றைச்சொன்னல் அதைச் சிலாக்கியமாய்ப் பிடித்துக்கொண்டுபோக எத்தனப்பட்டீர்கள் அதுகூடாது இந்த க்ஷணத்தில் நீங்கள் காட்டுக்குப் போய்விடுகிறதே தீர்மானம்.

துரோணர்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

பகடையிற்தோற்றதெல்லாம் பரிந்தவர்தந்திட்டாலும்
இகழ்வதுகொள்ளலாகா திராசருக்கியற்கையன்றோ
தகும்பழிமுன்பின்னந்தத் தாணியையாளுமன்னர்
புகும்நெறிப்படியேசென்றல் புரவலர்வாழ்க்கையாமே.

(வ-ம்.) கேளும் தர்மராசனே எப்போ சூதாடித் தோற்றுப்போனதைக் கொடுத்துவிட்டேனென்று அவர்கள்சொன்னாலும் நீங்கள் அதைக்கொள்ளுகிறது யோக்கியமல்ல முன்பின் இராசாக்கள்போனவழிப்படியே போகவேணும் தர்மராசனே.

அஸ்வத்தாமர்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

தர்மபுத்திரனேயுங்கள் தம்பிமார்நாலுபேரும்
சபதமிட்டிருக்குமந்தத் தன்மையைமறந்திட்டாயோ
மருவுமுன்செல்வமெல்லா மறுபடிகிடைக்குங்கண்டாய்
ஒருவர்தன்மருளுமற்ற ஒருவர்தன்பகையாகாதே.

(வ-ம்.) கேளும் தர்மராசனே உங்கள் தம்பிமார் நாலுபேருமிட்ட சபதம் பொய்த்துப்போமே அந்தப்படியே முடியும் எப்படியும் நாடுநகரமுதலானதுகள் உங்களுக்கு கிடைக்கும் திருதராட்டிரனுடைய அன்பும் துரியோதனன்பகையும் பெற்றுப்போனதினல் காரியமென்ன.

பீஷ்மர்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

அறிவுடனயோத்தியாண்ட வரிச்சந்திராசன்செல்வம்
பறிகொடுத்தப்பாற்பிள்ளை பத்தினிதன்னைவிற்று
விரல்விட்டுத்தானுங்கூட விலைபட்டுமீண்டுவந்து
கரையாவுலகமெல்லாம் கைக்கொண்டதறிகிலாயோ.

(வ-ம்.) கேளும் தர்மராசனே மகாசக்கிரவர்த்தியான அரிச்சந்திரன் நாடுநகரமெல்லாம் விஸ்வாமித்திரனுக்குக் கொடுத்துவிட்டு பிள்ளையைவிற்றுப் பெண்ஜாதியைவிற்றுத் தானும் விலையாகிப்படாத துன்பங்களைப்பட்டு மறுபடியும் உலகத்தையாளவில்லையா இதைக் கேட்டதில்லையா தர்மராசனே.

விதுரன்-தருமருக்குச்சொல்-விருத்தம்

நளச்சக்கிரவர்த்திசூதால் நாடெலாமிழந்துகானில்
இளமகிழ்ந்துழன்றுகொண்டா யொண்டொடியாளைநீக்கி

வளமிகுமங்கங்குன்றி வலியதேர்ப்பாகனுகிக்
கனதுயர்நீக்கிதெய்வங் காத்ததுமறிந்திலாயோ.

(வ-ம்.) கேளும் தர்மராசனே நளச்சக்கிரவர்த்தி நாடுநகரமழிந்து வனத்திலே சஞ்சரித்து பெண்சாதியை நீக்கித் தேர்ப்பாகனுகியும் மறுபடியும் இந்தப் பூச்சக்கிரமெல்லாம் ஏகமாய்ப் பெற்றிருக்கவில்லையா இதுவுங்கேட்டதில்லையா தர்மராசனே.

துரோணர்-தருமருக்குச்சொல்-விருத்தம்

ஆகையால்நீருமித்த வரிவைதுரோபதையுங்கூடி
பாகமாய்வனத்துக்கேகிப் பனிரண்டுவருடந்தங்கி
ஓகையோர்வருடங்காட்டி லொருவர்க்குந்தெரியாவண்ண
வாகுடன்மறைந்திருந்து வந்துபின் னுலகையாள்வீர்.

(வ-ம்.) கேளும் தர்மராசனே நீங்களைந்துபேரும் இந்தத்துரோபதையுங் காட்டுக்குப்போய் பன்னிரண்டுவருடம் வனவாசம்பண்ணிவொருவருடம் ஆருக்குந்தெரியாமல் காட்டிலே மறைந்திருந்து வந்தீர்களானல் மறுபடியும் உங்கள் நாடுநகரமெல்லாம்பெற்று சுகமாயிருக்கலாம் தர்மராசனே.

இதுவும்-துரோணர்சொல்-விருத்தம்.

மறைந்திருக்கின்றநாளில் மற்றெருவர்கள்கண்டால்
நெறியினில்நீங்கள்சென்று நேர்வனஞ்சஞ்சரித்து
இறைமறுபடியுங்காட்டிக் கேகுவதென்றுரிந்த
குறைவறவந்தாலுங்கள் குவலயங்கைக்கொள்வீரே.

(வ-ம்.) கேளும் என்னருமையான பிள்ளைகளே பன்னிரண்டு வருஷம் வனவாசம் ஒருவருடம் அக்கியாதவாசத்திலே உங்களை யாராகிலும் இன்னுரென்று தெரிந்துக்கொண்டால் மறுபடியும்பதின்மூன்றுவருஷம் இப்படிக்குச் சஞ்சரிக்கின்றதென்று இருக்கின்றது சமஸ்தானத்தின் கருத்து அப்படியே இநதப்படிக்கு வனம் போய்வந்தால் உங்கள் செல்வத்தைப் பெற்றுக்கொள்ளலாம் தர்மராசனே.

துரோபதைசொல்-விருத்தம்-முகாரி,

துறையிதுவென்றுசொன்ன துரோணரேநின்றுள்போற்றி
அறைதருமிவர்களைவர் ராசர்களாவதென்றுந்
திறமுடனிவர்களுக்குத் தேவினுனவதென்றும்
முறையறவினியொருக்காற் கொடியசூதாடவேண்டும்.

(வ-ம்.) ஐயா துரோணரே நீங்கள் சொன்னது சரியே ஆனாலும் இந்த ஐந்துபேரும் அடிமையென்றும் அவர்களுட்பட்ட பொருள் நானென்றும் அவர்கள் சொல்லச்சே அந்த வில்லங்கத்தைவைத்துக்கொண்டு வனத்துக்குப் போகிறபோது யோக்கியமல்ல இனியொருதரஞ் சூதாடவேண்டும் ஐயரே.

தர்மர்சொல்-விருத்தம்.

மெய்யிதுநல்லவார்த்தை விதிதந்தானவர்க்குநாங்கள்
கையுறுமடிமையாகிக் காட்டுக்குப்போனால்நாளை
வையகமடிமைப்பட்ட மனிதர்க்கிங்கேதென்பாரே
துய்யனேயினியோராட்டஞ் சூதாடவேணுமையா.

(வ-ம்.) கேளுமையா துரோணரே துரோபதை சொல்லுகிறது மெய்யே அடிமைத்தனத்தோடே பூமியேதென்று சொல்லுவார்கள் அந்த அடிமைத்தனத்தை இப்போது தீர்த்துக்கொள்ளுகிறது நல்லது ஆகையாலே இன்னுமொருதரஞ் சொக்கட்டானாடவேண்டும் ஐயா.

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

சரிசரியிதற்குவேறே தடங்கலைச்சொல்லொண்ணாது
துரியனேசகுனிகர்ண துற்சாதனனேகேளீர்கள்
பரிவுடனினியோராட்டம் பகடையாடச்செய்வீர்.

(வ-ம்.) கேளும் துரியோதனா கர்ண துற்சாதனா தர்மராசன்சொல்லுகின்றதுசரியே ஆகையினாலே முன்போல் தர்மராசனும் சகுனியும் இன்னமொரு ஆட்டம் சொக்கட்டான் போட்டுப்பார்ப்போம்.

சகுனிசொல்-விருத்தம்

நாட்டையுங்கொடுத்துவுள்ள நகரையுங்கொடுத்துச்சேர்ந்த.
வீட்டையுங்கொடுத்துசும்மா வெருங்கையைக்கட்டிக்கொண்டு
காட்டுக்குப்போரபோக்கும் கைப்பொருள்தனைக்கண்டு
ஆட்டத்தையாடச்சொன்னீ ரதற்கொருவயணஞ்சொல்வீர்.

(வ-ம்.) நாடுநகரம் ரொக்கரோசனை ஆனைசேனை முதலானதுகளெல்லாந் தோற்றுக் கைதட்டிக்கொண்டு காட்டுக்குப் போகிற பேர்களுடனே சூதாடச்சொல்லி குதித்தீர்களே அவர்கள் கையில் என்னயிருக்கிறது என்னபந்தயம் வைத்தாடுவார்கள் கேளுங்கள்.

தருமர்-சகுனிக்குச்சொல்-விருத்தம்.

நான்தோற்றாலெங்தன்புண்ணியம் நல்குவேனல்லாமல்நீர்
தான்தோற்றாலெங்கள்தொண்டு தவிர்வதுயிதைக்குறித்து
தேன்தோற்றகையாலிங்கே திறள்மன்னர்பார்ப்பதாக
வான்தோற்றகையாலிங்கே வலியசூதாடுவோமே.

வ-ம். கேளும் சகுனிமாமா நான்தோற்றால் நான்செய்த புண்ணியமெல்லாங் கொடுத்துவிடுகிறேன் நீர்தோற்றால் எங்களுக்கு அடிமைத்தனமக்கரையில்லை இந்தப்படியே யாடுவோம் வாரும் மாமாவே.

சகுனிசொல்-வசனம்.

அப்படியேயாடுவோம் வாரும் தர்மராசனே.



தருமரும் சகுனியும்

ஐந்தாவது ஆட்டம்.

தருமர்சொல் - தரு - காம்போதி - மிசுரதாளம்.

தாமோதராவாசுதேவ கோவிந்தா
தற்காத்தருள்முகுந்தா வைகுந்தா

(வ-ம்.) இரண்டு பனிரண்டு பத்து.

சகுனிசொல் - தரு.

இன்னமுஞ்சூதாடவந்தீரோ வாரும்
இனியாகிலுமென்கைதிராணியைப் பாரும்

(வ-ம்.) மூணத்தொன்னு.

தர்மர்சொல்-தரு.

நாராயணவச்சுதா பத்மநாபா
நம்பினே னுன்னையேமெய்யா ஞானசொரூபா

(வ-ம்.) இரண்டு பனிரண்டு இரண்டெட்டு இரண்டரிக்கா லிர ண்டு துகை பத்து.

சகுனிசொல்-தரு.

அனைத்துந்தோற்று சற்றுமெண்ணுதா
அளைத்துடனுனலும் போகவொண்ணுதா
(வ-ம்) நாலத்தோரஞ்சு.

தருமர்சொல்-தரு.

அண்டமெல்லாம்வாரி யுண்டசெவ்வாயா
ஆதரிக்கவேணு மார்க்கசகாயா

(வ-ம்.) நாலுபன்னிரண்டு நாலெரிக்காலெட்டு துகை நாலுமூ ணேழு.

சகுனிசொல்-தரு.

விபரீதப்பந்தயம் விழுந்ததும்போச்சே
விழுவதெல்லாம்அஞ்சு மூணத்தொண்ணுச்சே
(வ-ம்) மூணத்தொண்ணு.

தர்மர்சொல்-தரு.

தாணியெல்லா மளந்தபொற்பாதா
தட்சகனேயாதி லட்சுமிசமேதா

(வ-ம்.) இரண்டுதுகைநான்கு இரிக்கால் எட்டுபனிரண்டு ஆறெ ண்ணேழு.

சகுனிசொல்-தரு.

ஆட்டத்திலெல்லாங் கொடுத்துச்சலித்தான்
அடிமைத்தனம்போக இப்போகெலித்தான்
(வ-ம்,) நாலுமூணேழு.

பீஷ்மர்-துரோணர்-அஸ்வத்தாமர்-விதுரன்

இவர்கள்சொல்லுகிற விருத்தம்.

கொண்டரென்றவர்சொல்லால் சூதாடி தீர்த்துவிட்டீர்
விண்டிடுமடிமையான வில்லங்கமினிமேலில்லை
பண்டுரைசெய்யுமிந்தப் பதின்மூன்றுவருஷஞ்சென்றால்
கொண்டிடும்நாடும்வாழ்வும் கொள்ளுவீர்செல்லுவீரே.

(வ-ம்.) கேளுங்கள் பாண்டவர்களே அம்மா துரோபதையே அடிமையென்ற வார்த்தையை அவர்கள் சொல்லாமல் அந்த வில்ல ங்கத்தைத் தீர்த்துவிட்டீர்கள் இனிமேல் நீங்கள் ஆரணியத்துக்கு

போய் பன்னிரண்டுவருஷம் வனவாசமும், ஒருவருடம் அக்கியாத வாசமு மிருந்துவந்தால் மறுபடியும் எப்போதும்போல உங்களுடைய இராச்சியமெல்லாம் பெற்றுக்கொள்வீர்.

தருமர்-சபையோர்களுக்குச்சொல்-விருத்தம்.

அருள்பெருந்துரோணாதி ஐபரேபாட்டனாரே
மருவுசிற்றபபாவுங்கள் மலர்ப்பதம்போற்றிபோற்றி
கருதியபெரியோருங்கள் கடாக்ஷம்வைத்தருளவேணும்
விரவியவனத்துக்கேக விடையதுதருகுவீரே.

(வ-ம்.) ஐயா துரோணரே அஸ்வத்தாமரே வீஷ்மரே பாட்டனாரே எங்கள்குருக்கள்மாரே சிற்றப்பராகிய விதுரமகாராசனேயுங்களனைவருக்கும் சரணம்சரணம் உங்கள் திருக்கடாட்சமிருக்கவேண்டும் நாங்கள்வனத்திற்குப் போய்வருகிறோம் செலவுகொடுங்கள் பெரியோர்களே.

பீஷ்மர் துரோணர் அஸ்வத்தாமர் இவர்கள்

சொல்-விருத்தம்.

மறுகடல்வற்றினாலும் மகமேருகுறுகினாலும்
அறைகருபுவியாழ்ந்தாலு மண்டங்களிடிந்திட்டாலும்
குறைவிலாமக்களுங்கட் கொருதீங்குவருவதில்லை
துறைவனஞ்சென்றுமீண்டு சுகமுடன்வருகுவீரே.

(வ-ம்.) மகாசத்தியவந்தரான பாண்டவர்களே இந்தச் சத்தசாகரங்கள் வற்றிப்போனாலும் மகமேருவுக்கு ஒரு சஞ்சலம்வந்தாலும்பூமியானது ஆழ்ந்துப்போனாலும் பிர்மாண்ட தடாகங்கள் இடிந்துபோனாலும் உங்களுக்கு ஒருதுன்பமும் வருவதில்லை சுகமாய்ப் போய்வாருங்கள் மைந்தர்களே.

தருமர்சொல்-வசனம்.

அப்படியே போய்வருகிறோம் பெரியோர்களே.

பாண்டவர்கள்-காட்டுக்குப்போகிற-தரு-இ-ம்

தோடி-தாளம்-மீசுரம்.

பல்லவி.

வனத்திற்பனிரண்டுவருஷஞ் சஞ்சரிப்போம்
வாருந்தம்பிமாரே

அநுபல்லவி.

தொனித்தசகுனிமாமன்சுழலினி லகப்பட்டோம்
துரைத்தனமும்நாடும் சூதிற்றேட்டுவிட்டோம்(வன)

சரணங்கள்.

...லைபாதொன்று மாகுமோ-மாயன்
...ர தும்தப்பிப் போகுமோ
...லொன்றுமில்லை யெவர்களுக்கானாலும்
...வுஞ்சிலதுகாலம் வாழ்வுஞ்சிலதுகாலம்(வன)



ஸ்ரீ வெங்கட்டரமண[illegible] அருள்கடா[illegible]த்தினால் தற்காலம் கும்பகோணம் பக்தபுரி அக்ரகாரத்தில் வசிக்கும் சுந்தரமய்யர் பாரியை கல்யாணியம்மாளால் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளாக விளங்கும் ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்யாள் அவர்களின் மகிமைகளும், ஸ்ரீகாமாக்ஷியம்மை பெருமைகளும், அம்பாள் உத்திரவின் பேரில் கீர்த்தனங்களாகவும் கும்மிகளாகவும் தோத்திரங்களாகவும் பாடி சகலவித ஆத்மாக்களும் சுத்தமாகும்பொருட்டு "அருள் பாட்டு" (பக்திரஸ கீர்த்தனை) என்ற பெயரும்வைத்து ஆத்மார்ப்பணமாக சற்குருவால் களித்து என் ஆத்மாவை சுத்தம்செய்து கொண்டேன்.

இதைப்போல் ஒவ்வொருவரும் கிருதார்த்தமடையவேண்டும் என்ற முழுநம்பிக்கையுடன் இப்புத்தகத்தை வாங்கி உருக்கமனதுடன் ஒருமுறையாவது வாசித்து இதன்பொருளை உணர்வீர்களாக. அதனால் குருபக்தியும் ஆத்மசக்தியும் அளிக்கும். என் தாய் காமாக்ஷி கருணைபூத்து உங்களை ரட்சித்து காத்தருள்புரிவாள் என்று அவள்மீது முழுநம்பிக்கைகொண்டு எழுதத்துணிந்துவிட்டேன். எனக்கோ எழுதவும் படிக்கவும் தெரியாது எல்லாம் அம்பாளின் அருள்கடாக்ஷத்தினால் உண்டானவைகள். சொற்குற்றம் பொருள்குற்றமிருந்தபோதிலும் அம்பாள் அருள் வாக்கென்று பொறுத்து அங்கீகரிக்கும்படி வணங்கிக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீவெங்கட்ரமணஸ்வாமியின் அடியாள் எழுதியது.

முக்கிய கவனிப்பு

இப்புத்தகத்தின் விற்பனை பணத்தைக்கொண்டு சிலவுபோக மீதியான பணத்தில் சரிபாதி ஸ்ரீ காமாக்ஷியம்மன் கைங்கரியத்திற்கு உபயோகமாகும் பாக்கியிருக்கும் பணத்தைக்கொண்டு இன்னும் சில புஸ்தகங்கள் அச்சிட்டு வெளியிடவேணுமென்ற எண்ணத்துடன் முதலில் குருகடாக்ஷமும் அம்பாள் தயவும் கிடைக்கவேணுமென்ற அருள்பாட்டை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறேன்

இன்னும் சண்முகம்பேரிலும் கணேசர்பேரிலும் அம்மன்பேரிலும் கிருஷ்ணன் பேரிலும் இராமன்பேரிலும் வெங்கடேசர்பேரிலும் பரமசிவத்தின்பேரிலும் நடராஜர் பேரிலும் பாடியுள்ளவைகளையும், மகான்களான ஸ்ரீசதாசிவபிரமம் தீர்த்தநாராயணகுரு அய்யாவாள் பேரிலும் பல கீர்த்தனங்களை எனக்கு அருள்செய்து கடாட்சித்தபடி என் அனுபோகத்தை எழுதியிருக்கிறேன்.

பதிவிரதாசிரோன்மணியாய் விளங்கி திருமூர்த்திகளுடன் லக்ஷ்மி பார்வதி சரஸ்வதி இவர்களை தரிசித்து திருமூர்த்தி அம்சமாகிய தத்தாத்ரேயர் என்ற புத்திரனைப்பெற்று வாழ்ந்துவந்த அத்ரிமகரிஷியின் பத்னி அனுஸூய அம்மாளின் சரித்திரம் இதற்கு அடுத்தபடியாக அச்சிட்டு வெளியிடப்படுமென்பதை தெரிவித்திருக்கிறேன்.

ஸ்ரீ [illegible]

பக்திரசக் கீர்த்தனை.

[பஜகோவிந்தம் பஜகோவிந்தம் என்ற மெட்டு]

1 பக்தவஸ்தல தவசரணம்
2 பரமதயாளு தவசரணம்
3 பண்டரிநாதா தவசரணம்
4 பாபவிமோசன தவசரணம்
5 புண்டரிகாக்ஷ தவசரணம்
6 புராணபுருஷ தவசரணம்
7 கோகுலநந்தன தவசரணம்
8 கோபிகலோல தவசரணம்
9 கம்ஸமர்த்தன தவசரணம்
10 காளிங்கநர்த்தன தவசரணம்
11 கிருஷ்ணராமா தவசரணம்
12 கிருபாகடாக்ஷ தவசரணம்
13 வெங்கட்டரமண தவசரணம்
14 ஸங்கடஹரண தவசரணம்
15 தீனரக்ஷகா தவசரணம்
16 தீனதயாளு தவசரணம்
17 அப்ரமேய தவசரணம்
18 அனந்தரூப தவசரணம்

2 ஸற்குருநாதா ஸற்குருநாதா ஸற்குருநாதா
தவசரணம் ஸற்குருநாதா தவசரணம்
ஸச்சிதானந்தம் சிவோஹம்
ஸற்குருபாதம் ஹம்ஸோஹம்
நித்யானந்தம் தன்யோஹம்-கிருஷ்ண
நித்யானந்தம் சிவோஹம்
ஹம்ஸசதாசிவ சற்குரு அடியானை
அன்பினால்காத்து அதற்கும் எந்தன்
சஞ்சலமதைப்போக்கிவைத்த சற்குருநாதா தவசரணம்
நூல்களின் நுட்பத்தை யறியாதமூடர்க்கு
நுட்பமாய்ச்சொல்லும் சற்குருநாதா
இக்கலிதன்னில் தேஹிஎன்றோரை நேசித்துக்
காக்கும் சற்குருநாதா சற்குருநாதா
குருநாதா குருநாதா தயைபுரிவாய்
வானவர் தேவர் கண்டுகளித்திட
தானவர் யீசனும் நின்றுதுதித்திட
சகலரும் உம்மைக்கண்டு களித்திட நிர்மலமாகி நிற்பீர்
அய்யன்வெங்கடேசன் தன்னருளால்
நமதன்புமாறுமல் நிற்கவேணும்
என்றும் சிரஞ்சீவியாகவே ஆத்ம
அவரையே போற்றிப் புகழவேணும்
நோயற்றவாழ்வுதான் வாழவேண்டும்
அதிநுட்பமானசேதிநீர்சொல்லவேணும்
அதனைநான் அன்புடன் கேட்கவேணும்
உன்சொல்விதை விதைக்கவேணும்

அள்ளியே எல்லோரும் உண்ணவேணும்
உம்மிட ஆனந்த காக்ஷியைகாணவேணும்
ஐயனே நின்புகழ் என்றும்வாழ்க
மெய்யனே மெய்ப்பொருள் நின்றுவாழ்க
துய்யனே நின்பக்தர் துரைபோல்வாழ்க
கழலடிக்கண்டோர் கருத்துடன்வாழ்க
மழலைஉன்குணமென்று மதித்திடும்பேர்க்கு
மாறுமல் அவர்குணம் என்றுமகிழ
அய்யனே என்னை கார்த்தருள்வீர்
அய்யமில்லாமல் இந்தகுணம்
கற்பகவிருக்ஷமான சற்குருவிற்கு
கைமாறுசெய்வ தென்னவென்றால்
தான்தீர்த்தந்தன்னையளிப்பதுபோல்
என்மனக்கண்ணீரால் மனதை நனைத்து
மனமாரவானந்தந் தன்னையளித்தென்
மந்தபுத்தியால் எழுதியன்னவைதனைஎன்று
கொள்வீர்பதம்சேர்த்துக்கொள்வீர்.

3 [சாந்தமுலேக என்றமெட்டு]

பல்லவி– ஏழைஎனக்கருள்புரிவாய் நீயிப்போ
ஏகாந்தரூபியே ஜகதம்பா (ஏ)

அனுபல்லவி– கோழைமனதுடைய மாதரைக்கவர்ந்திட
கோகிலம்போல்கூவும் குயிலேஎனக்களிப்பாய் (ஏ)

சரணம்– பக்தரைக்கார்த்திடும் பார்வதிநீயே
பஞ்பாணலிங்கம் தனக்கதிகாரியே
அரமதயிருந்தாலும் பொருளாகக்கொள்ளாதே
தாயே உனதடி சாஷ்டாங்கமாய் பணிந்தேன் (ஏ)

4 [சரவண பவ என்றமெட்டு]

பல்லவி– கருணைபுரிவாய் காமகோடியேநீ (க)

அ. பல்லவி– ஹரிஅயன்மால் தன்னையேகார்த்திடும்
ஆதிசக்தி ஓங்காரி ஒய்யாரி (க)

சரணம்– தருணத்தில்வந்த உலகவிபத்தை
ஒருநொடிக்குள்ளே போக்குவாய் நீ
அன்னே சரணமடைந்தேன்
சதாபிரும்மம்தன்னை கார்ப்பாய்
என்சொல்லை குருவேதாயே (க)

5 பல்லவி— அன்புநிலைக்க வரமருள்வாயே தாயே
தயாபரி சிவேதன்சகோதரி
அபயம் அபயம் அண்டினேன் கல்யாணி (அ)

அ. பல்லவி— காரணியேபரிபூரணியே ஜெகத்காரணியே
கலைவாணியே உந்தன் (அ)

சரணம்— கதம்பவனவாசி காமகோடிநேசி கஞ்சிகாமாக்ஷி
கைலாசவாஸி வஞ்சியேஎன்முன்பு வந்தருள்செய்குவாய்
இச்சையுடன் உன்னை என்றும் துதித்திட (அ)

6 பொன்னார்மேனியனே என்றமெட்டு

தாயேயுன்னையல்லால் எனக்கு ஒருவர் துணையும்
உண்டோ சிற்றம்பலந்தனில் நின்று அந்த பேரின்ப
வீட்டடைய தாயே அருள்தந்த தா
சேயென்று எண்ணி என்னோடு செவிக்கமுதம்
ஊட்டினயடிபோல் எனக்கு இந்தநாட்டினில்
வேலைவைத்தாய் தாயே தயவுடன் தா
வாயாரப்பாடி உன்மேல் வணங்கினதின்
பாலனால் உன் அன்பரைச் சுட்டிக்காட்டும்
உன்நற்குணம் என்னசொல்வேனடி எந்தன் தாயே தா
நெற்றிக்கண் மத்தியிலேதாயே நின்றுநீ என்னுடனே
அஷ்டாக்ஷரப்பொருளை அறிய அனுக்கிரகித்தாய் அன்புடன் எனக்கு ()
மாயசம்சாரமதில் யான் மதித்துக்கிடக்காமல்
கைகொடுத்தாண்டுகொண்டாய்கருணைகடாக்ஷிநீயே எப்பொழுதும்()
தேவி உள்ளமதில் நல்லதிவ்யஞானமடைந்தேதேன்
மேலோர்தண்டைக்கும் அந்தமேருவை யானறிந்தேன் உன்னருளால் ()
துரியாதீதம் கடந்து உந்தன் ஜோதியும் யானறிந்தேன்
அந்தமறையவர் தான்நடக்கும் அந்தமகிமையையும் யானறிந்தேன்
இன்னமதில் (தா)
உன்மகிமைக்கீடுண்டோ யான்களித்து
எடுத்துரைக்க ஆனாலும் உன்னருளால் அறிந்தமட்டும் ஊமைப்போல்
எல்லவர்க்கும் (தா)

7 உசேனி ராகம்

பல்லவி— நன்னுஜ-பிசி ஓ காமகோடிபீடாதி கஞ்சிகாமாக்ஷி (ந)

அ. பல்லவி— பத்மதளமுலோனு பத்மாஸனமுவேஸி
பக்துலனுசிரசிஞ்சி ஓ பரதேவத நாதல்லி (ந)

சரணம்— நாபுத்தி நீ சித்தமு இரடு ஒகடாயெனு
பந்தமுலுபாசனுகொந்தமுநிலிசெனு
என்னிஜன்மமுக நின்னுபூஜமேஜேஸிதினோ
தல்லியீஜன்மாலொ நின்னுதரிசனமு ஓஸகெ (ந)

வலதுகால் தூக்கியே இடதுகால் தொங்கவிட்டு வாஞ்சையுடன்
என்முன்பு அமர்ந்த தாயே
வெள்ளிக்கவசமிட்ட உந்தன்பாதத்தை பார்த்திடபாக்கியம்
என்னசெய்தேனே யானறியேன்

முடுகு- பக்தரை கார்த்திடும் பாக்யவதியே
முக்தரை கார்த்திடும் மோட்சதாயே
உந்தனைநம்பினேன் பெற்றதாயே
சந்திரமௌளீஸ்வரரோடு அமர்ந்த தாயே

9 குங்கும அர்ச்சித கோமளலிங்கம்
சங்கார்பூஜித்த சற்குரு லிங்கம்
மங்களவாரத்தில் பூஜிக்கும் லிங்கம்
ஸித்தர்கள் பூஜிக்கும் ஸ்ரீமகாலிங்கம்
சந்திரர் சூரியர் பூஜிக்கும் லிங்கம்
சாந்தமுனிகள் பூஜிக்கும் லிங்கம்
வேதமுனிகள் விளம்பிடும் லிங்கம்
வேதப்பொருளாய் அறிந்திட்ட லிங்கம்
மங்களமூர்த்தி சிங்காரரூபி எந்தனை
கார்த்திடும் எழுமலை லிங்கம்

சதாசிவசற்குரு பூஜிதலிங்கம்
சாந்தநரஸிம்மமாகிய லிங்கம்
கங்காயமுனை நர்மதாகாசி தேசங்கள்தோறும் சுற்றியலிங்கம்
கும்பகோணக்ஷேத்திரத்தில்வந்து பொங்கிபுகழ்செய்திட்ட
தீண்டாமை பெயரை எதிர்த்திட்டலிங்கம் [லிங்கம்
திடஞானமதை தந்திட்டலிங்கம்
ஆண்டவனேயென்று வேண்டிடும்லிங்கம்
பக்தர்கள் உள்ளத்தில் தோன்றியலிங்கம்
பவவினையெல்லாம் போக்கிடும் லிங்கம்
பதஞ்சலிவியாசர் பூஜிதலிங்கம்
பரமபதத்தை யளித்திடும் லிங்கம்
பேதையென் உள்ளத்தில் தோன்றிய லிங்கம்
பிரும்மானந்தம் அளித்திடும் லிங்கம்
பிரணவரூபமாகிய லிங்கம்
பீஜாக்ஷரமாய் அமர்ந்திட்ட லிங்கம்
ஜோதிஸ்வரூபமாகிய லிங்கம்
சுந்தரேசன் தன் பாரி பாடியலிங்கம்
தொடர்ந்துவருமேவோர் தோஷத்தைப்போக்கி
ஜோதிவடிவாய் செய்திடும் லிங்கம்
காமவினையை களைந்திடும் லிங்கம்

கள்ளர்பயத்தை ஒழித்திடும் [illegible]
கல[illegible]தூஎன்உள்ளத்தில் உறுகியலிங்கம்
ஏகமுகமாய் ஜொலித்திடும் லிங்கம்
கோரும்வரத்தை கொடுத்திடும் லிங்கம்
கும்பமுனிக்கருள் புரிந்திட்ட லிங்கம்
வெங்கடேசனென்ற பேருடன்வந்து
கல்யாணியுடன் நின்றுடிடும் லிங்கம்

ஆனந்தமே நித்யானந்தமே ஆனந்தமே பிர்ம்மானந்தமே
அன்புடன்யோகலிங்கத்தை பஜிப்போர்க்கானந்தமேபிர்மானந்தமே

10 காமாக்ஷியம்மன் பதிகம்போல்

இந்தவுலகினில்வந்திட்ட கஷ்டமினியெத்தனைநாளோ ஐயா
உந்தனைக்கண்டுநான் உன்பதம்சேராமல் ஓலமிட்டழுவதேனோ
கந்தனேகலிகாலரூபனே கைலாசவாசனின் தன்மகனே [பீர்
மனமாரவந்தனம்செய்திட்டேன் உந்தனை எனைகைகொடுத்தாதரிப்

ஆண்டியைப்போல்வந்து தூண்டியைவீசினீர் தூண்டியில்சிக்கிவிட்டேன்
சின்னப்படுத்தாமல்தன்மயமாக்கியே சேர்ப்பீர்சிவத்துடனே
சின்மயாரூபனே தேசசஞ்சாரனே ஆவியைக்காருமய்யா
ஐயனேமெய்யனே பன்னிருகையனே அண்டினேன்நிர்க்குணனே

வருமைப்பிணியினால்வெந்துமேநொந்துநான் விம்மிடும்வேலைதனில்
சொர்ப்பனந்தனில்வந்து பற்பலமொழிகளாலுள்ளத்தைகொள்ளைகொண்
அள்ளியேமாவுண்ட வள்ளிமணாளா என்றுபறிந்திட்டேன் [டீர்
அப்பொழுதுசிவகுருமைந்தனேசிங்காரரூபனேசரணம்சரணமய்யா

இக்கலிதனிலே பக்குவமானதோர் பக்தரைச்சேர்ந்திடவே
ஊக்கமதுகொண்டிட்டநோக்கமறிந்திட்டேன் சக்திவேல்கையழகா
முக்தியைவேண்டிடும் மூடரைக்கார்த்திட முதற்பொருளாக வந்தீர்
தற்காலம்என்முன்புதயவுடனின்றிடு முன் தந்திரமென்சொல்வேன்

அன்னைதந்தைகுரு தெய்வமும் ஒன்றென்று அன்னை உரைத்தசொல்லால்
தன்னையறிந்திட்டேன் தத்துவப்பொருளென்று நான் தரணிதனிலய்யா
பின்னையினிதள்ளாமற்பேதைமைகொள்ளாமற்பேதையைக்காருமய்
பேரின்பவீடடையபெரியதோர்தெப்பம்போலண்டையில்வந்துநின்றீர் [யா

தத்வமஸியென்றதோர் வாக்கியத்தைதன்னுக்குள் தானேயறிவித்தகுருவே
அறிவென்னுந்தீர்த்தமதைஅன்பர்க்களித்துநீர் சித்தத்தைசுத்திசெய்து
இக்கரைதன்னில்நின்று அக்கரைசேர்த்திடஅக்கரைகொண்டகுருவே
சர்க்கரைபாலும்போல்தானேகலந்துள்ளம்அமர்ந்திட்டஎன்குருவே

எத்தனைஜன்மமினி இந்தஉலகினில் ஏழையெனக்களித்தபோதும்
உந்தன்மேல்பாடி நான் உன்பாதம்சேர்ந்திட ஒத்தாசைசெய்யுமய்யா

வஞ்சனையில்லாமல்கெஞ்சினேன்உந்தனை கொஞ்சமிறங்குமய்யா
சஞ்சிதகர்மங்களால் வருங்கொடுமையினி தாங்கவுமாட்டேனய்யா

வஞ்சனைசெய்திடும்மன்னன்மனைசுற்றத்தார்தன்னையுந்தான்மறந்து
உன்னையேசதமென்று உறுதியாய் நம்பினேன் குருமுகமாகயிப்போ
அன்னையைப்போல் எனையன்புடன் காத்திடும்பொருளாக கொண்டகுரு
என் இருளைவிலக்கிஉன்னருள்சுவைபோட்டிடும் ஆதிபரம்பொருளே [வே

இந்தவுடலைவிட்டேகிடும்முன்னமே மௌனத்தைதான்விடுத்து
மாயமாய்வந்திட்ட மாதர்தமக்கெலாம் நீதியைதானுரைத்து
தத்வமஸியென்றதோர்தெப்பத்திலேற்றியேதன்னையுந்தானமர்த்தி
கண்ணிமைபோல் காத்து கைலாசமேருவீர் கந்தனேமுன்னுரைத்தேன்

கன்றைப்பிரிந்த பசு கள்வர்கையில் சிசுகியேகட்டுண்டநீதிபோல
தன்னைப்பிரிந்துநானிந்த சம்சாரத்தில்கட்டுண்டேன்கண்மணியே
கட்டுநீ பட்டதுபோதுமென்றுசொல்லி கட்டையவிழுமையா
செட்டமறிந்திட்ட சற்குருநாதா உமை சாஷ்டாங்கமாய்பணிந்தேன்

11 வழிமறைத்திருக்குதே என்றமெட்டு

பல்லவி— ஷண்முகா தயவில்லையா சந்திரசேகரேந்திர சரஸ்வதி ()

அ. பல்லவி— பவசாகரந்தன்னை தாண்டிடபேதை
பரிவுடன்வந்தருள்செய்யுமய்யா
பன்னிருகைவேல் கொண்டிட்டதீரனே
பார்வதியாள்மகிழ் பாலனே வேலனே (ஷ)

சரணம்— போதும்போதும் இனிவாதுநீர்செய்தது
புண்ணியபலாபலந்தன்னையடைந்தது
பின்னையான்செல்வேனோ உண்மை
யறிந்தபின் உன்சொல்லை மறப்பேனோ
சாக்ஷியறிந்தபின் (ஷ)

கற்பனையைக்கடந்த கைலாசவாசன்
கருணைபால்வந்த காருண்யமூர்த்தி
பற்பல உருவம் கொண்டிடுந்தேவனே
பரமானந்தமளித்திடும் சீலனே (ஷ)

முடுக்கு— கோரும்வரத்தை அளித்திடும்பாலனை
குபேரனைக் கைகொட்டிட்ட மூலனே
கூறினேன் கல்யாணி கூச்சமில்லாமலே
சதாசிவபிரும்மம் தன்னருளால் (ஷ)

ராமநாமந்தன்னை ஸ்மரித்து சங்கரந்தன்னை ஸ்மரித்து
உத்தமர்கள் ஏறும் கப்பல்
ரகசியமாய் தர்மம்செய்து சங்கர தர்மம்செய்து
ராஜரெல்லாம் ஏறும் கப்பல்
பக்தியினால்பாடிக்கொண்டு சங்கரா பாடிக்கொண்டு
முக்தரெல்லாம் ஏறும் கப்பல்
ஆதிமாயைதன்னை பூஜைசெய்து சங்கரா பூஜைசெய்து
ஆத்மஞானி ஏறும் கப்பல்
ஏகபிர்மம்தன்னை ஸ்மரித்து சங்கரா தன்னை ஸ்மரித்து
ஏழைகள் ஏறும் கப்பல்

முடுக்கு— உத்தமராஜர்களை உள்ளே அமர்த்தி
பக்தர்கள் ஞானியைபக்கத்தில் வைத்து
ஏழையை தன்னுடன் தானேகலந்து
ஏற்றிவரும்கப்பலது சங்கரா ஏகாந்தமான கப்பல்
ஆங்காரமற்றகப்பல் சங்கரா ஆத்மநிலைகண்டகப்பல்
ஓங்காரத்தன்னைக்கூட்டி ஓட்டிவரும் கப்பலது
சாத்வீகமான கப்பல் சங்கரா சாஸ்வதமான கப்பல்
குருமுகமாய் நிற்கும்கப்பல் சங்கரா ஒருமுகமாய் ஓடும்கப்பல்

முடுக்கு— கப்பலுக்கதிகாரி தன்னையுரைப்பேன்
அய்யனே பிர்மத்தின் தன்னருளாலே
காமகோடி அவள் சன்னதியில் நின்று
களித்துமகிழ்ந்து எடுத்துரைப்பேன் இப்போ
பிரணவத்தை அதிகாரியாக அமர்த்தி
ஓங்காரம்தன்னை உள்ளே இருத்தி
பீஜாக்ஷரம்தன்னை பிரமமாய்வைத்து
அஷ்டாக்ஷரத்தாலே அன்பாய் பூஜித்து
பஞ்சாக்ஷரத்தாலே பாங்காய் துதித்து
தேவிபஞ்சாக்ஷரி தன்னையறிந்து
தேவிகாயத்ரி மகாமந்திரம் தன்னை
சற்குருவாலே தானேயறிந்து
ராமனால் தாரகநாமத்தைப்பெற்று
உள்ளம் குளிர்ந்து வெள்ளம்பெருகி
வெள்ளத்தில்வந்த விசித்திரம் தன்னை
செப்பவும் என்னாலே ஆகுமோ ஐயா
ஆனாலும் வெங்கடேசன் தன்னருளாலே
அறிய உரைப்பேன் அன்புடனிப்போ
ஏலேலோ ஏகலே சங்கரா ஐலேலோ ஆத்மபிர்மம்

ஆகாசம் பூமி மத்தியிலும் நின்றாடும் தெய்வமும்
நீயல்லவோ கூத்தாடும் தெய்வமும்நீயல்லவோ
பாடென்றுசொன்னதும் நீயல்லவோ அதை
பார்த்துமகிழ்வதும் நீயல்லவோ

முப்பொருளானதும் நீயல்லவோ
முழுமூடத்தைக்கார்ப்பதும்நீயல்வோ
சொற்பொருளானதும் நீயல்லவோ அந்த
ஜோதிவடிவமும் நீயல்லவோ

ஹரியும் சிவனும் ஒன்றல்லவோ அதை
அறிந்திடச்செய்வதும் ஒன்றல்லவோ
காரணகாரியம் நீயல்லவோ அதை
கண்டுகளிப்பதும் நீயல்லவோ

வேதப்பொருளும் நீயல்லவோ அந்த
வேதமுடிவும் நீயல்லவோ
போதவடிவும் நீயல்லவோ அதைவிட்டு
வருவதும் நீயல்லவோ

ஆதியும் அந்தமும் நீயல்லவோ அந்த
ஆதிமத்தியாந்தமும் நீயல்லவோ
நீதிப்பொருளும் நீயல்லவோ அதை
நீதியாய் கார்ப்பதும் நீயல்லவோ

சத்தியமும் ஞானமும் நீயல்லவோ அந்த
சதுர்முக பிர்ம்மாவும் நீயல்லவோ
சத்தியமும் தருமமும் நீயல்லவோ அதை
ஸ்தாபிக்கச்செய்வதும் நீயல்லவோ

பென்சிலும் கையும் ஒன்றல்லவோ அதை
பிரபலமாய் செய்வதும் நீயல்லவோ
நானும் நீயும் ஒன்றல்லவோ அந்த
நாதபிரம்மமும் ஒன்றல்லவோ

ஜாதிமதமும் ஒன்றல்லவோ அந்த
சற்குருவானதும் ஒன்றல்லவோ
நாளும் வாரமும் நீயல்லவோ அந்த
மாதவருஷமும் நீயல்லவோ

கமலாசனத்தின் மத்தியிலே கமலத்தின் …ன்னுக்குள்ளே
தன்மயமாகவே கற்பூரஜோதியை கண்…ப்பதும் ஒன்றல்லவோ

என்னிலிருப்பது ஒன்றல்லவோ
எங்கும்நிறைந்தது ஒன்றல்லவோ
பூட்டைத்திறப்பது கையல்லவோ
மனப் பூட்டைத்திறப்பதும் கண்ணல்லவோ

காட்டைக்கடப்பதும் ஒன்றல்லவோ இந்த
கூட்டைமறைப்பதும் ஒன்றல்லவோ
கூட்டுக்குள்ளிருக்கும் கோவிந்தனைக் கண்டு
வாட்டமில்லாமலே வாழ்வணைந்தி

கோஷ்டத்துடனே கும்மியாய் பாடி
குருவைப்போற்றி கொண்டிடுவீர்
தேய்பிறை வளர்பிறை ஒன்றல்லவோ அதை
தேர்ச்சியாய் காப்பது நீயல்லவோ

சூரியன் ஒளியும் நீயல்லவோ அதை
சோபிக்கச்செய்வதும் ஒன்றல்லவோ
ஆத்மாவும் ஜோதியும் ஒன்றல்லவோ அதை
அறிந்து செய்வதும் ஒன்றல்லவோ

நீரும் நெருப்பும் ஒன்றல்லவோ அந்த
நிர்குண நிர்மலமும் ஒன்றல்லவோ
உன்னை அறிந்தும் ஒன்றல்லவோ அந்த
உண்மைப் பொருளும் ஒன்றல்லவோ

கன்றும் பசுவும் ஒன்றல்லவோ அதை
காந்து புஜிப்பதும் ஒன்றல்லவோ
மான்மழுக்கொண்டதும் ஒன்றல்லவோ அந்த
மழுவை உண்டதும் ஒன்றல்லவோ

காற்றைப் புஜிப்பதும் ஒன்றல்லவோ அந்த
கனியை புஜிப்பதும் ஒன்றல்லவோ
மௌனமிருப்பதும் ஒன்றல்லவோ அந்த
மாயவடிவமும் ஒன்றல்லவோ

தியானிப்பதும் ஒன்றல்லவோ அந்த
தியானப்பொருள் ஒன்றல்லவோ
கண்ணையறிவதும் கண்ணல்லவோ இந்த
பெண்ணையறிவதும் கண்ணல்லவோ

கருத்தை அறிவதும் கண்ணல்லவோ இந்த
பேரின்பமான [illegible]னிலே
தன்னையறிவதும் தானே தானல்லவோ அந்த
தத்துவப்பொருளும் ஒன்றல்லவோ

சொல்லை அறிவதும் ஒன்றல்லவோ அந்த
சுயம் ஜோதிவடிவமும் ஒன்றல்லவோ
சடத்தை யறிவதும் சத்தல்லவோ அந்த
சச்சிதானந்தமும் ஒன்றல்லவோ

வித்தை அறிவதும் ஒன்றல்லவோ அந்த
விமலப்பொருளும் ஒன்றல்லவோ
முக்தி அடைவதும் ஒன்றல்லவோ அந்த
மூலமந்திரம் ஒன்றல்லவோ

14 அய்யனே சாம அய்யனே என்ற மெட்டு

திருவருள் பிரகாசமும் நின் வாக்கமுர்த வசனமும்
கேழ்க்க எந்தன் செவிகளிரண்டும் கனிந்து உனையே நாடுதே
மகா மாயனே அன்பர் நேயனே வெகு உபாயனே (தி)

நன்மை செய்யும் நற்குணமும் உண்மையான வசனமும்
உன் கனிந்த பொன் சிரிப்பும் வந்தழைக்கும் உன் வலிமையும்
அய்யனே ரகசியம் சொல்லவும் போகுமோ (தி)

கலியுகந்தனிலே உனை கைகொண்ட தெய்வம்போல்
கலிகால மூர்த்தியாகி என் கலிகளை தீர்க்க வந்தீரோ
சத்தியனே நித்தியனே ஸ்வாமி நாதா நின் (தி)

சத்தியம் தருமம் வித்தை தயை சாந்தம் என்னும் பக்தியோடு
நீர் உண்மையை எடுத்துரைத்தீர் அசாரம் என்னும்
மாதுடன் சொற்பனம் தன்னிலே என் உள்ளம் குளிர்ந்திட (தி)

15 சற்குருவை தான் பணிந்து சாந்தமடைவீர்
சந்திரசேகரேந்திர சரஸ்வதியே
முக்தி நெறி தன்னை யூட்டும் மூலபுருஷன்
யாரடி கேளடி கோரடி சகி
நிற்குணத்தை தானறிந்த நிர்மல தேஹன்
யாரடி கேளடி கோரடி சகி
கற்பனையை கடந்த கைலையங்கிரி வாசன்
தாசன் கேளடி சகி.

16 சொண்டிச்சிந்து.

மானிடஜன்மம் அரிது என்று குரு உபன்யாச[illegible] சொல்லக்
கேட்டேன் சிந்தையினில் தயா[illegible]டேன் ஜென்மம்
கடைத்தேறும் வழியை நான் [illegible] வேணுமென்று
மனம் துணிந்தேனே அய்யா மெய்ய[illegible]

கர்ம பலத்தின் இச்சையில்லாமல் என் மனது சுத்தமாகவே
மோக்ஷமதை தான் விரும்பி உந்தன் மோக வலையிற்
சிக்கிக்கொண்டேன் சிக்கிக்கொண்டேன்

கோஷ்டமுடன் வந்து விட்டேன் உபேக்ஷை அன்றி என்னைக்காரும்
சற்குருவே உபாயம் வேறறியேன் உந்தன் கருணைக்கு
பாத்திரனாக்கிக்கொள்வீர் கோரும் வரம் இதுவே கல்யாணி
குலங்கள் கடைத்தேரு மார்க்கமிதுவே சன் மார்க்கமிதுவே

சதாசிவம் வந்தவழியே வந்தேன் ஜெகமெலாம் காத்திடும்
தயாநிதியே தயாநிதியே சாந்தசற்குணமூர்த்தி
சந்திரசேகரரேந்திர சரஸ்வதியே சரணம் சரணம்
அய்யா தருணத்தில் காத்திடும் சத்யமூர்த்தியே

மரண பயத்தால் நொந்தேன் அத்தருணத்தில் வெங்கடேசன்
அருள் புரிந்தார் பாடவும் அனுகிரகித்தார் அவர்மேல்
பாடவும் அனுகிரகித்தார் ஆதலால் தன்னைக்காண
அனுகூலமாச்சு ஆனந்தம் ஆனந்தமே

கண்டேன் சனிரசத்தை இக்கலியில் கண்டேன் கலந்து பூஜியா
விட்டால் சாந்தமாகுமோ மனம் சாந்தமாகுமோ
எந்தன் சிக்கு சிடுக்கறுத்து உந்தன் சீர்பாத கமலத்தை
தந்தருள்வீர் தந்தருள்வீர்

பக்குவ ஞானிகட்கு நின்று உள்ளமதில் விளையாடும் நிற்குண
மூர்த்தி நிற்குணமூர்த்தி உம்மிட நேர்த்தியை என்ன சொல்
வேன் பலபிராப்தம் உள்ளோர்க்கு கிட்டுமிக்கனி கிட்டுமிக்கனி

முப்பொருளை விளக்கி மூலமந்திரம் தன்னை எடுத்துரைத்து
தன்னுடன் தான் கலந்து தன்மயமாய் தாண்டவம் ஆடிடு
தாண்டவமூர்த்தி தாண்டவமூர்த்தி

16 கீர்த்தனம் ராகம் கமாஸ்: தாளம் ஆதி:
ஸுஜன ஜீவன ராமா என்ற மெட்டு

பல்லவி: ஜென்மம் விணாகுமோ ஸற்குருவே என்னசெய்வேன்
எந்தன் (ஜெ)

அ. பல்லவி: தன்னை அன்றி நான் உய்ய உலகில் நீதியுமிலை
கியாதியுமிலை நிர்மல தேவா எந்தன் (ஜெ)

சரணம்: தன்மயமான தாரக நாம உன் தந்திரம்
என் சொல்வேன்
அண்டி[illegible]ருக்கு வரமளிக்கும் என் புண்ய மூர்த்தியே
நீர்போகும் [illegible]ர்த்தியே நீர்பார்க்கும் நேர்த்தியே
செப்பவும் எ[illegible]லை ஆகுமோ அய்யனே
அறிவிலா பே[illegible] எந்தன் (ஜெ)